


கூட்டுறவுச்
சிறப்பிதழ்








தமிழர

16-11-1986 ரூ. 1





கூட்டுறவு என்ற சொல்லில் 'கூட்டு' 'உறவு' என்று இரண்டு வார்த்தைகள் அடங்கியுள்ளன. 'கூட்டு' மட்டும் என்றால் இலாபம் மட்டும் என்றுதான் பொருள்படும். உறவு கூட்டு டன் சேர்ந்தால்தான் தோழமை யின் அடிப்படையாக - இலாப மற்ற நோக்கம் தெளிவாகிறது.

—பேரறிஞர் அண்ணா


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2017
அட்சய - கார்த்திகை 1
மலர் : 17 இதழ் : 10
16-11-1986


''கூட்டுறவு என்பது மனித னுக்கு மனிதன் தகுதியை உணர்வது மட்டுமல்ல-தரத்தை மட்டுமல்ல—அவர்களை மதிக்கக் கூடிய பணியைப் பெறுவது மட்டுமல்ல-தங்களுக்கு முடி வதை - பிறர் இயலாமையை எண்ணி அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய அந்த எண்ணமே கூட்டுறவியக்கத்தின் அடிப் படை மூலதனமாகும்.''

—மாண்புமிகு முதல்வர்
டாக்டர் எம்.ஜி.ஆர்





# வாட்டம் போக்கும் கூட்டுறவு

மாண்புமிகு நிதி மற்றும் கூட்டுறவு அமைச்சர் டாக்டர் நாவலர்

**திரு. இரா. நெடுஞ்செழியன்**

உயிரினங்களிலேயே சிந்திக்கத் தெரிந்த இனமும், சிந்தித்ததைச் செயற்படுத்திக் காட்டும் திறன் கொண்ட இனமும், கூடிவாழும் தன்மை கொண்ட இனமும், கூட்டு முயறசியால் வளரும் இன்மும் மனித இனம் மட்டுமேயாகும்.

கூட்டு வாழ்க்கையில் ஒவ்வொருவரும் எல்லோருக்குமாகப் பாடுபட வேண்டும்; எல்லோரும் ஒவ்வொருவருக்காகவும் பாடுபட வேண்டும். மக்களின் கூட்டு முயற்சியும், கூட்டு ஒத்துழைப்பும் கூட்டு உற்பத்தி - கூட்டு விற்பனை - கூட்டுவிநியோகம் - கூட்டு நுகர்வு ஆகியவற்றிற்கு வழிகோலுகின்றன. இந்தத் தத்துவத்தைத்தான் ''கூட்டுறவு'' எனனும் சொற்றொடரால் குறிப்பிடுகிறோம்.

மக்கட் சமூகத்திடையே ஜனநாயகப் பண்பு வளர, சமதர்ம உணர்வு மலர, சமத்துவ முறை ஓங்க, கூட்டுறவு இயக்கம் பெருந்துணை புரிகிறது. தனி மனிதனின் சுரண்டலைத் தடுக்க, இலாபத்தைப் பரவலாகப் பலர்க்கும் பங்கீடு செய்ய, விலைவாசிகளைக் கட்டுப்படுத்த, நியாயமான விலைகளை நிலைநாட்ட, தொழிலை வளர்க்க, உற்பத்தியைப் பெருக்க, வாணிகத்தைவளர்க்க, வருவாயைத் திரட்டப் பாமர மக்களுக்கு உறுதுணையாக அமைவது கூட்டுறவு அமைப்பேயாகும்.

கூட்டுறவு இயக்கம் சென்ற ஒரு நூறாண்டு காலத்திற்கு மேலாக உலகெங்கிலும் உள்ள எல்லா நாடுகளிலும் வேரூன்றத் தொடங்கி, இன்று பல நாடுகளிலும் ஆலமரம் போல் தழைத்தோங்கி வளர்ந்து, கிளைகளைப் பெருக்கி, விழுதுகளை விட்டு வலிவோடு திகழகின்றது. ஆலந்து, பெல்சியம், நார்வே, சுவீடன், சுவிட்சர்லாந்து போன்ற சிறுசிறு நாடுகள் கூட்டுறவுக் கொள்கையைக் கடைப் பிடித்துப் பொருளாதாரத்திலே செழிப்பு மிக்க நாடுகள் என்று போற்றிப் புகழுகிற அளவுக்குச் சிறந்தோங்கி நிலைத்து நின்று வாழ்கின்றன.

கூட்டுறவுக் கொள்கைகளுக்குப் பொலிவும், வலிவும் ஊட்டும் வண்ணம் செயல்பட்டு வருபவை கூட்டுறவு நிறுவனங்களே யாகும். கூட்டுறவு நிறுவனங்கள், மக்கள் வாழ்வில் ஏற்படும் பொருளாதாரச் சிக்கல்களுக்கெல்லாம் தீர்வு காண்கின்றன என்பது மட்டுமல்லாமல், சமூக முன்னேற்றத்திற்கு உறுதுணையாகவும் அமைகின்றன.

மலைவாழ் மக்களுக்கு நுகர்பொருள் வழங்குதல்





மக்களின் இன்றியமையா அடிப்படைத் தேவைகள் உண்டி-உடை-உறைவிடம் ஆகியவையாகும். இவற்றையெல்லாம் தங்கு தடையின்றி உற்பத்தி செய்யவும், பெறவும், நகரவும் வேளாண்மை — மீனளம்-நெசவு-கட்டுமானப்பொருள்கள் உள்ளிட்ட பல்வேறு தொழில்களைச் செய்யவும் கூட்டுறவு எல்லா வகையிலும் கைகொடுக்கிறது என்பது எல்லோரும் அறிந்த ஒன்றாகும்.

தமிழகத்தில், கூட்டுறவு இயக்கம், பல ஆண்டுக்காலமாகச் சிறப்பாக வேரூன்றிப், பல்வேறு துறைகளிலும், நல்ல பலன்களை அளித்துக்கொண்டு வருகின்றது.

பெருளாதாரத்தில் முதுகெலும்பு போன்றது வேளாண்மைத் தொழில். அதற்குத் தேவையான கடன், தரமான விதைகள், உரம், பூச்சி மருந்து போன்றவைகளையும் பயிர்த் தொழிலுக்குத்தேவையான உதவிகள் அனைத்தும் செய்ய 4700 கிராம வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களின் மூலமாக நடப்பு ஆண்டில் உழவர்களுக்கு ரூ. 180 கோடி குறுகிய கால, மத்திய கால உழவர் பயிர்க் கடனாகவும், ரூ. 20 கோடி நீண்ட காலக் கடனாகவும் வழங்கத் திட்டமிடபபட்டுள்ளது. இன்றைய நிலையில் தமிழகத்தில் உள்ள வேளாண்மைக் குடும்பங்களில் முக்கால் பங்குக்கு மேல் வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர். அவர்களில் பெரும்பகுதி சிறிய மற்றும் மிகச் சிறிய வேளாண்மைக் குடும்பங்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆறாவது திட்டக்கால இறுதியில் தமிழகத்தில் உள்ள மொத்த வேளாண்மைக் குடும்பங்களில் 85.6 சதவித குடும்பங்கள் கூட்டுறவு இயக்கத்தில் கொண்டு வரப்பட்டுள்ளன். அவர்களில் 83 சதவீதம் சிறிய மற்றும் மிகச் சிறிய விவசாயக் குடும்பத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒருவரை உறுப்பினராக்குவதன் மூலம் ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த 90,000 குடும்பங்கள் இதுவரை கூட்டுறவுச் சங்கங்களில்சேர்க்கப்பட்டுள்ளார்கள். நடப்பு ஆண்டில் மேலும் 10,000 பேர் சேர்க்கப்படவுள்ளார்கள்.

**'லாம்ப்' சங்கத்தில் புளி சேகரித்தல்**





**கூட்டுறவு நகர வங்கிகள் சிறுதொழில் புரிய கடனுதவி செய்கின்றன.**

''வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்'' என்றார் வள்ளலார். உழவுத் தொழிலுக்குக் குறைந்த வட்டியில் உழவர்களுக்குக் கடன் வழங்கியது மட்டுமின்று, உழவர்கள் இடர்ப்பட்டுத் தவத்து நின்றபோது, சாதாரண வட்டி தள்ளுபடி, அபராத வட்டி தள்ளுபடி, வட்டியில் சலுகை போன்ற பல்வேறு சலுகைகளை ரூ. 125 கோடி அளவுக்கு உழவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வா புரட்சித்தலைவர் அவர்கள் குறிப்பறிந்து வழங்கியிருக்கிறார்கள். 30.6.86ல் கடன் தொகை முழுவதையும் கட்டியவர்களுக்கு வட்டி, அபராதவட்டி மற்றும் கூடுதல் வட்டி முழுமையும் திருப்பிச் செலுத்தப்படும். இதனால், ரூ. 19 கோடி சலுகை கிடைக்கும்.

மேற்கண்ட இவற்றால் உழவர்களின் கடன் சுமை குறைகிறது. கவலையை மறந்து புதிய வாழ்வைத் தொடர வழி ஏற்படுகிறது. வருங்காலத்தில் கடன் பளுவே இல்லாதபடி புதிய பயணத்தை உழவர் மேற்கொள்ள முடியும்.

கிராம வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் மாநில மத்திய வங்கிகளின் கிளைகள், கூட்டுறவு நகர வங்கிகள், அவற்றின் கிளைகள் ஆகிய 2,114 கூட்டுறவு நிறுவனங்கள் நகைக் கடன்கள் வழங்குகின்றன. 1985-86ல் ரூ. 290 கோடி அளவிற்கு நகைக்கடன் வழங்கப்பட்டது. இதனால் சுமார் 13 இலட்சம பேர் பலனடைந்துள்ளார்கள். நடப்பு ஆண்டில் ரூ. 300 கோடி கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் கூட்டுறவு நிறுவனங்கள் நலிந்த பிரிவினரின் அவசரக் கடன் தேவைகள் நிறைவு செய்யப்படுகின்றன.

நகர்ப்புற மக்களுக்கும், நகரை ஒட்டியுள்ள முக்கிய மக்களுக்கும் குறுகிய, மத்திய காலக் கடன்களையும வங்கி வசதிகளையும் 133 நகர வங்கிகள் அளித்து வருகின்றன. மேலும், குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில்களுக்கு நிதியுதவியும் குறைந்த வட்டியில் செய்து வருகினறன.

சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் வருமானத்தையும் வாழ்க்கைத்தரத்தையும்




விவசாய இடுபொருள் விற்பனை நிலையம் மூலம் உரம் பெறுதல்.

உயர்த்துவதற்காக, ரிசர்வ் வங்கியின் வழி முறைப்படி நகர வங்கிகள் வழங்கும் கடனில் 60 சதவீதம் குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில் புரிபவர்களுக்கு வழங்கப்படுகிறது. 1986-87ஆம் ஆண்டில் சுமார் ரூ. 5 கோடி அளவுக்கு இத்தகைய கடன் வழங்கத் திட்ட மிடப்பட்டுள்ளது.

வேளாண்மை விளை பொருட்களை விற் பனை செய்வதில் உழவர்களுக்கு உதவி செய்து வருவதில் 144 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஈடுபட்டுள்ளன. இவைகள் 1985-86ல் சுமார் ரூ. 145 கோடிக்கு விளைபொருட்கள் விற் பனை செய்தன. நடப்பு ஆண்டில் சுமார் ரூ. 135 கோடியளவுக்கு விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

மக்களுக்கு வீட்டுக்கு வேண்டிய அன்றாடத் தேவைகளைத் தரமாகவும், சரியான எடை அளவிலும், நியாய விலையிலும் வழங்கும் பணியில் 3848 ஆரம்பக் கூட்டுறவுப் பண்டக சாலைகள் ஈடுபட்டுள்ளன. அவை கிராமப் புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் செயல்பட்டு வருகின்றன. 1985-86ல் இந்த நிறுவனங்கள் ரூ. 605 கோடி அளவுக்கு நுகர்பொருளை விற்பனை செய்துள்ளன. மாணவ மணிகள் இன்றைய அரும்புகள், நாளைய மலர்கள். அவர் களுக்குப் பாட நூல்கள், குறிப்பேடுகள் மற்றும் எழுது பொருட்கள் வழங்கும் பொருட்டு 3039 பண்டகசாலைகள், கல்லூரி களிலும், உயர் நிலைப்பள்ளிகளிலும் செயல் பட்டு வருகின்றன. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் 1986-87ல் ரூ. 500 கோடி மதிப் புள்ள பொருள்களை விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் ஆண்டுக்கு ரூ. 5 கோடிக்கு மேல் விற்பனை செய்யும் 34 பெரிய நுகர் வோர் கூட்டுறவு நிறுவனங்களில் 17 தமிழ் நாட்டில் உள்ளன. அவற்றில் முதல் 10 நிறு வனங்களில் தமிழ்நாட்டில் மட்டும் 6 நிறு வனங்கள் உள்ளன. இந்தியாவில் நுகர்வோர் கூட்டுறவு அமைப்பில் வட ஆர்க்காடு மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்தப் பண்டகசாலை இரண்டாவது இடம் வகிக் கிறது. இது தமிழகத்துக்கே பெருமை தருவ தாகும். கிராமங்களில் உள்ள மக்களுக்கு இன்றி யமையாப் பண்டங்களைச் சீராக வழங்குவ தற்கு 12600 கிராமக் கூட்டுறவு அங்காடிகள் அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின் றன. இந்த அங்காடிகள் மூலம் 1985-86ல் சுமார் 199 கோடி ரூபாய்க்குப் பண்டங்கள் விற்பனை செய்யப்பட்டன.

நுகர்வோர் தமக்கு வேண்டிய பொருட் களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வசதியாக 14 இடங்களில் சுயசேவைப் பிரிவுகள் துவக் கப்பட்டுள்ளன.

''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்''-என்றார் பேரறிஞர் அண்ணா. அதற்கேற்ற பணிகளைப் புரிய சலவைத் தொழிலாளர்கள், மலைச் சாதியினர் போன்ற நலிந்த பிரிவினரின் நலன் காக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிவரு கின்றன. சைக்கிள் ரிக்ஷாக்காரர்கள் மோட் டார் பொருத்திக்கொள்ள உதவி செய்யக் கட னாகவும், மானியமாகவும் நிதியுதவி செய்யப் படுகிறது. உடல் ஊனமுற்றோருக்கும் உதவுவ தற்காக ஐந்து கூட்டுறவுச் சங்கங்கள் அமைக் கப்பட்டுள்ளன. மலைவாழ் பழங்குடியினரின் இருண்ட வாழ்வில் ஒளியேற்ற 13 பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயக் கடனுதவி, நுகர்பொருள் வழங்குதல், விற் பனை போன்ற பணிகளைச் செய்து வரு கின்றன.

நாட்டில் கூட்டுறவின் பணிகள் இல்லாத இடம் இல்லை. சமூகத்தில் அருகுபோல் வேரூன்றி ஆல்போல் தழைத்து அன்றாட வாழ் வில் கூட்டுறவியக்கம் ஒன்றிவிட்டது. கூட்டுறவு வெறும் தத்துவம் என்று இருந்த காலம் மாறி- வாழ்க்கை நெறி என்ற நிலை உருவானதற்கு அன்றாட வாழ்வில் கூட்டுறவின் பணிகள் உண்டாக்கிய மாற்றமே காரணம். படித்து வேலைகிடைக்காத இளைஞர்களுக்குச் சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதற்கான கடன்களை வழங்குவதற்குத் தனிவகைக் கூட் டுறவுக் கடன் சங்கம் ஒன்று சென்னையில் நிறுவப்பட்டுள்ளது. பிற மாவட்டங்களிலும் இதுபோன்ற அமைப்புக்களை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வேலையில்லாப் பொறியாளர்களுக்குச் சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் நோக் குடன் வேலையில்லாத பொறியியல் பட்ட தாரிகளுக்கும் டிப்ளமாதாரர்களுக்கும் கட்டு மானக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று சென்னை யில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

''எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான இடம் நோக்கிச் செல்கின்றது இந்த வையம்''

என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பாடிய வாறு, அந்தப் புதிய உலகு நோக்கிப்பயணம் செய்ய ஏற்ற வழி கூட்டுறவாகும்!

''கூட்டுறவு என்பது மனிதனுக்கு மனி தன் தகுதியை உணர்வது மட்டுமல்ல-தரத்தை மட்டுமல்ல-அவர்களை மதிக்கக்கூடிய பணி யைப் பெறுவது மட்டுமல்ல-தங்களுக்கு முடி வதைப் பிறர் இயலாமையை எண்ணி அவர் களுக்கு உதவி செய்யக்கூடியதும் ஆகும். அந்த எண்ணம் கூட்டுறவியக்கத்தின் அடிப்படை மூல தனமாகும்''-என்ற மாண்புமிகு தமிழக முதல் வர் புரட்சித்தலைவர் அவர்கள் கூறிய பொன் மொழியை நினைவிற்கொண்டு ஏற்றத்தாழ் வற்ற புதிய சமுதாயம் உருவாக்கும் பணியில் நாம் கூட்டுறவு முயற்சியில் முழுமூச்சுடன் இறங்குவோமாக!

# புகழ் பரப்பும் பால் பெருக்குத் திட்டங்கள்

பால்வளத்தில் இன்று தமிழகம் முன்னணிக்குச் சென்று கொண்டிருக்கிறது. அதன் பின்னணி என்ன? ஒன்றன்பின் ஒன்றாகப் பால் பெருக்குத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அதன் காரணமாக அங்கிங்கெனாதபடித் தமிழ் நிலம் எங்கும் பால்வளம் சிறக்கக் காணுகின்றோம்.

நமது மாநிலத்தில் பால் பெருக்குத்திட்டம் 1972-ஆம் ஆண்டு முதல் கட்டமாக 9 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. (1. செங்கல்பட்டு, 2. வடஆர்க்காடு, 3. தென் ஆர்க்காடு 4. தர்மபுரி, 5. சேலம், 6. பெரியார் 7. கோயம்புத்தூர், 8. நீலகிரி, 9. மதுரை). இத்திட்டத்தின் முதல் கட்டத்திற்கு ரூ. 15.62 கோடி செலவிடப்பட்டது. இத்திட்டத்தின் முதல் கட்டம் 1982 மார்ச் மாதத்தில் முடிவடைந்தது.

இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தும் வகையில் 1982-ஆம் ஆண்டு பால் பெருக்குத் திட்டம் (2ஆம் நிலை) ரூ. 42.87 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. தற்போது தமிழ்நாட்டில் மொத்தம் 13 மாவட்டங்களில் பால் பெருக்குத் திட்டம், தேசிய பால் பண்ணைக் கழகம் மற்றும் இந்தியப் பால் பண்ணைக் கழகத்தின் நிதி உதவியுடன் 56.89 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல் படுத்தப்பட்டு வருகின்றது.

எஞ்சியுள்ள 5 மாவட்டங்களான இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராசர், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மத்திய அரசு மற்றும் மாநில அரசு உதவியுடன் பால் பெருக்குத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

பால் பெருக்குத் திட்டங்களைப் பாங்குடன் நிறைவேற்ற மூன்றடுக்கு நிர்வாக முறை பயன்படுகிறது.

கிராம அளவில், பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மாவட்ட அளவில், ஒன்றியங்கள் மாநிலம் முழுமைக்கும் சேர்ந்து, ''பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்'' என மகிழ்ச்சியுடன் கூறலாம். திட்டங்களை நிறைவேற்றுவதில் மற்ற மாநிலங்களுக்கு நாம் முன்னோடியாகயிருந்து வருகின்றோம்.

**க. கலைமணி**
தலைவர்,
தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம்.

தமிழ்நாட்டில் மொத்தம் 91 கால்நடை மருத்துவ அமைப்புகள் உள்ளன. (பால் பெருக்குத் திட்டம் செயல்படும் 13 மாவட்டங்களில் 85 கால்நடை மருத்துவ அமைப்புகளும், இதர 5 மாவட்டங்களில் 6 கால்நடை மருத்துவ அமைப்புகளும் உள்ளன). இதில் 29 அவசர அமைப்புகளாகவும் மற்றவை நடமாடும் அமைப்புகளாகவும் உள்ளன.

1985-86ஆம் ஆண்டு 7,54,980 கால்நடைகள் மருத்துவ வசதி அமைப்பின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. 4,58,032 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

கால்நடை மருத்துவத் திட்டத்தில் உயர்ரகக் காளைகளின் விந்துகளிலிருந்து உயர்ரகக் கறவை மாடுகளை உருவாக்கி வளர்ப்பது ஒரு முக்கிய அம்சமாக உள்ளது. வெகு தூரத்திலுள்ள கிராமங்களுக்கு உயர்ரகக் காளைகளின உறைவிந்தை எடுத்துச் சென்று கலப்பின உயர்ரகக் கால்நடை வளர்ச்சிகாண்பது இன்று தமிழகமெங்கும் ஒரு நடைமுறைச் சாத்தியமாகிவிட்டது. இரண்டாவது பால் பெருக்குத் திட்டங்கள் செயல்படும் 13 மாவட்டங்களில் 1,727 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் செயற்கை முறைக் கருத்தரிப்புப் பணி நடந்து வருகின்றது.

மாதவரம் பால் பண்ணை மற்றும் ஆம்பூரிலுள்ள கால்நடை தீவன ஆலைகள் ஒவ்வொன்றும் தற்போது மாதமொன்றுக்குச் சராசரி 1,490 டன் கால்நடை தீவனம் உற்பத்தி செய்கின்றன.

ரூபாய் பத்து இலட்சம் செலவில் குளிகை வடிவில் தீவனம் தயாரிக்கும் ஆலை மாதவரத்தில் நிறுவப்பட்டுள்ளது. இதைத் தவிர தென் மாவட்டங்களின் தேவைக்கேற்ப ஒரு புதிய கால்நடை தீவன ஆலை ஒரு நாளைக்கு 100 டன் தீவன உற்பத்தி செய்கின்ற வகையில் மதுரையில் துவங்கப்படும்.

தேசியப்பால்பண்ணைக்கழகம் தொடர்பான பால் பெருக்குத் திட்டங்கள் மட்டுமின்றி, தமிழகத்தில் பால் பண்ணை அபிவிருத்தித் துறையினால் செயல்படுத்தப்படும் திட்டங்கள், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள், வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டங்கள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்கள், ஆதிதிராவிட நலத்திட்டங்கள் கீழ், பால் பெருக்குப் பணிகள் தமிழகமெங்கும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இன்று நுகர்வோர்களுக்குத் தரமான பால் நியாயமான விலையில் கிடைக்கின்றது. உற்பத்தியாளர்களுக்கு ஆண்டு முழுமைக்கும் பாலுக்கு நல்ல விலை தரப்படுகின்றது.

பொன்மனத் தலைவர் ஆட்சியில் புகழ்பரப்பும் வகையில் பால் பெருக்குத்திட்டங்கள் தமிழகத்தில் பயன தரத் தொடங்கிவிட்டன. வெண்மைப்புரட்சியும், தமிழகத்தில் அதனால் விளைந்திட்ட நன்மைகளும் நாடறிந்த உண்மையாகிவிட்டன.





# நலிந்தோர்க்குக் கூட்டுறவு

**ஆர். சந்தானம், இ.ஆ.ப.,**
**கூட்டுறவுச்சங்கங்களின் பதிவாளர்**

நலிவடைந்த மக்களினம் நன்மைபெற, கூடிநின்று பொலிவு பெறச் சேருகின்ற அமைப்பு-இது பொது நலமே காணுகின்ற அமைப்பு. ஒருவரோடு மற்ற வரும் ஒன்றுபட்டு உழைத்திட லாம்; உயர்வதற்கு வழிவகுக்கும் இயக்கமே,இதில் ஒன்று சேர வரு வதென்ன தயக்கமே.

ஆம். சமுதாயத்தில் நலி வடைந்த மக்கள் தங்களுடைய பொருளாதாரத்தையும், வாழ்க் கைத் தரத்தையும் உயர்த்திக் கொள்ளத் தாங்களாகவே முன் வந்து ஒன்று சேர்ந்து அமைத்துக் கொள்ளும் அமைப்பு தான் கூட் டுறவு இயக்கம்.

கடந்த 80 ஆண்டுகளுக்கு மேல் சமுதாயத்திலுள்ள அனைத்துத் தரப்பு மக்களுக்கும்-குறிப்பாக நலிவடைந்த பிரிவின ரான ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினர்க்குக் கூட்டுறவு இயக்கம் ஆற்றிவரும் தொண்டு மகத்தா னது.

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நாபார்டு) வகுத்துள்ள வழிமுறைகளின்படி வழங்கப்படும் மொத்த குறுகிய காலக் கடன்களில் 20% நலிந்த பிரிவினருக்கு, அதாவது ஐந்து ஏக்கர் அல்லது அதற்குக் குறை வான நிலங்களைச் சொந்தமாக வைத்திருப்பவர்களுக்கு அல்லது குத்தகைக்குப் பயிரிடுபவர்களுக்கு வழங்கப்படவேண்டும். மொத்தக் கடன் பட்டுவாடாவில் குறைந் தது 50%க்கு நலிந்த பிரிவினரின் பங்கை அகில இந்திய ரீதியில் உயர்த்த வேண்டும் என்பது ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத் தின் கீழ் கொள்கை அளவிலான நோக்கமாகும். ஆறாவது ஐந் தாண்டுத் திட்டக் காலத்தின் இறுதியில் தமிழ்நாட்டில் உள்ள விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் நலிந்த பிரிவினருக்கு வழங்கிய கடன் அளவு சிறப்பரனது

இவ்வகையில் தேசிய வேளாண் வங்கி நிர்ணயித்துள்ள இலக்கை விடக் கூடுதலாக அடைந்து, கூட் டுறவுச் சங்கங்கள் சாதனை புரிந் துள்ளன.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் முதலாண்டில் அதா வது 1985-86ல் குறுகிய காலக் கடன்களில் 54 சதவிகிதமும், மத் தியக் காலக் கடன்களில் 90 சத விகிதமும், நீண்ட காலக் கடன் களில் 42 சதவிகிதமும் நலிந்த பிரிவினர்களுக்கு வழங்கப்பட் டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டில் நலிந்த பிரிவினருக்கான பங் கினைக் குறுகிய காலக் கடன் களில் 66 சதவிகிதமும், மத்தியக் காலக் கடன்களில் 89 சதவிகித மும், நீண்ட காலக் கடன் களில் 50 சதவிகிதமும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ் வாறாகக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் கடன்களில் கணிசமான அளவிற்கு நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பெற்று அவர்கள் வாழ்க் கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

### ஆதிதிராவிட வகுப்பினர்களுக்குக் கடன் வழங்குதல்

தற்போது வழங்கப்படும் குறு கிய காலக்கடன்களில் 5 சதவிகித மும், மத்தியக் காலக் கடன்களில் 16 சதவிகிதமும, நீண்ட காலக் கடன்களில் 4 சதவிகிதமும், ஆதி திராவிட மற்றும பழங்குடி வகுப் பைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றன.

1986-87ஆம் ஆண்டில் இவ் வகை உறுப்பினர்களுக்கு வழங் கப்படும் கடனின் அளவு குறுகிய



துடியலூர் விவசாயக் கூட்டுறவுச் சங்கத்தில் பஞ்சு தரம் பிரிக்கப்படுகிறது.

காலக் கடன்களில் 8.8 சதவிகிதமாகவும், மத்தியக் காலக் கடன்களில் 18.2 சதவிகிதமாகவும், நீண்ட காலக் கடன்களில் 8.8 சதவிகிதமாக்வும் உயர்த்தப்படும்.

விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களில் ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த உறுப்பினர்களை அதிகமாகச் சேர்க்கும் பொருட்டு தமிழக அரசே ஒரு நபருக்கு ரூ.100 மானியமாக வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆறாவதுஐந்தாண்டுத்திட்டகாலத்தில் 90,000 ஆதிதிராவிட உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர். 1985-86ஆம் ஆண்டு மேலும் 10,000 உறுப்பினர்கள் இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டனர். ஆக, திட்டம் ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 1985-86 வரை அரசு பங்குத் தொகையாக ஒரு கோடி ரூபாய் அளித்துள்ளது.

மேலும் விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ள ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த உறுப்பினர்கள் தேவையான அளவிற்குக் கடன்களைப் பெறுவதற்காக, கூடுதல் பங்குத்தொகை செலுத்துவதற்கும், உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் 250 ரூபாய் வீதம் வட்டியில்லாக் கடனாக வழங்கப்படுகிறது. 1985-86ஆம் ஆண்டில் 2.59 இலட்ச ரூபாய் அளவிற்குக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. 1986-87ஆம் ஆண்டில் இவ்வகை உறுப்பினர்களில் 1250 பேர் இத்திட்டத்தின் கீழ் உதவி பெறுவர்.

கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்பட்டதால், நிறுவன அமைப்பில்லாத தனியார் நிறுவனங்களிடமிருந்து கடன் கிடைப்பது அரிதாகியதால் ஏற்பட்டுள்ள நிதித் தேவைகள் நகையீட்டின் பேரில் அளிக்கப்படும் கடன்கள் மூலம் பூர்த்தி செய்யப்படுகின்றன. 1985-86ஆம் ஆண்டில் 2114 கூட்டுறவு அமைப்புகள் மூலம் 13.01 இலட்ச நபர்களுக்கு ரூ. 289.82 கோடி ரூபாய் அளவிற்கு நகைக்கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு வழங்கப்பட்ட நகையீட்டுக் கடன்கள் எப்பொழுதும் இல்லாத அளவிற்கு அதிகமாக வழங்கப்பட்டுள்ளன.

1986-87ஆம் ஆண்டில் 300 கோடி ரூபாய் அளவிற்கு நகைக் கடன்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் அவசர நிதித் தேவைகளை நகைக்கடன்கள் வழங்குவதன் மூலம் பயன் விளையத்தக்க வகையில் பூர்த்தி செய்து வருவதன் வாயிலாக அவை சமுதாயத்தில் பின்தங்கிய பிரிவினரின் - குறிப்பாகக் கிராமங்களில் உள்ள வேளாண்மைச் சமுதாயத்தின் நலன்களைப் பாதுகாப்பதில் முக்கிய பங்கை ஆற்றி வருகின்றன.

ஆண்டொன்றுக்கு 4 சதவிகிதத்தில், தொழிற் கடன்களை நலிந்த பிரிவினர்களுக்கு மத்தியக் கூட்டுறவு வங்கிகள், உழவர் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் தொடர்ந்து வழங்கி வருகின்றன. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி அங்கீகரித்துள்ள 22 வகையான சிறு தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்களில் ஏதேனும் ஒன்றை மேற்கொள்ள எல்லா வகையிலும் ஆண்டு வருவாய் ஊரகப் பகுதிகளில் 2,500 ரூபாய்க்கும், ஓரளவு நகர்ப்புறங்கள் மற்றும் நகரங்களில் 3,000 ரூபாய்க்கும் மேற்படாமல் உள்ளவர்களுக்கு இக்கடன் வழங்கப்படுகின்றது.

இக்கடன் நபர் ஜாமீன் பேரில் ஒருவருக்கு நிரந்தர மூலதனச் செலவிற்காக 5,000 ரூபாயும், நடைமுறை மூலதனச் செலவிற்காக 2,000 ரூபாயும் ஆக மொத்தம் 7,000 ரூபாய் வரையில் வழங்கப்படுகிறது. இத்தகைய கடன்கள் 1985-86ஆம் ஆண்டில் 191.98 இலட்ச ரூபாய் அளவிற்கு வழங்கப்பட்டுள்ளன. இத்தகைய கடன்களைச் சமுதாயத்தின் நலிந்த பிரிவினர்களுக்கு 1986-87ஆம் ஆண்டிலும் மேற்குறிப்பிட்ட கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்ந்து வழங்கும்.

சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் வருமானத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதன் மூலம் நியாயமான வினியோக முறை உறுதி செய்யப்பட வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தை வங்கிகள் நிறைவேற்றுவதற்கு ஏதுவாக, கூட்டுறவு நகர வங்கிகள் வழங்கும் கடன்களில் 60 சதவிகிதம் குடிசைத் தொழில் மற்றும் சிறுதொழில்கள் உள்ளிட்ட முதன்மைப் பிரிவிற்குச் சேர வேண்டும் என்று இந்திய ரிசர்வ் வங்கி வழிமுறை

களை வகுத்துள்ளது. எனவே தமிழகத்தல் செயல்படும் 135 கூட்டுறவு நகர வங்கிகள், குடிசைத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்களுக்காக வழங்கும் கடனளவை 1986-87ஆம் ஆண்டில் 5 கோடி ரூபாய்க்குக் குறைவில்லாமல் உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

மகளிர் நலனுக்காகவும், கூட்டுறவுச் சங்கங்கள் பணிபுரிகின்றன. விதவைகள் உட்பட நலிந்த பிரிவைச் சார்ந்த மகளிரும் குடிசைத்தொழில்களைமேற்கொண்டு, தம் வருவாயை அதிகரித்துக் கொள்ள ஏதுவாக சென்னை மற்றும் கோயம்புத்தூரில் மகளிர் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்களின் சிரமத்தைக் குறைத்து ஊதியத்தைப் பெருக்கும் வகையில் சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார் பொருத்திக் கொள்ள உதவும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுகாறும் 217 சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள் பயன் அடைந்துள்ளனர். இவர்கள் ரிக்ஷாக்களில் மோட்டார் இயந்திரம் பொருத்திக் கொள்ள 2.15 இலட்ச ரூபாய்க்கு அரசு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்றோர் நலன் கருதி உடல் ஊனமுற்றோர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆறு ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மாவட்ட சமூக நல அலுவலர்களுடன் கலந்தாலோசித்து, சங்கங்களின் உறுப்பினர்களுக்குப் பயனுள்ள வேலைகளைத் தரக் கூடிய பணிகளை ஏற்று நடத்துவதற்கு ஏதுவாக இவை அமையும். இச்சங்கங்களின் நிதிநிலையை மேம்படுத்த இதுகாறும் 4 சங்கங்களுக்குத் தலா அரசு பங்கு மூலதனமாக ரூ. 50,000 வழங்கியுள்ளது. மேலும் இரண்டு சங்கங்களுக்கு 1986-87 ஆம் ஆண்டில் நிதியுதவி வழங்கப்படும்.

மாநிலத்தில் 13 பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 44,530 உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகின்றன. இச்சங்கங்கள் தமது விவகார எல்லைகளில் உள்ள எல்லாப் பழங்குடியினர் குடும்பங்களையும் உறுப்பினர்களாக்கியுள்ளன. பழங்குடியினரின் நலிந்த பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு அரசு இச்சங்கங்களுக்கு நிதியுதவி அளித்து வருகிறது. 1.4.1985 முதல் இச்சங்கங்கள் பழங்குடியினர் உறுப்பினர்களுக்கு வட்டியில்லாக் கடன்களை வழங்கி வருகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் சீரிய முறையில் சமூகப் பணிகளையும் புரிந்து வருகின்றன. இரத்த வங்கிக்கு மனமுவந்து இரத்ததானம் செய்தல், உடல் ஊனமுற்றோருக்குச் சக்கர நாற்காலி போன்ற துணைக்கருவிகளை வழங்குதல், ஏழை மகளிருக்குத் தையல் இயந்திரங்களைக் கொடுத்தல், தமிழ்நாடு சட்ட உதவி மற்றும் ஆலோசனை வாரியத்துக்கு நன்கொடை வழங்குதல், இலங்கைத் தமிழர் நிவாரண நிதிக்கு நன்கொடை வழங்குதல், முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்திற்கு நன்கொடை வழங்குதல் போன்ற மதிப்பு மிக்க சமூக சேவைகளையும் புரிந்து வருகின்றன.

நலிந்தோர் கடன் உதவி பெற்ற கல் உடைக்கும் தொழிலாளி.






முழு விவரங்களுக்கு, அருகிலுள்ள நியூ இந்தியா ஆபீஸ் அல்லது ஏஜெண்டோடு தொடர்பு கொள்ளுங்கள்.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்

**இன்ஷூரன்ஸ் — நஷ்ட காலத்தில் நம்பகமான ஆதரவு!**



உறுப்பினர் கல்வித் திட்ட வகுப்பில் விளக்க உரை நிகழ்த்துதல்

# கூட்டுறவுக் கல்வி

மு. சுப்பையா,
தனி அலுவலர்,
தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்.

சுமார் 80 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு இயக்கம் இன்றைக்குத் தமிழ் நாட்டில் அருகுபோல் ஊன்றி ஆல்போல் தழைத்து வளர்ந்துள்ளது. விவசாயக் கடன், நகர்ப்புறக் கடன், நுகர்வோர், விற்பனைத் தொழில், கிராமியத் தொழில், மீன் வளர்ச்சி, பால் பெருக்கம், வீடுகட்டுதல் போன்ற பலவிதமான நடவடிக்கைகளுக்கும் இன்று கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டு வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

சங்க உறுப்பினர்களுக்கும், நிர்வாகஸ்தர்களுக்கும் அவர்களுடைய கடமைகளையும், பொறுப்புக்களையும் உணர்த்துவதுதான் கூட்டுறவுக் கல்வியாகும்.

ஒரு சில சமயங்களில் உறுப்பினர்கள் தங்கள் பொறுபபுக்களை உணராத காரணத்தால் சங்கத்திற்கு அவர்கள் ஆற்ற வேண்டிய கடமையிலிருந்து தவறிவிடுகிறார்கள். இதைத் தொடர்ந்து சங்கத்தின் வளர்ச்சியும் பாதிக்கப்படுகிறது. இத்தகைய ஒரு நிலை கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிலும் குறிப்பாக, கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களுக்கு ஏற்படக் கூடாதென்ற கருத்துடன் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் உறுப்பினர் கல்வித் திட்டம் என்ற திட்டத்தைப் பரீட்சார்த்தமாக 1984-ஆம் ஆண்டில் நான்கு மாவட்டங்களிலும் பின்பு 1985-ஆம் ஆண்டு முதல் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர், மாநிலப் பதிவாளர் அவர்களின் ஆலோசனைப்படி தமிழ்நாடு முழுவதும் நிறைவேற்றிக் கொண்டு வருகிறது.

இத்திட்டத்தின்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கூட்டுறவு வளர்ச்சி அலுவலர் மற்றும் கல்வி பயிற்றுநர் பணியில் அமர்த்தப்பட்டு அவர்கள் ஒவ்வொரு சங்கத்தின் உறுப்பினர்களுக்கும் மாலைவேளைகளில் மூன்று நாள் கல்வி முகாம் நடத்துகிறார்கள். இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஓர் ஆண்டிற்குள்ளாகவே சுமார் ஒரு இலட்சம் உறுப்பினர்களுக்கு மேல் இத்திட்டத்தால் பயன் அடைந்திருக்கிறார்கள்.

இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலங்களிலும் உறுப்பினர் கல்வித் திட்டம் நடைபெற்று வருகிறது என்றாலும்கூட தமிழ்நாட்டிலுள்ள திட்டத்தில் பல சிறப்பு அம்சங்கள் உள்ளன.

சங்க உறுப்பினர்களுக்குக் கூட்டுறவுப் பொருட்கள் மட்டுமின்றி அவர்களுக்குப் பயன்படக் கூடிய ஏனைய பொருட்கள் பற்றியும் உரைகள் நிகழ்த்தப் படுகின்றன. மண் பரிசோதனை செய்தல, வீரிய விதைகள் பயன்படுத்துதல், இரசாயன உரங்களைப் பயன்படுத்துதல், பயிர்கள் பாதுகாப்பு முறைகள் ஆகிய வேளாண்மைப் பொருள்கள் பற்றியும் கால்நடைகளிடையே காணப்படும் பொதுவான வியாதிகள், அதற்கு எடுக்கப் படவேண்டிய முதலுதவி, கால்நடைத் தீவனம, பால்பண்ணை அமைத்தல், கோழிப் பண்ணை அமைத்தல், மற்றும் ஆடு வளர்த்தல் போன்ற கால்நடைப் பொருட்கள் பற்றியும், குடும்பக் கட்டுப்பாடு, சுற்றுப்புறச் சூழ்நிலைகளைச் சுகாதாரத்துடன்

உறுப்பினர் கல்வித் திட்டம் – திரைப்படம் காட்டுதல்



வைத்துக் கொள்வது, குழந்தைகள் பராமரிப்பு போன்ற குடும்ப நலப் பொருட்கள் பற்றியும் விளக்கமாக எடுத்துரைக்கப்படுகின்றன.

வேளாண்மை, கால்நடை மற்றும் குடும்ப நலம் ஆகிய பொருட்கள் பற்றி, சம்பந்தப்பட்ட துறைகளைச் சார்ந்த அதிகாரிகள் எடுத்துரைக்கின்றார்கள். இந்தச் சிறப்புத் தன்மையை இந்திய அரசின் அதிகாரிகள் மற்றும் வெளிநாட்டிலிருந்து வந்த கூட்டுறவு அதிகாரிகள் ஆகியோர் மிகவும் பாராட்டியுள்ளார்கள்.


கூட்டுறவு சம்பந்தமான பல்வேறு பொருள்கள் பற்றியும், கூட்டுறவுச் சங்கங்களின் நடவடிக்கைகள் பற்றியும் விரிவாக அழகான வண்ண ஸ்லைடுகள் மூலம் காண்பிக்கப்படுகின்றன. ஒவ்வொரு ஸ்லைடும் காண்பிக்கப்பட்டவுடன் அதுபற்றிச் சில விளக்கங்களை உதவி வளர்ச்சி அதிகாரி தெரிவிப்பார். இந்த யுக்தி, உறுப்பினர் கல்வித் திட்டத்தில் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் கையாளப்பட்டு வருகிறது.

வண்ண ஸ்லைடுகள் மட்டுமின்றி, கூட்டுறவு இயக்கத்தின் பல நடவடிக்கைகள் பற்றியும் கூட்டுறவுக் கடனை உரிய காலத்தில் செலுத்த வேண்டிய அவசியம் பற்றியும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் தயாரித்துள்ள சினிமா படங்களும் ஒவ்வொரு நாளும் கல்வித் திட்ட வகுப்பில் காட்டப்படுகின்றன.

கூட்டுறவுக் கல்வியைப் போலவே கூட்டுறவுப் பயிற்சியிலும் கூட தமிழ்நாடு இதர மாநிலங்களைவிடப் பல வகையிலும் சிறந்து விளங்குகிறது.

நீண்ட காலப் பயிற்சி மட்டுமின்றி, பணியாளர்கள் அவ்வப்போது ஏற்படக்கூடிய மாறுதலைத் தெரிந்து கொள்ளும் வகையில் குறுகிய காலப்பயிற்சியும் தொடர்ந்து பெற வேண்டுமென்ற ஒரு நோக்கத்துடன் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் கூட்டுறவின் பல்வேறு துறைகளிலுள்ள அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு மூன்று தினங்கள் முதல் இரு வாரங்கள் வரையிலான குறுகிய காலப் பயிற்சிகள் நடத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் சென்னையிலும் மதுரையிலுமுள்ள கூட்டுறவுப் பயிற்சிக் கலலூரிகளுக்குச் சுமார் 8.00 இலட்சம் ரூபாய் வரை மானியமாக அளிக்கிறது.

இந்தியாவிலுள்ள ஏனைய



உதவி வளர்ச்சி அலுவலர் வகுப்பு நடத்துகிறார்

எந்தக் கல்லூரியிலுமே இந்த அளவுக்கு அல்லது இதில் கால் பாகம் கூட மாநில ஒன்றியம் அல்லது மாநிலக் கூட்டுறவுச் சங்கம் நிதியுதவி தருவதில்லை. ஒன்றியம் மட்டுமின்றி தமிழக அரசும் மதுரை கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிக்கு மொத்தச் செலவில் 25 சதவிகிதத்தைக் கொடுக்கிறது. சென்னைக் கல்லூரியில் குறுகிய காலப் பயிற்சிக்காகச் சுமார் 1.00 இலட்சம் ரூபாய் தமிழக அரசு அளித்துள்ளது. கூட்டுறவுப் பயிற்சிக்குத் தமிழக அரசு எந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுத்து இருக்கிறதென்பதனை இதன் மூலம் அறியலாம்.

இளநிலைப் பயிற்சிக்காகத் தமிழ்நாட்டிலுள்ள ஏழு கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களிலும் பொது அடிப்படைப் பயிற்சிக்கென்று நீண்ட காலப் பயிற்சி நடைபெற்று வருகிறது. இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களிலும் இந்த அடிப்படைப் பயிற்சியின் காலம் 18 வாரம் முதல் 24 வாரம் வரைதான். ஆனால் தமிழ்நாட்டில் இதன் காலவரை 36 வாரம் ஆகும். இதற்குக் காரணம், கூட்டுறவுத் துறையில் பணிக்குச் சேருபவர்கள் கூட்டுறவு பற்றிய அனைத்துப் பொருட்களையும் மிகவும் விரிவாகவும், தெளிவாகவும் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற வகையில் பாடத் திட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதே.

கூட்டுறவுப் பயிற்சி விஷயத்திலும் வெறும் விரிவுரை மூலம் மட்டுமின்றி, சில சிறப்பு யுக்திகளைக் கையாண்டும் பயிற்சியாளர்களுக்குப் பாடங்களைக் கற்றுத் தரவேண்டுமென்ற நோக்கத்துடன் ஓவர்ஹெட் புரொஜெக்டர் போன்ற நவீன கருவிகளைப் பயிற்சி நிலையங்கள் பயன்படுத்தி வருகின்றன. மேலும் கூட்டுறவுப் பாடங்களின் திட்டத்திற்கு ஒப்ப தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் பயிற்சியாளர்களுக்குப் பயன்படும் வகையில் பாடநூல் புத்தகங்கள் வெளியிட்டிருக்கிறது.

1986-ஆம் ஆண்டு ஆகஸ்டு புதுடெல்லியில் நடந்த தேசியக் கூட்டுறவுப் பயிற்சி மாநாட்டில் தமிழ்நாட்டின் இத் திட்டத்தைப் பாராட்டியது மட்டுமின்றி, இதை இதர மாநிலங்களும் செயல்படுத்த வேண்டுமென்ற ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்கள் அருகாமையிலுள்ள கிராமங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களைத் தத்து எடுத்துக் கொண்டு, இரண்டு வாரத்திற்கு ஒருமுறை அங்குச்சென்று சங்கம் வளர்வதற்கான ஆலோசனைகளைக் கூறுவதுடன், நேரடியாகவே சில நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

கூட்டுறவுக் கல்வி மூலமும், பயிற்சி மூலமும் சிறந்த உறுப்பினர்களையும், பணியாளர்களையும், கூட்டுறவு இயக்கத்திற்குத் தயார் செய்து கொடுக்கும் மிகப் பெரிய பணியில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் ஈடுபட்டிருக்கிறது. இந்தப் பணிகளை நிறைவேற்றும் முறைகளில் பல மாநிலங்களிலும் இல்லாத வகையில் சில சிறப்புத் தன்மைகளையும் பெற்றிருக்கிறது.

இத்தன்மைகள், தேசிய அளவிலுள்ள அதிகாரிகளும், இதர மாநில அமைச்சர்களும், அதிகாரிகளும் வெளிநாட்டவரும் பாராட்டும் வகையில் அமைந்துள்ளன.

கூட்டுறவு நிறுவனங்கள் ஆற்றி வரும் பணிகள், சாதனைகள், செயல் திட்டங்களை அனைவரும் அறிந்து பயன்பெறும் வகையில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் பிரச்சாரப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த வகையிலும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் பிற மாநிலங்களைவிட முன்னணியில் நிற்கின்றது என்றே கூறமுடியும்.



# கூட்டுறவில் ஒரு விடிவெள்ளி

சென்னை நகர மக்களால் எம். சி. சி. வங்கி என அன்புடன் அழைக்கப்படும் இவ்வங்கியின் துவக்கம்1930-ல் தொடங்கி, இன்று 37 கிளைகளுடன் விரிந்து 'வைர விழா' நோக்கி விரைந்து வளர்ந்து வருகிறது. நகரில் உள்ள அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நிதியுதவி செய்து வரும் எம். சி. சி. வங்கி பிரதம கூட்டுறவு சங்கங்களுக்கும் நிறைய உதவி வருகிறது. வங்கியின் பங்கு மூலதனம் ரூ. 500 இலட்சமாகும். இது தவிர தமிழ்நாடு அரசும் கூட்டுறவு வளர்ச்சிக்காக ரூ. 7.00 இலட்சம் பங்குத் தொகை வங்கியில் வைத்துள்ளது.

வைப்புகளுக்கு அதிக வட்டி தந்து நகர மக்களைக் கவர்ந்துள்ள இவ்வங்கி ரூ.56 கோடிக்கு மேல் வைப்புகள் பெற்று வளர்ந்து வருகிறது. இவ்வங்கியின் பல பெருமைமிகு திட்டங்கள், பணிகள் மூலம் சென்னை மக்கள் மட்டுமல்லாது தமிழக மக்களும் மற்ற மாநில மக்களும் எம். சி. சி. வங்கி பற்றி நன்கு தெரிந்து கொண்டுள்ளார்கள்.

வங்கி நடமாடும் கிளையொன்றை நகரில் பணியில் விட்டு பார் புகழ் கொண்டுள்ளது. பாமர மக்களிடம் இக்கிளை சுமார் 25.00 இலட்சம் வைப்புகளை ஈட்டியுள்ளது இதன் சிறப்பாகும். லாப நோக்கு ஏதுமின்றி 'சேவை' ஒன்றே குறிக்கோளாக நடமாடும் கிளை இயங்கி வருகிறது.

இத்துடன் நகரெங்கும் நிறைந்துள்ள எம்.சி.சி. வங்கிக்கிளைகள் மூலம் வங்கி துரித முன்னேற்றம் கண்டு 1986-ஆம் ஆண்டில் 48.22 சதவீதம் வைப்பு வளர்ச்சி விகிதம் பெற்று நாட்டுடைமை வங்கிகளை விடச் சிறப்புப் பெற்றுள்ளது. இதன் காரணமாகவே தமிழ்நாட்டில் உள்ள மற்றெந்த மத்தியக் கூட்டுறவு வங்கிகளையும்விட அதிக லாபம் பெற்று முதலிடத்தில் உள்ளது.

பலதரப்பட்ட மக்களும் நாடி வரும் எம். சி. சி. வங்கியில் அனைவருக்கும் ஏற்றவகையில் ஒரு வைப்புத் திட்டம் உள்ளது. குழந்தைகளுக்காக கவர்ச்சியான வட்டி விகிதத்தில் அழகிய இலவச உண்டியல் ஒன்றுடன் சேமிப்புக் கணக்கு உள்ளது. இதில் பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் கணக்குகளைத் துவக்கியுள்ளனர். இதன் மூலம் வங்கி சேமிப்புப் பழக்கத்தை இளமையிலே அவர்களுக்கு வளர்த்து வருகிறது.


வெ. மோகனகிருட்டிணன்
தனி அலுவலர்,
சென்னை மத்தியக்கூட்டுறவுவங்கி.


இதுபோல் கல்லூரியில் மாணவ மாணவியர்களுக்காகவே 'கலைமகள்' என்ற சிறப்புத் திட்டத்தினை வங்கி உருவாக்கியுள்ளது. மாதா மாதம் சேமிக்கும் பணத்தைக் கல்லூரித் திறப்பின் போது திரும்பப்பெற்றுக்கல்லூரிக் கட்டணங்களைப் பெற்றோர் சிரமமின்றிச் சமாளிக்க இத்திட்டம் பெரிதும் உதவும்.

முதியவர்களுக்காகக் கற்பகம் இரட்டை ஓய்வூதியத் திட்டம் போன்ற வசதியான திட்டங்கள் பணிஓய்வுக்காலத்திற்குப் பிறகும் நிரந்தர வருமானம் பெற உதவும் திட்டமாகும். இவை அனைத்துக்கும் மேலாக, சமீபத்தில் எம். சி. சி. வங்கியில் அறிமுகம் செய்யப்பட்ட 'வீட்டு சேவைத் திட்டம்' இல்லங்கள் அனைத்தையும் கவர்ந்து, உள்ளங்களைக் கொள்ளை கொண்ட திட்டமாகும்.


இதன் மூலம் ரூ. 500 தொடர்ந்து கணக்கில் வைத்துள்ள ஒரு வாடிக்கையாளர் தனது இல்லக்கிழத்தியோ, தானோ நேரில் சென்று செலுத்த வேண்டிய நானாவிதக் கட்டணங்களையும் வங்கி மூலமே நிறைவேற்றிக் கொள்ள இயலும். உதாரணமாக, மாதாமாதம் செலுத்திப்பெறவேண்டிய ஆவின் பால் அட்டைகள், பேருந்து சீசன் டிக்கட்டுகளை வங்கி பெற்றுத்தரும். மேலும், வீட்டு வசதி வாரியப்பராமரிப்பு மற்றும் தவணைத் தொகைகள், தண்ணீர் வரி, மின்சாரக் கட்டணம், பள்ளி, கல்லூரிக்கட்டணங்களைவங்கியே செலுத்தி வாடிக்கையாளர் சிரமங்களைக் குறைக்கிறது. இந்த அரிய சேவையை அனைவரும் பாராட்டுகின்றனர்.

இத்துடன் கடன் வசதி வழங்குவதிலும் எம். சி. சி. வங்கி முன்னணியில் உள்ளது. நகர மக்களின் பொருளாதார மேம்பாட்டில் இவ்வங்கி பெரும் பங்கு வகிக்கிறது எனச் சொன்னால் அது மிகையில்லை. 4 சதவீதக்குறைந்த வட்டியில் சிறு கைத்தொழில் மற்றும் குடிசைத் தொழில்கள் செய்ய ரூ. 7,000 வரை ஏழை மக்களுக்குக் கடன் தந்து அவர்கள் வாழ வசதி செய்துள்ளது.

மேலும் நடுத்தர மக்களின் தேவைகளையும் புரிந்து கொண்டுள்ள எம். சி. சி. வங்கி இன்றைய காலத்தில் அத்தியாவசிய தேவைகளாகிவிட்ட தொலைக்காட்சிப் பெட்டிகள், குளிர் சாதனப் பெட்டிகள் போன்ற வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கிடவும் ரூ. 7,500 பொதுமக்களுக்கு வழங்கி இதுவரை எந்த வங்கியும் தந்திராத அளவு இவ்வகையில் ரூ. 50 இலட்சம் தந்து நடுத்தர வர்க்கம் நல்லதொரு வாழ்க்கை நடத்திட உதவி வருகிறது.

## மாநிலத்தில் முதல் நடமாடும் கூட்டுறவு

1980ம் ஆண்டு மே மாதம் முதல் சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி தனது நடமாடும் கிளையை இயக்கி வருகிறது. தமிழ் நாட்டில் வங்கி வரலாற்றிலேயே புதுமையான திட்டமாக நடமாடும் கிளை ஒன்றை சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி துவக்கியுள்ளது. இது வாடிக்கையாளர்களுக்கு அளிக்கப்படும் மாறுபட்ட புதிய சேவையாகும். இந்தியாவிலேயே மூன்றாவதாக இங்குதான் நடமாடும் கிளை உள்ளது. இந்த நடமாடும் கிளை எல்லா விதமான வங்கிப் பணி வசதிகளை இட்டு வைப்பாளர்களுக்கு வழங்குவது மட்டுமின்றி சிறு சேமிப்பு இட்டு வைப்பு சேகரிப்பதில் முழு கவனத்தையும் ஒருங்கே செலுத்தி வருகின்றது.



# நியாய விலைக் கடைகள்

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டமைப்பு-3039 கல்லூரி மற்றும் உயர்நிலைப்பள்ளி மாணவர் கூட்டுறவுப் பண்டகச் சாலைகள், 301 தொழிற்சாலை மற்றும் தோட்டத் தொழிலாளர் பண்டக சாலைகள், 15 மகளிர் கூட்டுறவுப் பண்டக சாலைகள் உட்பட 3,848 பிரத கூட்டுறவுப் பண்டக சாலைகள் அவற்றின் 550 கிளைகளையும், 29 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலைகளையும் அவற்றின் 1,686 கிளைகளையும் மாநில நுகர்வோர் கூட்டுறவு இணையத்தையும் கொண்டுள்ளது.

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செய்த சில்லறை விற்பனையின் மதிப்பு 1984-85-ஆம் ஆண்டில் 285 கோடி ரூபாயிலிருந்து, 1985-86ஆம் ஆண்டில் 31.1.86 முடிய 505 கோடி ரூபாய்க்கு உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் 1984-85ஆம் ஆண்டில் செய்துள்ள சில்லறை விற்பனையின் மதிப்பு நாடு முழுவதிலும் உள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செய்துள்ள சில்லறை விற்பனையின் மதிப்பில் மூன்றில் ஒரு பங்காகும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியாண்டு இலக்கான 450 கோடி ரூபாய்க்கும் அதிகமாகத் தற்போதே 1986-87ஆம் ஆண்டில் 500 கோடி ரூபாய்க்கு நுகர்பொருள் சில்லறை விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

## கிராமங்களில் இன்றியமையாப் பொருட்கள் விற்பனை

இன்றியமையாப் பொருட்களை விற்பனை செய்ய, ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திலும் ஒரு நியாய விலைக்கடை துவக்கி நடத்தும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மாநிலத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒதுக்கப்பட்ட வருவாய்க் கிராமங்களில் 11,159 நியாய விலைக் கடைகள் நடத்தப்பட்டன. குடும்ப அட்டைதாரர்கள் நியாய விலைக்கடைகளிலிருந்து இன்றியமையாப் பொருட்களை விரைவில் வாங்கிச் செல்வதற்கு ஏதுவாக ஓராயிரம் குடும்ப அட்டைகளுக்கு மேல் கொண்டிருந்த நியாய விலைக்கடைகள் இரண்டாகப் பிரிக்கப்படவேண்டும் என்ற அரசின் தீர்மானத்திற்கு இணங்க, கூடுதலாக 1437 கடைகள் ஊரகப் பகுதிகளில் திறக்கப்பட்டன. இதனால் தற்போது 12,596 நியாய விலைக் கடைகள், கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

விற்பனையாளர்கள் சம்பளம், வாடகை மற்றும் இதர சில்லறை செலவுகளுக்காக, கிராமக் கடைகளுக்கு அரசு தொடர்ந்து மானிய உதவி வழங்கி வருகிறது. 12.4.85லிருந்து கிராமக் கடை விற்பனையாளர்களின் சம்பளம் 150 ரூபாயிலிருந்து 200 ரூபாய்க்கு உயர்ந்ததால், அதிகப் பட்சத்தொகையாக, ஒவ்வொரு முழுநேரக் கடைக்கு 3,600 ரூபாய்க்குட்பட்டும், ஒவ்வொரு பகுதி நேரக்கடைக்கு 2,400 ரூபாய்க்குட்பட்டும், ஒவ்வொரு மாற்றியமைக்கப்பட்ட கடைக்கு 804 ரூபாய்க்குட்பட்டும், அரசு மானிய உதவி வழங்குகிறது.

கிராமக் கடைகள், 1984-85ஆம் ஆண்டில் 126.20 கோடி ரூபாய் அளவிற்கே விற்பனை செய்திருக்க, 1985-86ஆம் ஆண்டில் 31.12.85 வரை 151.46 கோடி ரூபாய் அளவிற்கு இன்றியமையாப் பொருட்களை விற்பனை செய்துள்ளன. இவ்வாறாக, கிராமக்கடைகளில் பொருட்களின் விற்பனை கணிசமான அளவு உயர்ந்துள்ளது.

பொது விநியோகத் திட்டத்தில் கூட்டுறவுகளுக்குப் பெரும் பங்கை அளித்து அதனைத் திறம்படச் செயற்படுத்தி வருவதில், நாடு முழுவதற்கும் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது. திறமையுடன் செயற்படுத்தப்பட்டு வரும் பொது விநியோகத் திட்டம், இன்றியமையாப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதிலும், சரியான நேரத்தில் உரிய முறையில் பொதுவாக மக்களுக்கு -குறிப்பாக நலிந்த பிரிவினர்க்கு விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்வதிலும், உதவி செய்கிறது என்ற ஒருமித்த கருத்து எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

எந்த ஒரு தனியார் நிறுவனமும் இதில் ஈடுபடுத்தப்படவில்லையென்பதே தமிழ்நாட்டில் உள்ள பொது விநியோகத்தின் தனித்தன்மையாகும். கிராமப்பகுதி அளவில், விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களும் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகமும் இக்கடைகளை நடத்திவரும் பொறுப்பை ஏற்றுள்ள நிறுவனங்களாகும். கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலத்தில் உள்ள கடைகளில் 75 சதவீதக் கடைகளை நடத்தி, மொத்தமுள்ள 120 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களில், 90 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்குச் சேவை செய்து வருகின்றன.



தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி

இவ்வங்கி 1905-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் இருபத்து மூன்றாம் நாள் பதிவு செய்யப்பட்டு அம்மாதம் இருபத்தாறாம்தேதி முதல் சென்னை மத்திய நகர வங்கி என்ற பெயரில் பணி துவக்கப்பட்டது. இவ்வங்கியின் தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 5 கோடியாகும். வங்கியின் தற்போதுள்ள (30-6-86) செலுத்தப்பட்ட மூலதனத்தொகை ரூ. 5.45 கோடியாகும். இது தமிழக அரசின் ரூ. 1.26 கோடியும், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலுள்ள 17 மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் பங்குத் தொகையான ரூ. 4.17 கோடியும் உள்ளிட்டதாகும்.

**வளர்ச்சி:**

இவ்வங்கியில் பொது மக்களின் இட்டுவைப்புத் தொகை 1976-ஆம் ஆண்டில் ரூ. 39.38 கோடியாக இருந்து 30-6-86


**ஆ. சண்முகம்**
**தனி அலுவலர்,**
**தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி.**


அன்று ரூ. 201.90 கோடியாகவும், 31-8-86 அன்று ரூ. 204.58 கோடியாகவும் உயர்ந்துள்ளது. இவ்வங்கியின் வைப்புத்தொகை வளர்ச்சி மற்றும் வழங்கிய நேரடி மறுநிதிக் கடன்கள் வருமாறு:

| வருடம் | வைப்புத் தொகை (ரூபாய் கோடியில்) | கடன்கள் (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1980—81 | 170.57 | 109.72 |
| 1981—82 | 158.47 | 186.38 |
| 1982—83 | 141.10 | 203.29 |
| 1983—84 | 158.00 | 244.48 |
| 1984—85 | 177.22 | 266.76 |
| 1985—86 | 183.93 | 330.40 |

(31-12-85) வரை

இவ்வளர்ச்சி வங்கியின் மீதான பொதுமக்களின் பேராதரவையும் பெருநம்பிக்கையையும் பிரதிபலிக்கிறது.

தற்போது சென்னை நகரில் இவ்வங்கியின் 34 கிளைகள் இயங்கி வருகின்றன. பெரும்பாலும் குடியிருப்புப் பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள இக்கிளைகள் சனிக்கிழமை காலையிலும், மற்ற வேலை நாட்களில் வங்கியின் வாடிக்கையாளர்களின் வசதியை முன்னிட்டு தினசரி காலையிலும் மாலையிலும் இரண்டு முறை செயல்பட்டு வருகின்றன. வங்கியின் தலைமையகமும் 23 கிளைகளும் பாதுகாப்புப் பெட்டக வசதியுடன் செயல்படுகின்றன.

## சென்னை நகர கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம்

சென்னை நகரக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் தமிழகத்தின் தலைநகராம் சென்னை மாநகரில் 1912-ஆம் ஆண்டில் மூக்காத்தாள் தெருவில் தொடங்கப்பட்டு, படிப்படியாக வளர்ந்து 1936-ஆம் ஆண்டில் சென்னை நகரின் மையப்பகுதியிலே 18 மனைகளுடனும், ஒரு பெரிய கட்டடத்துடனும் வாங்கப்பட்டு மென்மேலும், வளர்ச்சியுற்று, சென்னை நகர மக்களுக்குக் கடந்த 74 ஆண்டுகளாக மக்களின் தேவையறிந்து சேவை செய்து ஆலமரம் போல அழகுடனும், வலிமையுடனும் வளர்ந்து பணிபுரிந்து வருகிறது.

சங்கத்திற்குச் சொந்தமாக 1972-ஆம் ஆண்டு ஒரு உறுதியான வசதி நிறைந்த கட்டடம் கட்டப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது.

அதன் பின்பு சங்கத்தின் 60-ஆம் ஆண்டு விழாவினை விமரிசையாகக் கொண்டாடியபோது அந்த வைபவத்தில் அப்போதைய இந்தியக் குடியரசுத் தலைவர் மேதகு வி. வி. கிரி அவர்கள் வருகை தந்து சிறப்புரை ஆற்றியது சங்க வளர்ச்சிக்கு மற்றுமொரு சான்றாக விளங்குகிறது.

குன்றின் மீது ஏற்றி வைத்த விளக்காக ஏற்றத்தாழ்வு கருதாமல் அனைவருக்கும் நம்பிக்கை ஒளிவீசி 30-6-85-ஆம் ஆண்டின் இறுதியில் நல்ல முறையில் பணியாற்றி தாய்ச் சங்கமான தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தின் உதவியுடன் வீடுகட்ட கடனாக 4.18 கோடி ரூபாய் பட்டுவாடா செய்துள்ளது பிரதம வீட்டு வசதி சங்கங்களின் வரலாற்றில் ஒரு மாபெரும் சாதனையாகத் திகழ்வதோடு தமிழகத்தில் வேறு எந்தப் பிரதம வீட்டு வசதிச் சங்கமும் இச் சாதனையை எட்டவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.



# கால்நடை வளர்ப்போம்!

தமிழ்நாட்டில் செம்மறி ஆடு வளர்ப்பு ஊரக வளர்ச்சியின் மேம்பாட்டிற்கு மிகப் பெரும் அளவில் துணை புரிந்து வருகிறது. செம்மறி ஆடு வளர்ப்பு மலை வாழ் மக்கள் வறட்சிப் பகுதியில் வாழும் மக்கள் மற்றும் சிற்றூர்களில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கிறது. சிற்றூர்களில் வாழும் ஏழைக்குடியானவர்களுக்கு (உழவர்கள்) ஆடு வளர்ப்பு ஒரு சிறந்த துணைத் தொழிலாக இருப்பதால், கிராமப்புறங்களில் செம்மறி ஆடு இனப் பெருக்கம் மிக விரைவாக முன்னேறி வருகிறது.

கோழி வளர்ப்பைக்குலத்தொழிலாகக்கொண்டவர்களின் நலத்திற்காகவும், இதனைத்துணைத் தொழிலாகக் கொண்டுள்ள ஏழை மக்களின் நலத்திற்காகவும் கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழகத்தில் துவக்கப்பட்டுள்ளன. 30.6.86 முடிய 150 கோழி வளர்ப்புக்கூட்டுறவுச்சங்கங்கள் உள்ளன. இவற்றுள் 18 சங்கங்கள் மிகவும் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன.

ஆடு வளர்ப்பைக் குலத் தொழிலாகக் கொண்டுள்ளவர்களின் நலத்திற்காகவும், ஆடு வளர்ப்பைத் துணைத் தொழிலாக கொண்டுள்ள ஏழைக் குடியானவர்களின் நலத்திற்காகவும் ரூ. 83 இலட்சம் செலவில் வேளாண்மை மறு நிதிக் கழகத்தின் உதவியுடன் ஆடு இனப் பெருக்கத் திட்டத்தைத் தமிழக அரசு செயல்படுத்தியுள்ளது. 39 ஆடு வளர்ப்புக்கூட்டுறவுச்சங்கங்கள் தொடங்கப்பட்டுச் செயல் பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ. 83 இலட்சம் ஆகும். வேளாண்மை மறுநிதிக் கழகம் ரூ. 38.21 இலட்சம் அளித்துள்ளது. தமிழக அரசு 12.7 இலட்சம் வழங்கியுள்ளது.

## சிறப்புக் கால்நடைப் பராமரிப்புத் திட்டம்

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் ஏழை எளிய சிறிய குடியானவர்களின் வருமானத்தை ஆடு வளர்ப்பு மூலம் பெருக்குவது ஆடு வளர்ப்பில் புதிய அறிவியல் முறைகளைப் புகுத்தி நல்லதரமான ஆடுகளைப்பெரும் அளவில் உற்பத்திச் செய்வது ஆகியவையாகும். இத்திட்டம் மத்திய அரசால் உருவாக்கப்பட்டது. ஆகும

இத்திட்டமானது சேலம், வட ஆர்க்காடு மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் செயல் படுத்தப்பட்டுள்ளது. ஐந்தாவது மற்றும் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 17,994 யூனிட்டுகள் நிறுவப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் ஒரு அலகு(யூனிட்டு)க்கு 20 பெட்டை ஆடுகளும் ஒரு கிடாவும் அடங்கியுள்ளன. மேலும் இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு யூனிட்டுக்கும் ரூ. 4,500 அதில்

எஸ். ரங்கராஜ்
இயக்குநர்,
கால்நடைப்பராமரிப்புத் துறை,
சென்னை.

சிறிய விவசாயிகளுக்கு ரூ.1,125 25% நடுத்தர விவசாயிகள் மற்றும் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு ரூ. 1.500 (33 1/3%) மானியமாக வழங்கப்படுகிறது. மீதியுள்ள தொகை வங்கிக் கடன் மூலம் அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் உள்ள ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள்யாவும், நாட்டுடைமையாக்கப்பட்டுள்ள (தேசியம்யமாக்கப்பட்டுள்ள) வங்கிகளிடமிருந்தும், கூட்டுறவு வங்கிகளிடமிருந்தும் கடன் பெற்று நன்மை அடைகின்றன. இதுவரை ரூ.192.14 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

4.12.1979ல் இந்திய அரசால் நடைபெற்ற சிறப்புக் கால்நடை பராமரிப்புத் திட்ட ஆய்வுக்குழு கூட்டத்தில் இத்திட்டம் தமிழ்நாட்டில் முழு அளவில் வெற்றி பெற்றிருப்பது ஆடு இனப் பெருக்கம் விரைவாக முன்னேறி இருப்பது வெகுவாக பாராட்டப்பட்டது. ஊரக வளர்ச்சிக்கு இத்திட்டம் பெரிதும் பயன்பட்டு வருகிறது. மேலும் ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் 1985-86ம் ஆண்டிற்கு 1,216யூனிட்டுகள் நிறுவப்பட்டு ரூ.17.05 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.



## 2-வது அட்டை சொல்லும் செய்திக் கட்டுரை



# இல்லத்தரசியின் இனிய கனவு

தமிழகத்தில் நுகர்வோரின் தேவையறிந்து நுகர் பொருட்களை வழங்கி அரிய சேவை புரிந்து வருவதில் கூட்டுறவுச் சிறப்பங்காடிகள் சிறப்பிடம் வகிக்கின்றன.

தரமான பொருட்களைச் சரியான எடை அளவில் நியாய விலையில் வழங்கும் பணியில் தமிழகத்திலுள்ள நுகர்வோர் கூட்டுறவு நிறுவனங்கள் முன்னணியில் நிற்கின்றன.

எல்லாவகையிலும் புதுமைகள் செய்து வழிகாட்டி முன்னோடியாகத் திகழும் தமிழகம் நுகர்வோர் பணியில் நுகர்வோரின் நலன் கருதி அண்மையில் சில புதுமைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

கூட்டுறவுச் சிறப்பங்காடிகளில் பொருட்களை வாங்கும் வாடிக்கையாளர்கள் பல பிரிவுகளுக்குச் சென்று பொருட்களைக் காத்திருந்து வாங்க வேண்டியிருந்த காலம் மாறிவிட்டது.

தற்போது நுகர்வோர் இயக்கத்தில் ஒரு திருப்புமுனையாகக் கூட்டுறவுச் சிறப்பங்காடிகளில் சுய சேவைப் பிரிவுகள் துவக்கப்பட்டுள்ளன. மிகப்பெரிய அளவில் விரிவான இடத்தில் வாடிக்கையாளர்களின் வசதிக் கேற்ற வண்ணம் சுயசேவைப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

நுகர்வோர்கள் தாங்கள் விரும்பும் பொருட்களை உரிமையுடன் எடுத்து, தரத்தைக் கண்டறிந்து விலைகளை ஒப்பிட்டுப் பார்த்த பிறகு வாங்குவதையே பெரிதும் விரும்புகின்றனர். நுகர்வோரின் இந்த மனப்பாங்கினைப் பூர்த்தி செய்யவே கூட்டுறவுச் சிறப்பங்காடிகளில் சுய சேவைப் பிரிவுகள் துவக்கப்பட்டுள்ளன.

அடர்ந்த சோலையில் பல்லாயிரம் மலர்கள் அழகூட்டுவது போல ஒரே இடத்தில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பல்வகைப் பொருட்கள் கண்ணையும், கருத்தையும் கவரும் வண்ணம் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் காட்சி வாடிக்கையாளருக்கு அழைப்பு விடுப்பது போலத் தோன்றும்.

சிறுவர் முதல் பெரியோர்வரை எல்லோருடைய தேவைகளுக்கும் ஏற்றவாறு எல்லாப் பண்டங்களும் சுய சேவைப் பிரிவிலே கிடைக்கும்.

வாடிக்கையாளர்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

ஒவ்வொரு பொருளின் மேலும் அதன் விலை குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.

தாராளமாகச் சுற்றிப் பார்த்துப் பொருட்களைத் தேர்ந்தெடுக்கலாம்.

* அந்தந்தப் பகுதிக்கேற்றவாறு வழி காட்டும் பெயர்ப் பலகையும் பொருத்தப்பட்டுள்ளது.

* பொருட்களைத் தேர்ந்தெடுத்து வைத்துக் கொள்ளத் தேவையான பிளாஸ்டிக் கூடைகளும் தரப்படுகின்றன.

* அதிக அளவு பொருட்களை வாங்க வேண்டியிருந்தால் சக்கரம் பொருத்தப்பட்ட வண்டியில் வைத்துச் சுலபமாகத் தள்ளிச் செல்லலாம்.

* விரைவில் விலைப் பட்டியல் தயாரித்து பில்போட வசதி செய்யப்பட்டுள்ளது. அதற்காகக் காத்திருக்க வேண்டியதில்லை.

* பொருட்களை வீடுகளுக்கு எடுத்துச் செல்ல அழகான பாலிதீன் பைகள் தரப்படுகின்றன.

* சுயசேவைப் பிரிவில் விற்கப்படும் பொருட்கள் நியாய விலையிலும் தரமானதாகவும் இருக்கும்.

* தமிழகத்தில் 14 சுயசேவைப் பிரிவுகள் கூட்டுறவுச் சிறப்பங்காடிகளில் அமைக்கப்பட்டுள்ளன. பழம்பெரும் நுகர்வோர் கூட்டுறவு நிறுவனமான டி.யு.சி.எஸ்.-ல் அமைக்கப்பட்டுள்ள சுயசேவைப் பிரிவு ஒரு புதுமையான அமைப்பு. இந்தியாவிலேயே மிகப் பெரிய இரண்டாவது சுயசேவைப் பிரிவு இதுதான்.

* கூட்டுறவுச் சிறப்பங்காடியின் சுயசேவைப் பிரிவில் பண்டங்களை வாங்குவது...

குடும்பத்துக்கே ஒரு பொழுது போக்கு!

குறைந்தவிலையில் சிறந்த பொருட்களை ஒரே இடத்தில் வாங்கலாம்!

இல்லத்தரசிகளின் இனிய கனவு இதனால் நனவாகிறது!

# ஒருமைப்பாடே உயிர் மூச்சாகும் – நேரு



நம்முடைய தேசத்தின் ஒற்றுமைக்கு, ஐயக்கியத்துக்கு இடையூறு செய்து அதைப் பலவீனப்படுத்தும் செயலைச் செய்வது, பாரத சமுதாயத்தினால் மன்னிக்க முடியாததொரு கொடுஞ்செயல் என்றே நான் விளக்க முற்படுகிறேன்.


இந்திய ஐக்கியம் இந்தியர் ஒவ்வொருவரின் உயிர் மூச்சாகும். இந்திய ஐக்கியத்தைச் சிதைக்க எண்ணும் எந்தவொரு ஆணும், பெண்ணும் தற்கொலை செய்து கொள்ள முயலுகிறார் என்றுதான் அர்த்தம். தற்கொலை முயற்சியில் ஈடுபடும் எவனையும், மனிதத் தன்மையிலிருந்து கீழிறங்கியவன் என்றுதான் நான் கருதுகிறேன்.

தேச ஐக்கியத்துக்கு ஊறு செய்பவர்கள் என்று நான் குறிப்பிடும் போது, வெறும் பிரிவினைவாதிகளை மட்டுமே நான் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை. வகுப்பு வாதம், மாகாணப் பித்து, சாதி வெறி ஆகியவையும் தேச ஐக்கியத்தின் எதிர்ச் சக்திகள் என்று நான் கூறுகிறேன். மொழிப் பிரச்சினைகளைப் பிரமாதப்படுத்திக் கூச்சலிடுவதைக் கூட, முற்றிலும் சரியான முறை என்று நான் ஒப்புக் கொள்ளவில்லை.

திண்மையும், தீரமும் வாய்ந்ததாக நம்முடைய தேசிய சமுதாயம் இருக்க வேண்டும். அதன் மக்கள், சகோதர பாவத்துடனும் ஐக்கிய உணர்வுடனும் இணைந்திருக்க வேண்டும். ஒரு தேசிய சமுதாயத்துக்கு ஆக்கம் அளிக்கின்ற மனோபாவ ரீதியான, இதயபூர்வமான, ஆன்மீகரீதியான ஐக்கியத்தை உருவாக்குவது தான் ஜீவாதாரமான செயல் முறையாகும்.

உணர்ச்சிபூர்வமான ஒருமைப்பாடு நமக்குத் தேவை. லோகாயுத ரீதியில் நாம் முன்னேற்றம் காணலாம். ஆனால், மனவேறுபாடற்று ஒத்துவாழவும், ஒத்துழைக்கவும் நம்மால் முடியாவிட்டால் இந்த முன்னேற்றத்தின் பயனெல்லாம் வியர்த்தமாகத் தான் முடியும்.

'நமது சமுதாயம்' என்று பெருமையுடன் நாம் கூறிக் கொள்வதெல்லாம் பாரத சமுதாயத்தைப் பற்றியதாகத்தான் இருக்க வேண்டும். நமது நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் இதனுள் அடக்கம்.



இந்தியாவில் ஏராளமான மதங்கள் இருந்தன; இருக்கின்றன. இந்தியாவின் ஒவ்வொரு மதத்திற்கும் தனிச்சிறப்புகள் உண்டு என்பதை நன் ஒப்புக் கொள்கிறேன். இந்திய மதங்கள் எல்லாமே நம்முடைய மரியாதைக்கு உரியவைதான்.

நாம் சொந்த வாழ்வில் எந்த மதத்தை வேண்டுமானாலும் பின்பற்றலாம். எந்த விதத் தடங்கலும் இல்லை. ஆனால் நாம் எல்லோருக்குமாகச் சேர்ந்து 'பொது மதம்' ஒன்று இருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. இந்த மதத்தை 'இந்தியமதம்' என்று அழைப்போமே!


இந்த மதத்தின் அடிப்படை ஒன்றே ஒன்றுதான்! இந்தியச் சமுதாயத்தைச் சேர்ந்த எல்லோருக்கும் உடல் வெவ்வேறாக இருந்தாலும், உயிரும், உணர்ச்சியும் ஒன்று என்பதுநான் இந்த மதத்தின் தத்துவம்.

நீங்கள் எந்தக் காரியத்தைத் தொடங்குவதாக இருந்தாலும் தொடங்குவதற்கு முன்னால் அதன் மூலம் ஒற்றுமை ஏற்படுமா, பிளவு ஏற்படுமா என்று உங்களையே கேட்டுக் கொள்ள வேண்டும். உங்களுடைய செயல்களையெல்லாம் மதிப்பிடுவதற்கான உரைகல் இதுவே.

மக்களை ஒன்று சேர்க்கின்ற காரியங்கள் எல்லாம் நல்லவை; மக்களைப் பிரித்து வைக்கும் காரியங்கள் எல்லாம் கெட்டவை.

கட்டுப்பாடும், ஐக்கியமுமே நமது தேசத்திற்கு முதலில் தேவை. ஒன்றாக அடியெடுத்து வைக்கும் இராணுவக் கட்டுப்பாட்டை நான் குறிப்பிடவில்லை; இதயபூர்வமான, மனப்பூர்வமான கட்டுப்பாடும், ஐக்கியமுமே தேவை.

# நேருவின் அமுத மொழிகள்



மனிதனுடைய கை, மூளை ஆகியவற்றின் விரிந்த வளர்ச்சியே கருவிகள். கருவிகள் மூலமாக உங்கள் கைத்திறனையும், மூளைத்திறனையும் பெருக்காவிட்டால் உங்களுடைய ஆற்றலும் வளராமல் சுருங்கிக் கெடும்.

சமுதாய நீதி வேண்டும் என்று இன்று மக்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள். ஏழையாகப் பிறந்தால் ஏழையாகவே இருக்க வேண்டும் என்று நினைத்து 'விதி' 'தலை எழுத்து' என்றெல்லாம் பேசுகிற பேச்சை இன்றைய மக்கள் குறைவாகவே மதிக்கிறார்கள். எனவே, செல்வர்க்கும், வறியவர்க்கும் இடையேயுள்ள வேற்றுமைகளை நீக்க முயல்வது தவிர வேறு வழியில்லை. எல்லாருக்கும் சமவாய்ப்பு ஏற்படுத்தும் வகையிலே நாம் திட்டங்கள் வகுக்கவேண்டும்.



வாழ்வில் எதையும் வெறுத்துக் குறை காண்பவன் எவ்வளவுதான் அறிவுக்கூர்மை படைத்திருந்தாலும் செயல்படுவதிலே ஊக்கமும் ஆற்றலும் இன்மையால் எப்போதும் எதுவுமே செய்யான்.

அடைந்த பலன்களை வைத்துத்தான் இலட்சியங்களின் சிறப்பைச் சோதிக்க வேண்டும்.




பழைய நாகரிகங்களிலே பல சீர்மைகள் உண்டு; என்றாலும் இன்றையத் தேவைகளுக்கு அவை போதியவை அல்ல என்பது தெளிவாகி விட்டது.

நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டால் தான் செல்வத்தை உண்டாக்க முடியும் என்பதை நாம் எல்லாரும் நினைவில் கொள்ளவேண்டும்.

உண்மையான நம்பிக்கை மட்டுமே ஒருவனுக்கு இருக்குமாயின், அந்த நம்பிக்கையே மலைகளைக் கூட அசைத்துவிடும்.

ஆணைகள் பிறப்பித்துச் செல்வத்தை உண்டாக்கிவிட முடியாது; உழைப்புத் தான் செல்வத்தைப் படைக்கும்.




மக்களுக்கு எழுச்சியூட்ட வேண்டுமாயின் பெண்ணுக்கு விழிப்பூட்ட வேண்டும். பெண்மை சக்தி கிளர்ந்தெழுந்தால் குடும்பம் கிளர்ந்தெழும்; கிராமமும் கிளர்ந்தெழும்-நாடும் கிளர்ந்தெழும்.

பணம் பணம் என்றே மக்கள் பேசுகிறார்கள். பணம் பயனுடையதுதான், ஐயமில்லை; ஆனால் முடிவான மதிப்பு மனிதனுக்குத்தான். பணத்துக்கு அன்று. வரலாற்றை உருவாக்கினவன் -மனித சமுதாய முன்னேற்றத்தை உருவாக்கினவன் மனிதன்தான். பணம் அன்று.

ஆற்ற வேண்டிய பணிகளைப் பற்றிப் போதிய அளவு சிந்திக்கப் பலர் முன்வருவதில்லை; அதற்குப் பதிலாக அறிவுரைகள் வழங்கவோ, குற்றங் காணவோ சிறிதும் தயங்குவதில்லை.

# நேருவைப் பற்றி நேரு



**மறுமணம் செய்யாதது ஏன்?**

சௌதரி: கமலா காலமான பின்னர் மீண்டும் திருமணம் செய்துகொள்ளாமல் உங்களைத் தடுத்தது எது? புலனடக்கமா? நாட்டின் பொருட்டுத் தம்மை அர்ப்பணித்துக்கொண்டதா? குடும்பத் தொல்லைகள் பற்றிய அடக்கமா? இந்திரா மீதுள்ள பாசமா? அல்லது கொள்கைப் பிடிப்பா?

நேரு: மீண்டும் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற நினைப்பே எனக்கு ஒரு போதும் இருந்தது இல்லை. எனது வேலையில் நான் ஈடுபட்டு இருந்தேன்.

**அறிவும் நேர்மையும்!**

சௌதரி: பொதுநல ஊழியனுக்கு மிகக் கேடு பயக்கும் ஒரு குறைபாடு எது என்பது உங்கள் கருத்து?

நேரு: நேர்மை இல்லாத குறை என்று இதை நான் கருதுகிறேன். பணம் குறித்து நான் கூறவில்லை. அது இருக்கவே இருக்கும். ஆயினும் தனக்குத் தானே நேர்மையாக நடப்பது மிக முக்கியமாகும். இது உலகம் முழுமைக்கும் முக்கியமாகும். இந்தியாவுக்கு அதி முக்கியமாகும். இந்தியாவில் அறிவை மதிப்பதைக் காட்டிலும் நேர்மையை அதிகம் மதிப்பார்கள்.

சௌதரி: தாங்கள் குழந்தைகளை அதிகம் நேசிக்கிறீர்களே; என்ன காரணமோ?

நேரு: இது ஒரு சிரமமான கேள்வி; இந்தக் கேள்விக்குக் கச்சிதமாகப்பதில் கூறுவது சாத்தியமன்று.

சௌதரி: தங்களுக்கு ஒரே ஒரு குழந்தை இருப்பது காரணமாய் இருக்குமா? அல்லது குடும்பத்துக்குத் தாங்கள் ஏகபுதல்வனாக இருந்து, மிகுந்த அன்புடனும் கவனத்துடனும் தங்களை வளர்த்தது காரணமாய் இருக்குமா?

நேரு: குழந்தைகளை நான் அதிகம் நேசிப்பதற்கு இவை இரண்டும் காரணங்களாய் இருக்கும் என்று நான் நினைக்கவில்லை.

சௌதரி: குழந்தைகளை மோசமாக நடத்துவதைத் தாங்கள் காண்பது காரணமாய் இருக்குமா? அல்லது தங்கள் மனைவியின் அகால மரணம் காரணமாய் இருக்குமா?

நேரு: இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லும் நிலையில் நான் இல்லை. ஆயினும் குழந்தைகளிடம் எனக்குப் பிரியம் அதிகம் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆண்டுகள் ஆக, ஆக எனது பிரியமும் குழந்தைகளிடம் அதிகரித்துக் கொண்டு வந்திருக்கிறது.

**தன் கையே தனக்குதவி**

சௌதரி: நாள்தோறும் நீங்களே சவரம் செய்து கொள்கிறீர்களா? அல்லது நாவிதன் வந்து செய்துவிடுகிறாரா?

நேரு: நாள்தோறும் நானே சவரம்செய்து கொள்கிறேன். நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக நான் சொந்தமாகவே சவரம் செய்து கொள்கிறேன்?

சௌதரி: நாள்தோறும் நீங்கள் உடை மாற்றிக் கொள்வது உண்டா?

நேரு: நாள்தோறும் உடை மாற்றிக் கொள்வேன். சில சமயம் இருமுறைகூட மாற்றிக் கொள்வதும் உண்டு. நாள் முழுதும் கழிந்தபின்

உடை அழுக்காகவோ ஈரமாகவோ இருந்தால் மாற்றிக் கொள்வது உண்டு.

சௌதரி: நாள்தோறும் செருப்புக்குப் பாலிஷ்போட்டுக் கொள்வது உண்டா?

நேரு: ஆம, போட்டுக்கொள்வது உண்டு.

சௌதரி: எதைக் கொண்டு நீங்கள் பல் துலக்குகிறீர்கள், பிரஷினாலா அல்லது பற்குச்சியாலா?

நேரு: இந்தியப் பற்பொடி கொண்டு நாள்தோறும் இருமுறை துலக்கு வது உண்டு. பற்பசையும் பிரஷும் பயன்படுத்துவது உண்டு.

சௌதரி: இரு முறையா?

நேரு: ஆம். காலையிலும் இரவிலும்.

**புகையும் புலாலும்**

சௌதரி: புகை பிடிப்பதையும் புலால் உண் பதையும் நீங்கள் விட்டு விட்டீர் கள். எதற்காக இரண்டையும் விட் டீர்கள்? இப்பொழுது நீங்கள் புலால் உண்பது உண்டா? அப்படி யனால் ஏன்?

நேரு: குறிப்பிடத்தக்க காரணம் எதுவும் இல்லை. புகை பிடிப்பது வீண் செலவு என்பதால் அதை நான் விட்டுவிட்டேன். இரண்டாவதாக எந்த ஒரு பழக்கத்திலும் சிக்கிக் கொள்ள நான் பிரியப்படுவது இல்லை. புலால் உண்ணாமல் இருப்பதை நான் விரும்பியதால் அதை விட்டுவிட்டேன். ஐந்தாறு ஆண்டுகள் நான் புலால் சாப்பிடா மல் இருந்தேன். பிறகு ஐரோப்பா போனபோது படிப்படியாக மீண் டும் புலால் உண்ண ஆரம்பித் தேன். எப்பொழுதும் நிறையச் சாப்பிடுவது இல்லை. குறை வாகவே சாப்பிடுகிறேன்.

**கார்ட்டூன் பற்றிய கருத்து**

சௌதரி: போட்டோ எடுக்க மிகவும் ஏற்ற உருவம் உங்களுக்கு இருப்பதாக எப்பொழுதாவது நீங்கள் கருதியது உண்டா? இதைப்பற்றி உங்கள் கருத்து என்ன? உங்களைக் குறித்து போடப்படும் கார்ட்டூன்களைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

நேரு: எனது முகம் குறித்து நான் என்ன கூறமுடியும்? போட்டோவுக்கு ஏற்ற முகம் என்று பலர் கூறு கிறார்கள். அதற்குப் பலபொருள் உண்டு. முதலாவதாக, போட்டோ எடுக்கும்போது எனக்குக் காமிரா உணர்வு இருப்பது இல்லை. அந்த உணர்வு உங்களுக்கு இருக்குமா னால் முகத்தையும் உங்களையும் நீங்கள் தயார்ப்படுத்திக் கொள் வீர்கள். இப்படிச் செய்வதால் முகம் தனது இயல்பை இழந்து விடுகிறது. அதனால் உண்மையாக அனைத்தும் கெட்டுவிடுகின்றன. இன்னொரு கேள்வி என்ன?

சௌதரி: கார்ட்டூன்களைப் பற்றி..

நேரு: கார்ட்டூன்களைப் பற்றியா? கார்ட் டூன்கள்-அவை மனிதனைப் பாதிப் பது இல்லை. சில நல்லவை; சில தீயவை. சில பயனற்றவை.

சௌதரி: குறைகூறும் கார்ட்டூன்கள்?

நேரு: கார்ட்டூன்கள் பலவிதமாய் உள் ளன. சில கண்ணியமாயும் சில கண் ணியக் குறைவாயும் உள்ளன. கண் ணியக் குறைவாகக் கண்டித்துப் போட்டுள்ள கார்ட்டூன்களை நாம் புறக்கணித்து ஒதுக்க வேண்டியது தான்.

**பலாத்காரம் பயன் தருமா?**

சௌதரி: அஹிம்சையில் உங்களுக்கு எவ் வளவு தூரம் நம்பிக்கை உண்டு? வலிய வந்து யாராவது உங்களைத் தாக்கினால், பலாத்காரத்தின் மூலம் உங்களை நீங்கள் பாதுகாத் துக் கொள்வீர்களா? அல்லது மாட் டீர்களா? முதியவர், குழந்தை, பெண்கள் இவர்களை உங்கள் எதி ரில் யாராவது தாக்கினால், நீங் கள் என்ன செய்வீர்கள்?

நேரு: இயன்ற மட்டும் முயன்று பலாத் காரத்துக்கு உட்படும் மனிதரை நான் காப்பாற்ற முயல்வேன். தேவைப்பட்டால் எனது முழு ஆற் றலைக்கொண்டு பலாத்காரத்தை யும் நான் பயன்படுத்துவேன்.

சௌதரி: உங்களை யாராவது தாக்கினால்?

நேரு: எவ்விதத் தயக்கமும் இன்றி, பதி லுக்கு நான் பலாத்காரத்தைப் பயன்படுத்துவேன்.

சௌதரி: முந்திக்கொண்டு நீங்கள் பலாத் காரத்தில் இறங்குவீர்களா?

நேரு: நான் இறங்குவது கூடாது; ஆனால் அந்த நேரத்தில் நான் என்ன செய்ய வேண்டும் என்பதும் எனக் குத் தெரியாது!

திரு நாராயணராம் சௌதரி என்பார் பல்வேறு சந்தர்ப்பங்களில் பண்டித நேருவைக் கண்ட பேட்டிகளிலிருந்து...

**தொகுப்பு: இல. இராசேந்திரன்**

---

**ம**னிதன் புற உலகை வெல்கிறான்; தன்னைத் தான் வெல்வதிலே தோற் கிறான்.

—ஜவகர்லால் நேரு



# நூல் நயம்

## இறைமனிதர் சிவானந்தா

**ஆசிரியர்:** நா. அனந்தநாராயணன்

**வெளியீடு:** ராஜ்ஸ்ரீ பிரிண்டர்ஸ், 156, ஔவை சண்முகம் சாலை, சென்னை-600 086.

**விலை:** ரூ. 40.00 **பக்கம்:** 327

இளமையிலேயே தன்னலமற்ற நெறிநின்ற சிறுவர் குப்புசாமி டாக்டர் குப்புசாமியாகி மலேயாவில் செய்த சேவைகள் மற்றவர்க்கு வழிகாட்டும் வகையில் எழுதப்பட்டுள்ளன. ஆன்மீக நூல்கள் பலவற்றைக் கொண்டதொரு நூல்நிலையத்தைத்தன் வீட்டில் அமைத்தார்.

உடல் நலம் பேணும் மருத்துவராக இருந்த டாக்டர் குப்புசாமி, உள்ளத்தை உன்னத நிலைக்குக் கொணரவல்ல ஜெபத்தில் ஈடுபட்டார். இறைவழிபாடு அவருக்கு விருப்பமான ஒன்று.

தன் வீட்டுச்சமையல்காரரைத் தன் நண்பராக மதித்துப் போற்றித் தனக்கு இணையாக அவரை நடத்தியவர் தான் தரையில் படுத்துக் கொண்டு, அவருக்குத் தன்னிடம் வந்த யாரையுமே அவர் வெறுங்கையுடன் அனுப்பியதில்லை.

மக்களுக்குத் தொண்டு செய்தல், ஆன்மீக நெறிநிற்றல், மகாத்மாக்களுடன் உறவு கொள்ளுதல், வீட்டில் பக்தியில் திளைத்தல் இவையே அவருடைய விருப்பங்கள்.

புகழ்வாய்ந்த டாக்டராக இருந்த குப்புசாமி, மெல்ல மெல்ல உலகியல் வாழ்வை நீத்து இறைவனடிக்கு அடிமையான பாங்கு அழகாகச் சொல்லப்பட்டுள்ளது.

1924 ஜூன் 1இல் சுவாமி சிவானந்த சரசுவதியானார் குப்புசாமி.

சாதாரண ஒரு மனிதர் இறையுணர்வு பெற்று அவன் அடித்தொண்டனாக இலங்குவது இயலும் என்பதற்கு. சிவானந்த சுவாமயின் வாழ்க்கை சிறந்ததோர் எடுத்துக்காட்டாக அமைவது தெள்ளிதின் புலப்படுத்தப்படுகின்றது.

நாவடக்கமும் மன அடக்கமும் மிக எளிதாக சுவாமியிடம் அமைந்திருந்தன. தம் சீடர்களையும் நண்பர்களாகவே கருதிய சிவானந்தாவின் சிறப்பு பெரிதும் பாராட்டப்பட்டுள்ளது.

"நல்லவர்கள் ஏற்கெனவே நற்குணத்தவர் ஆவர். குண்டர்களை மட்டுமே நான் சீர்திருத்த வேண்டும். இதுவே எனது சிறப்பான பணி" என்று சுவாமிஜி குறிப்பிடுவதாகச் சொல்லப்பட்டுள்ள பகுதி நன்கு உணர்த்தப்பட்டுள்ளது.

"ஓம், அமின், ஆமென் எல்லாம் ஒன்றுதான். எல்லா மதங்களின் அடிப்படைக் கருத்துக்களும் ஒன்றுதான்" என்ற உண்மைக் கருத்து சுவாமிகளால் நாடெங்கும் பரப்பப்பட்டமை குறிக்கப்பட்டுள்ளது. இன்றைய நிலையில் பயன்மிகு கருத்தாகும் இது. ஆன்மீகமேம்பாட்டின்மூலம் தான் சமய ஒற்றுமை ஏற்பட முடியும் என்பது வலியுறுத்தப்படுகின்றது.

தம் பேச்சாலும் எழுத்தாலும் ஆன்மீக நெறி நின்று வாழ்ந்து உயர்ந்த பெருமகனாரின் வாழ்க்கை மிக நல்ல முறையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

சேவையாலும் அன்பாலும் அனைத்து உள்ளங்களையும் கொள்ளை கொள்ள முடியும் என்பதற்கு, சுவாமி சிவானந்தாவின் வாழ்க்கை மிகச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாக அமைந்தமை இந்நூல் முழுவதும் சிறந்த முறையில் வெளியிடப்பட்டுள்ளது அனைவரும் அறிய வேண்டிய கருத்துக்களடங்கிய நல்லதொரு நூல் இது. ஆன்மீக நெறி விரும்புவோர்க்கு அருமையானதொரு படைப்பு.

## பாரதிதாசன் நறுமலர்க் கொத்து

**தொகுப்பாளர்கள்:** மன்னர் மன்னன், முல்லைமுத்தையா,

**வெளியீடு:** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்., 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை-600098.

**விலை:** ரூ. 15. **பக்கம்:** 216.

1946ஆம் ஆண்டு பாவேந்தரைப் பற்றி எழுதிய பல்துறைச் செல்வர்கள் பலரின் மணமிகு மலர்கள் மலர்ந்து மணம் பரப்பும் பூக்காடாகத் திகழ்கின்றது இந்நூல். நூலுக்குரிய முன்னுரையும் அரியதொரு வரலாற்றுக் கட்டுரையாக அமைந்துள்ளது.

கலையைக் காட்சிப் பொருளாக்கிய காலம் மாறி, கலை நம் வாழ்க்கையில் தோழனாக மிளிர்வதுதான் என்பதை முதன் முதலில் நிறுவியவர் பாரதிதாசனே என்கிறார் மறைந்த முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா.

"தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்" என்ற பாவேந்தரின் நெடுமொழி, நாவலரால் போற்றப்படுகின்றது இந்நூலில்.

"ஆவேசத்தையும் உணர்ச்சியையும் வெள்ளமாகக் கொட்டும் உயிர்க்கவி பாரதிதாசன் என்பது என் எண்ணம்" என்கிறார் வ.ரா. முற்றிலும் பொருத்தமானதொரு கருத்து இது.

"தன் உள்ளத்தில் ஊறும் கருத்தினைப் பிறருக்கு எடுத்துச் சொல்லும் ஆற்றல் படைத்தவன் என்பதால்தான் மனிதன் உயர்ந்தவனாகிறான்" என்ற புதுவைக் குயிலின் கருத்து, அவர் மகன் வாயிலாக வெளிப்படுகின்றது.

பார்வையில் மிடுக்கும் பாடலில் எழுச்சியும் கொண்ட பாவேந்தர், உள்ளத்தில் குழந்தையாகவே திகழ்ந்தமை அவர் பேரன் செல்வம் மூலம் தெரிகிறது.

1946-ல் வெளியான 44 கட்டுரைகள் வாயிலாக, புதுவைக் குயிலின் புரட்சிக் குரல் வெகு அழகாக இசைக்கப்பட்டுள்ளது. பாவேந்தரை ஆழமாக அறிய விரும்புவோர்க்கு இத்தொகுப்பு நூல், நல்ல தொரு சாதனமாகும்.

— டாக்டர் சிவ அரசி முத்துக்காளத்தி

## அன்புதாசனின் மருத்துவக் கட்டுரைகள்

வெளியீடு: இமயப் பதிப்பகம்,
20, பெருமாள் தெற்குவீதி,
நாகப்பட்டினம்-611 001

விலை: ரூ.10 பக்கம்-144

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது நமது நாட்டில் வழங்கப்படும் பழமொழி. நோயினால் அவதிப்பட்ட யாரோ ஒருவர் மிகுந்த அனுபவத்துடன் சொல்லிய வாசகம் இது.

மனிதப் பிறவிக்கு ஏற்படுகின்ற நோய்களைக் குறித்தும் அவை வராமல் காத்துக் கொள்வதற்கு உரிய வழிவகைகளும் இந்நூலில் சொல்லப்பட்டுள்ளன.

துன்பம் நேரும்போது ஒரு மனிதன் அழுது கண்ணீர் விடுகிறான். அந்தக் கண்ணீரை அவனது துயரத்துக்கு வடிகால் மட்டுமல்ல-நரம்பு நோய், இருதய நோய், இரத்த அழுத்தம், அல்சர் போன்ற பலவித நோய்கள் நீங்குவதற்குப் பயன்படும் சஞ்சீவியாகவும் திகழ்கிறது என்ற செய்தி இந்நூலில் கிடைக்கிறது.

நாம் அன்புடன் நமது இல்லத்தில் வளர்த்துவரும் பிராணிகளில் எது எது எந்தெந்த நோயைப் பரப்புகிறது என்ற விவரமும் இதில் சொல்லப்பட்டிருக்கிறது.

எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்ற டாக்டர்களுக்கு இணையாக மருத்துவம் குறித்து இந்நூலில் எழுதியிருக்கிறார் நூலாசிரியர். இனிய எளிய நடை, நூலைப் படிக்கத் தூண்டுகிறது.

—தமிழ்ப்பித்தன்

## பேரறிஞர் பெர்னார்ட்ஷா

ஆசிரியர்: முல்லை பி.எல். முத்தையா,
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
41-பி.சிட்கோ எஸ்டேட்,
சென்னை-600 098.
விலை: ரூ.10 பக்கம்: 148

உலகச் சிந்தனையாளர்களில் பேரறிஞர் பெர்னார்ட்ஷா மிகச் சிறப்பான இடத்தைப் பெறுகிறார். 'சிரிக்க -சிந்திக்க' என்பதே அவரது கொள்கையாக இருந்தது. அவரது எழுத்தும் பேச்சும் நகைச்சுவை கலந்ததாக இருந்தது. அதே சமயத்தில் சிந்தனைக்கு விருந்தூட்டுவதாகவும் இருந்தது.

நாடகத்துறையில் பெரும் புகழும் பெற்ற பெர்னார்ட்ஷா, தம் இளமைக் காலத்தில் நூலகமே கதியெனக் கிடந்தவர். நூலக அறிவே அவரைச் சிறந்த மேதையாக்கியது. அவரது வாழ்க்கை வரலாறு சுவையானது. படிப்பினை ஊட்டுவது. வாழ்க்கையில் முன்னேற நினைப்பவர்கள் இந்நூலைப் படிக்க வேண்டும்.

—பி.வி. கிரி

## புகழ்பெற்ற புதிர்க் கதைகள்

ஆசிரியர்: எ.சோதி,
வெளியீடு: நன்மொழிப் பதிப்பகம்
53, அரவிந்தர் வீதி, புதுச்சேரி.
விலை ரூ. 7.50. பக்கம் 96.

வெறுங்கதைகளைவிட, புதிர்க் கதைகள் நம் அறிவுக்கு வேலை தருவன. இந்நூலில் இடம்பெற்றுள்ள குட்டிக்கதைகள், கதையின் முடிவில் கேள்விக்குறியோடு முடிவை நம்மிடமே விட்டுவிடுகின்றன. கேள்விக்கு விடை தெரியாமல் விழிப்பவர்களுக்கு விடையும் நூலின் இறுதியிலே கொடுக்கப்பட்டிருக்கிறது.

பல கதைகள் நமக்குத் தெரிந்தவை என்றாலும், அவை புதிய வடிவில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்நூலில் உள்ள 40 கதைகள் குழந்தைகளைக் குதூகலிக்கச் செய்யும்.

—பி.வி. ஜி.

## புதிர்க் கணக்குகள்

ஆசிரியர் : பேராசிரியர் எ.சோதி, எம்.ஏ., பதிப்பாளர் : நன்மொழிப் பதிப்பகம்,: 56. அரவிந்தர் வீதி, புதுச்சேரி-605 001.

பக்கம்: 88. விலை ரூ. 7.50

மாணவ-மாணவிகளிடையிலும், கிராமப்புறங்களிலும் விடுகதைகள் வழக்கிலிருப்பதைக் காண்கிறோம்; கதைகளாக மட்டுமன்றிக் கணக்குகளாகவும் அவை இருப்பதுண்டு. அப்படிப்பட்ட புதிர்க் கணக்குகளின் தொகுப்பே இந்த நூல்.

சிறுவர் சிறுமியர் மட்டுமன்றிப் பெரியவர்களும் படித்தின்புறத் தக்க பல புதிர்க் கணக்குகள் (60) இப்புத்தகத்திலே இடம் பெற்றுள்ளன. செவியில் விழுந்தவை மட்டுமல்லாமல் பல்வேறு ஆங்கில-தமிழ்ப் புத்தகங்களின் துணை கொண்டும் இந்நூலை உருவாக்கியிருப்பதாக முன்னுரையில் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

கணிதத் தேர்ச்சி பெற்றவர்கள் மட்டுமல்ல; பொது அறிவுள்ளாரும் புரிந்து கொள்கிற விதத்தில், கதை வடிவாகவும் சில கணக்குகள் இதில் தரப்பட்டுள்ளன. முக்கியமானவற்றிற்குப் படங்களும் போடப்பட்டுள்ளன.

எல்லாத் தரப்பினரும் ரசித்துப் படிக்கத் தக்க இனிய நூல் இது.

—பி எல்.ஆர்.

## கல்விச் சிந்தனைகள்

ஆசிரியர் :
செ. அரங்கநாயகம்
வெளியீடு : பத்மா பதிப்பகம்,
31, போஸ்டல் காலனி,
முதல் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை 33
விலை ரூ. 16.00 பக்கம் 172

முன்னாள் தமிழகக் கல்வி அமைச்சர் அவர்கள் பல ஊர்களில், பல பல்கலைக்கழகங்களில் ஆற்றிய பேருரைகளின் தொகுப்பு.

கல்வியைப் பொறுத்த மட்டில் மாணவர், பெற்றோர் ஆசிரியர்களின் பங்கினையும், பொறுப்புகளையும் தன் உரைகளில் தெளிவாக விளக்கியுள்ளார்.

பயிற்று மொழி, தேர்வுமுறை, பாடத்திட்டம் போன்ற கல்வித் துறையின் பல்வேறு துறைகளில் சமுதாயத்துக்குத் தேவையான பல மாற்றங்கள் பற்றியும் குறிப்பிடுகிறார்.

கல்வி, மனித ஆற்றல், ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளில் சோவியத் யூனியனைப் புகழ்கிறார், பின்பற்றலாமென்கிறார்.

அவரின். உரையினைக் கேட்க வாய்ப்பில்லாதவர்கள், அவரது ஆக்கப்பூர்வமான முற்போக்குச் சிந்தனைகளை இந்நூலில் படித்து உணரலாம்.

—அ. மருதவிநாயகம்.


### உயிரில்லாத உடம்பு!

*நூல் நிலையம் இல்லாத வீடு உயிரில்லாத உடம்பு போன்றது.

—தாமஸ் ஆல்வா எடிசன்

*சில புத்தகங்களைச் சுவைத்துப் பார்க்க வேண்டும்; சிலவற்றை அப்படியே விழுங்கிவிட வேண்டும்; சிலவற்றை மட்டும் நன்கு சுவைத்து சீரணம் செய்ய வேண்டும்.

—பேக்கன்



# கல்வியும் பெண்களும்

—பண்டித ஜவகர்லால் நேரு

**பெ**ண்கள் கல்விப் பயிற்சிபெற வேண்டுமென்ற ஆவல் இன்று சமுதாயத்தில் பெருகியிருக்கிறது. இந்த விழிப்புணர்ச்சிவரவேற்கத் தக்கதாகும்.

சமுதாயத்தில் பெண்கள் பெறும் கல்வியின் பயன், அவர்கள் குடும்பத்தோடு நின்றுவிடாமல் சமுதாய முழுமைக்கும் பயன்படு கிறது. ஒரு குடும்பத்தை மிகச் சிறந்த முறையில் வைத்துக் கொள்வதே உயர்ந்ததொரு சமுதாயப்பணியாயிற்றே! அந்தப் பணியை ஒழுங்குறச் செய்பவள் பெண்ணல்லவா! அவள் மனத் தெளிவுடன் செயற்படவேண்டி யது அவசியமல்லவா! அந்த மனத்தெளிவை அளிப்பது கல்வி என்பதில் இரண்டு கருத்துக்கள் ஏது!

பெண் கல்வி என்று சொல்லும் போது ஒரு விஷயத்தை நான் சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன். பெண்கள் இன்று பெரும்பாலும் ஏதாவது உத்தி யோகம் பெறும் நோக்கத்தில் தான் கல்விப் பயிற்சியை விரும்பு கிறார்கள். இது தவறு என்றோ, குற்றம் என்றோ நான் கூற வில்லை. ஆனால் இது மட்டுமே கல்வியின் இலட்சணமாகி விடக் கூடாது.

இந்தக் காலத்தில் உலகத்தின் எந்த மூலையிலும் ஒதுங்கி வாழ்ந்துவிட முடியாது. உலகத்தில் எங்கோ ஓர் இடத்தில் நடக்கும் ஒரு காரியம், மறு கோடியில் உள்ள சாமானிய மனிதர்களையும் பாதிக்கும் அளவுக்கு விவகாரம் பெருகி விட்டது.

ஒவ்வொரு பெண்ணும் பொது அறிவு ஞானம் பெற்று விளங்க வேண்டும். நாட்டின் சூழ்நிலையைத் தெளிவுறப் புரிந்து கொள்ளும் சக்தியைப் பெற வேண்டும். உலகம் எப்படிப் போகிறது, உலகத்தில் தோன்றும் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் என்ன என்பதையெல்லாம் கூர்ந்து நோக்கிப் புரிந்து வைத்துக் கொள்ளும் கூர்மதி வேண்டும்.

இந்த நிலையில் வெளி உலகத்தைப் பற்றி ஒரு சிறிதும் கவலைப் படாமல் தங்கள் குடும்பத்தோடு, வீட்டோடு முடங்கிக் கிடந்து வாழ்ந்துவிட முடியாது. ஆகவே தான் ஆண்களைவிட பெண் களுக்கு வெளி உலகத்தைப் பற்றிய சரியான ஞானம் இருக்க வேண்டும் என்று நான் கருது கிறேன்.

இந்தியப் பெண்கள் பொது நலத் தொண்டில் பெருவாரியாக ஈடுபடுவதில்லை என்று ஒரு குறை சொல்வார்கள். இந்தக் குறைக்கு அடிப்படையே, அடுத்த வீட்டைப் பற்றி அக்கறை கொள் ளாது தங்கள் வீட்டோடு முடங் கிக் கிடக்கும் நம் பெண்களின் பண்புதான்!

ஆகவேதான் வெறும் உத்தி யோக நோக்கத்தோடு கல்வி பயிலுவதோடு நின்றுவிடாமல், அறிவு வளர்ச்சி நோக்கத்தோடும் நம் பெண்கள் கல்வி பயில முற்பட வேண்டுவது அவசியம்.



# நேருவின் உயில்



பண்டித நேரு அவர்கள் 1954 ஜூன் 21 அன்று விருப்ப ஆவணம் ஒன்று எழுதி வைத்திருந்தார். அந்த ஆவணத்தைப் பின் மாற்றவோ திருத்தவோ இல்லை. எனவே, அதுவே அவர் தம் இறுதி விருப்ப ஆவணமாயிற்று. அதன் ஒரு பகுதி கீழே கொடுக்கப் பெற்றுள்ளது:

''இந்திய மக்களின் பேரன்பையும் பெருமதிப்பையும் நான் பெருமளவில் பெற்றுள்ளேன். அதில் ஒரு சிறு அளவுகூட நான் அவர்களிடம் திரும்பக் காட்ட முடியாது. மேலும் ஈடிணையற்ற அன்புக்குக் கைம்மாறு செய்வது என்பதும் இயலாததொன்று.

''இந்திய மக்கள் பலரைப் பாராட்டியிருக்கிறார்கள். சிலரைப் போற்றி வணங்கியிருக்கிறார்கள். ஆனால் இந்தியாவின் பல தரப்பட்ட மக்களும் என் மீது பெருத்த அளவு அன்பு சொரிந்துள்ளனர். இதைக்கண்டு என் மகிழ்ச்சி பொங்கிப் பெருகியது. என் அவா ஒன்றே ஒன்றுதான். அது என் வாழ்நாளின் எஞ்சிய பகுதியிலும் என் நாட்டினருக்கும் அவர்கள் காட்டும் அன்பிற்கும் நான் தகுதியுடையவனாகத் தொடர்ந்து நடப்பதுதான்.

''என்னுடைய கணக்கற்ற தோழர்களுக்கும் என்னுடன் பணி செய்வோர்க்கும் நான் இன்னும் தனிப்பெருங் கடப்பாடுடையேன்.

''பல பெருமுயற்சிகளிலும் பணிகளிலும் நாங்கள் ஒன்றாகப் பங்கெடுத்துள்ளோம். அதில் கிடைத்த வெற்றிகளையும் வேதனைகளையும் பகிர்ந்துள்ளோம்.

''நான் இறந்தபின் எனக்காகச் சமய அடிப்படையில் இறுதிச் சடங்குகள் எவையும் செய்ய வேண்டாம் என்று மனப்பூர்வமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இவை போன்ற சடங்குகளில் எனக்கு நம்பிக்கை இல்லை. பெயரளவில் அவற்றில் ஈடுபடுவதுகூட வெளிவேடமாகவும் நம்மையும் பிறரையும் ஏமாற்றும் முயற்சியாகவும் அமையும்.''

''இறந்தபின் என் உடலை எரியூட்டவேண்டுமென்பதே என் விருப்பம். அயல்நாட்டில் இறந்துவிட்டால் உடலை அங்கேயே எரித்துவிட்டுச் சாம்பலை மட்டும் அலகாபாத் கொண்டு வரவேண்டும். ஒரு பிடி சாம்பல் கங்கையில் தூவப்படவேண்டும். சாம்பலின் பெரும்பகுதியைக் கீழ்க் கண்டவாறு செய்ய வேண்டும். சாம்பல் சிறிது கூடக் காப்பாற்றி வைக்கப்படக் கூடாது.

''அலகாபாத்தில் ஓடும் கங்கையில் ஒரு பிடிச் சாம்பலைப்போட வேண்டுமென்பதில் சமய நோக்கம் ஒன்றும் கிடையாது. இளமையிலிருந்தே அலகாபாத்தில் ஓடும் கங்கை, யமுனை மீது பற்று மிகவுடையவன் நான். நான்வளர வளர இந்தப் பற்றும் வளர்ந்து கொண்டே வந்திருக்கிறது.

''பருவங்களின் மாறுதல்களுக்கேற்ப நதிகளின் போக்கும் மாறுபடுவதை நான் கண்டிருக்கிறேன். அப்பொழுது பன்னெடுங்காலமாக அந்த நதியோடு ஒட்டி வளர்ந்து வந்துள்ள வரலாறு, புராணம், மரபு, பாட்டு, கதை ஆகியவற்றை நினைத்துப் பார்ப்பதுண்டு.

''இந்தியாவில் வற்றாத நதியான கங்கை, மக்களால் பெரிதும் விரும்பப்படுகிறது. அதைச் சுற்றியே பல இனமக்களின் நினைவுகளும், அவர்களுடைய ஆர்வங்களும், அச்சங்களும், அவர்களுடைய வெற்றிப் பாடல்களும் அவர்களுடைய வெற்றி தோல்விகளும் பின்னிப் பின்னிக் கிடக்கின்றன.

''இந்தியாவின் நெடுங்காலப் பண்பாட்டிற்கும் நாகரிகத்திற்கும் அது ஒரு சின்னமாக விளங்கு



பிஞ்சுப் பருவத்தில் நேரு



கிறது. அந்நதி ஓடிக் கொண்டேயிருந்தாலும், மாறிக் கொண்டேயிருந்தாலும் அது என்றும் மாறாத நதியாகவே உள்ளது. அது என்னை என்றென்றும் கவரும். இமயத்தின் பனிபடிந்த சிகரங்களையும் ஆழ்ந்தகன்ற பள்ளத்தாக்குகளையும் என் வாழ்வும் பணியும் உருவாவதற்கிடமாக அமைந்த வளமிக்க சமயவெளியாகவும் அது நினைவூட்டுகிறது.

''கங்கை காலை இளவெயிலில் ஒளி வீசிக் களிநடமிடுகின்றாள். மாலை நிழலிலே கறுத்துஇருண்டு மறை பொருளாய் இருள் பரவும்பொழுது இனம் புரியாத அச்சத்தை ஊட்டுபவளாய் மாறுகிறாள். குளிர் காலத்தில் குறுகி மென்னடையிட்டு ஒயிலாக ஓடுகிறாள். இந்தியாவில் கடந்த கால நினைவில் தோன்றி, நிகழ்கால நனவாக ஓடி, எதிர்காலக் கனவுக் கடலில் கலக்கச் செல்லும் கன்னியாகக் கங்கை காட்சியளிக்கிறாள்.

''கடந்த காலத்தின் மரபுகளையும் பழக்க வழக்கங்களையும் நான் கைவிட்டுவிட விரும்புகிறேன். இந்தியாவும் தன்னைப் பிணைத்துள்ள தளைகள் அனைத்தையும் உடைத்தெறிந்து விடுதலையடையவேண்டுமென்று விரும்புகிறேன். மக்களுக்குள் புலபிரிவை உண்டு பண்ணி அவர்களில் பெரும்பாலோரைத் தரம் தாழ்த்தி, உடலும் மனமும் தன்னிச்சைபோல் வளரவிடாது தடுக்கும் நிலை மாறவேண்டுமென நான் விரும்புகிறேன். ஆயினும் கடந்த காலத்திலிருந்து என்னை முழுதும் துண்டித்துக் கொள்ள விரும்பவில்லை.

''மாபெரும் மரபின் வழியில் ஒருவனாகத் தோன்றியதற்கு நான் பெருமைப்படுகிறேன். வரலாற்றின் தொடக்க காலத்திலிருந்து தொடர்ந்து வரும் சங்கிலிப் பிணைப்பில் ஓர் இணைப்பாக நானும் மற்ற எல்லோரையும் போல இருப்பதை எண்ணிப் பெருமைப்படுகிறேன். எனக்கு இந்தப் பிணைப்பை உடைக்க விருப்பமில்லை.

''ஏனெனில் நான் அதைப் போற்றிக் காத்து அதிலிருந்து ஊக்கம் பெறவும் விரும்புகிறேன். என்னுடைய இந்த அவாவை வெளிப்படுத்தவும் இந்தியப் பண்பாட்டின் பெருமைக்கு நான் செய்யும் இறுதி வணக்கமாகவும் என்னுடைய சாம்பலில் ஒரு பிடியை அலகாபாத்தில் ஓடும் கங்கை நீரில் போடவேண்டும் என்று என் வேண்டுகோளை எழுப்புகிறேன். இந்தியாவை அலைகளால் அரவணைத்துக் கிடக்கும் பெருங்கடலுக்கு, அச்சாம்பலைக் கங்கையாறு சுமந்து செல்லுமாக!

மீதியுள்ள சாம்பலை வான்மீது ஊர்தியில் கொண்டு சென்று இந்தியாவின் உழவர்கள் பாடுபடும் வயல்கள் மீது தூவி, அச்சாம்பல் நாட்டின் மண்ணோடு மண்ணாக கலந்து மக்கிப் போய் இந்திய மண்ணிலிருந்து பிரிக்க முடியாதவாறு இரண்டறக்கலக்கவேண்டும் என்பதே என் அவா.

---



சமுதாயத்தில் நலிவுற்றோர் நல்வாழ்வு பெறத் துணைபுரிவதே நமது குறிக்கோள்களில் ஒன்று. கூட்டுறவு அணுகுமுறை இதற்கு உறுதுணை புரிகிறது. அல்லது அந்த வழியில் துணை புரிய வேண்டும்.

—பண்டித ஜவகர்லால் நேரு

# கூட்டுறவுத் துறையில் ஓர் சகாப்தம்

## 1905 - 1986

"கூட்டுறவே நாட்டுயர்வு"

அறிவியல் வளர்ச்சியும், தொழில் வளமும் நம் நாட்டை இருபத்தி யொன்றாம் நூற்றாண்டிற்குத் தகுந்த முறையில் நடத்திச் செல்லத் தயார் செய்துகொண்டிருக்கின்றன.

இம் மாபெரும் வளர்ச்சியை மென்மேலும் ஊக்குவிப்பதற்கும், அடித்தள மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கும், வேளாண்மை மற்றும் கைத்தறித் தொழில் முன்னேற்றத்திற்கும் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி, உங்கள் ஈடுபாட்டுடன் தன் எண்பது ஆண்டுக் காலப் பொறுப்புமிக்க நற்பணிகளைச் செவ்வனே தொடர்கின்றது.

இந்த சகாப்தம், பெரும் சாதனையின் ஆரம்பம்.




**ஆ. சண்முகம்**
தனி அலுவலர்.

**தமிழ்நாடு மாநிலக்
கூட்டுறவு வங்கி லிட்.**
233, என். எஸ். சி. போஸ் சாலை,
சென்னை - 600 001.

# மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை



மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் மூலம்

*மீன்வளர்ப்பில் ஈடுபடுவீர்!*
*மிகுந்த வருவாய் ஈட்டிடுவீர்!''*

நம் நாட்டு மக்களிடையே அதிக அளவில் காணப்படும் புரதச்சத்துப் பற்றாக்குறையை நீக்குவதில் மீன் முக்கிய பங்கேற்கிறது. மீனில் புரதம், உயிர்ச்சத்துக்கள், கொழுப்பு, தாதுப்பொருட்கள் ஆகியவை நிரம்பியுள்ளன. மீனின் புரதம் எளிதில் செரிக்கும் தன்மையுள்ளது. மனிதனுக்குத் தேவையான இன்றியமையா அமிலோ அமிலங்கள் அனைத்தும் மீனின் புரதத்தில் அடங்கியுள்ளன. அதனால் தான் குழந்தைகளுக்கும், கருவுற்ற பெண்களுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் சத்துணவிற்காக மருத்துவர்களால் மீன் உணவு பரிந்துரை செய்யப்படுகிறது.

**மீன்வளர்ப்பு மிகுந்த வருவாய் ஈட்டித்தருவது**

அண்மைக்காலம் வரை நமது மாநிலத்தில் உள்ள ஏரிகள், குளங்கள், குட்டைகள், கண்மாய்கள் ஆகியவற்றில் நீர் வற்றும் காலங்களில் மட்டுமே அவற்றில் இயற்கையாக வளரும் மீன்கள் பிடிக்கப்பட்டு உணவாகப் பயன்படுத்தப்பட்டாலும், தற்பொழுது புதிய தொழில் நுட்ப முறையில் மேற்கண்ட நீர்நிலைகளில் பொருளாதார ரீதியில் அதிக வருவாய் ஈட்டித்தரும் 'மீன்வளர்ப்பு' முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் புதிய மீன்வளர்ப்பு மூலம் எளிதாக எக்டேர் ஒன்றுக்கு 1,000 கிலோ முதல் 3,000 கிலோ வரை மீன் உற்பத்தி செய்து ரூ. 5,000 முதல் ரூபாய் 15,000 வரை நிகர இலாபம் பெற முடியும். இம்முறை கூட்டு இன மீன்வளர்ப்பு என அழைக்கப்படுகிறது. இம்முறையில் கட்லா, ரோகு, மிர்கால், சாதாக்கெண்டை, வெள்ளிக் கெண்டை மற்றும் புல்கெண்டை ஆகிய ஆறு இனங்கள் கூட்டாக வளர்க்கப்படுகின்றன.

**தென்னார்க்காடு மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை:**

இம்மாவட்டத்தில் 50,973 எக்டேர் பரப்பளவு உள்ள உள்நாட்டு நீர்நிலைகள் இருப்பதைக் கண்டறிந்து அவற்றிலிருந்து சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு ஒரு எக்டேரில் 25 கிலோ மீன் பிடிக்கப்படுவதை மாற்றி 3,000 கிலோவுக்கு உயர்த்தவும், படித்து வேலையற்றோருக்கும், மீன் வளர்ப்பில் ஊக்கம் உள்ளவர்களை ஊக்குவித்து சுய வேலை வாய்ப்புத் திட்டத்தை உருவாக்கும் நோக்கத்துடன் மத்திய, மாநில நிதி உதவியுடன் 1-12-1980 அன்று கடலூரில் இம்முகமையின் அலுவலகம் திறக்கப்பட்டது.

இதுவரையில் கடலூர், சிதம்பரம், மற்றும் காட்டுமன்னார்கோயில் வட்டங்களில் உள்ள ஆறு பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள குளங்களை எடுத்து மீன் வளர்ப்பு செய்து வந்தது. இவ்வாண்டில் மேலும் இதர பஞ்சாயத்து யூனியனில் உள்ள குளங்களை முகமை எடுக்க ஆய்வு நடத்தி வருகிறது.

**இம்மாவட்டத்தில் முகமை ஆற்றும் பணிகள்:**

1. மீன் வளர்ப்புக்கு ஏற்ற நீர்நிலைகளை நீண்டகாலக் குத்தகைக்கு முகமை எடுத்து, அதில் மீன்வளர்ப்பை ஏற்று நடத்த, படித்த வேலையில்லா இளைஞர்களுக்குச் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஊக்குவித்தல்.

2. மீன் வளர்ப்பில் நவீன பயிற்சி அளித்தல்.

3. நீர்நிலைகளைச் சீர்திருத்தவும், தேவையான உயர்ந்த ரக மீன் குஞ்சுகளை வழங்கவும், இடுபொருள் மற்றும் குளச் சீரமைப்புக்கான கடன்களை வங்கியின் மூலம் பெற்று வழங்குதல்.

4. மீன்வளர்ப்பிற்குத் தேவையான தொழில் நுணுக்க உதவிகள் செய்தல்.

5. மீன்பிடித்தல் மற்றும் விற்பனைக்கு ஏற்பாடு செய்தல்.

6. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மானியம் பெற வழி வகை செய்தல்.

**இதுவரை இம்முகமை ஆற்றிய பணிகள்:**

1. மீன்வளர்ப்புக்கு முகமை வழங்கப்பட்ட குளங்களின் எண்ணிக்கை—390. அவற்றின் பரப்பளவு—304.6 எக்டேர்.
2. பயன்பெற்ற மீன்வளர்ப்போர்—420
3. பயிற்சி அளிக்கப்பட்டோர்—272.
4. சீரமைக்கப்பட்ட குளங்கள்—170.
5. குள சீரமைப்புக்கு வங்கி வழங்கிய கடன் ரூ. 10,72,634.
6. குளச்சீரமைப்பிற்கு வழங்கப்பட்ட அரசு மானியம் இம்முகமையின் மூலம் ரூபாய் 1.87 இலட்சம்.
7. வழங்கப்பட்ட உள்ளீட்டுக் கடன் முகமை மூலம் ரூ. 025 இலட்சம். வங்கியின் மூலம் —ரூ. 10.84 இலட்சம்.
8. உள்ளீட்டுக் கடனுக்கு வழங்கப்பட்ட அரசு மானியம் முகமையின் மூலம் —ரூபாய் 0.50 இலட்சம்.
9. வளர்ப்பிற்கு வழங்கப்பட்ட மீன் குஞ்சுகள் 42.72 இலட்சம்.
10. முகமையின் குளங்களில் மீன் உற்பத்தி —559.60 டன்கள்.
11. அவற்றின் மதிப்பு ரூபாய் 47.40 இலட்சம்.
12. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட உள்ளீட்டுக் கடனுக்கான மானியம் — ரூ. 0.72 இலட்சம்.

இத்திட்டத்தின் மூலமாக 420 பேருக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதுடன் எக்டேருக்கு 25 கிலோவாக இருந்த உற்பத்தியை மாற்றி எக்டேருக்கு 1,000 கிலோவாக கடந்த ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் இதனை 1,500 கிலோவிற்கு உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணை:**

குறிஞ்சுப்பாடி பஞ்சாயத்து யூனியனில் குள்ளஞ்சாவடி அருகில் அகரம் மேற்குக் கிராமத்தில் மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணை அமைக்க 4 எக்டேர் நிலப் பரப்பு கையகப் படுத்தப்பட்டுள்ளது. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 4 இலட்சம் செலவில் இவ்வாண்டில் மீன் பண்ணை அமைக்கப்பட இருக்கிறது.

மத்திய மாநில அரசு நிதியுதவியுடன் அதே இடத்தின் அருகில் 6.28 இலட்ச மதிப்பீட்டில் அமைக்கப்படவிருக்கும் மற்றொரு மீன்குஞ்சுப் பண்ணைக்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு கட்டுமானப்பணி தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த ஆண்டில் முகமை மீன்வளர்ப்பவர்களில் ஆர்வம் உள்ள 12 நபர்கள் நாற்றங்கால் மற்றும் மிதவைக் கூடுகளில் நுண்மீன் குஞ்சுகள் வளர்த்து, முகமைக்கு விற்பனை செய்ததில் சராசரியாக ஒரு நபருக்கு ரூ. 2,000 ஒன்றரை மாதத்தில் நிகர லாபமாகக் கிடைத்துள்ளது. இந்த ஆண்டில் முகமையின் சுய தேவையைப் பூர்த்தி செய்யும் அளவில் மீன்குஞ்சுகள், நாற்றங்கால் மற்றும் மிதவைக்கூடுகளில் வளர்த்து முகமை மீன்வளர்ப்போர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதனால் மீன்குஞ்சு உற்பத்தி இலாபத்துடன், மீன்குஞ்சுகள் விற்பனையின் மூலம் சராசரியாக ரூ. 3,000 நிகர லாபமாகக்கிடைக்கவும், அவர்களுடைய வாழ்க்கைத் தரம் மேலும் உயர்த்தவும், முகமை வழி காட்டியுள்ளது. நீலப்புரட்சியில் இந்த முகமை முன்னணியில் நிற்கிறது.

— ந. பாலையா,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
தென்னார்க்காடு மாவட்டம்.

## வள்ளுவர் வழங்கிய சொல்

காய் முற்றிக்கனிந்தால் கனி, காய்ப் பருவத்திற்கு முந்தியது பிஞ்சு எனப்படுகின்றது. திருவள்ளுவர் 'கருக்காய்' என்றார்.

''துனியும் புலவியும்
இல்லாயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று''

—என்பது குறள் (1306)

கருப்பிடித்து, ஆனால் 'கரு முற்றாத காய்' என்னும் பொருளில் இச்சொல் உருவாக்கப்பட்டுள்ளது. இச்சொல்லை முதன்முதலாகத் திருக்குறளில் காண்கின்றோம். காலப்போக்கில் கருப்பிடித்து, முற்றாமல் சாவியான நெல்பதர்க்கு இச்சொல் வழங்கப்படுவதாயிற்று.

நன்றி : தமிழ்ப் பல்கலைக்கழகச் செய்தி மலர்.

மாணவர் பக்கம்

# உங்களுக்குத் தெரியுமா?



கடலில் மூழ்குபவர்கள் (Divers) 540 அடி ஆழம் வரை செல்ல முடியும். 600 அடி ஆழத்திற்குக் கீழே, தகுந்த பாதுகாப்பு இல்லாமல் சென்றால் உயிருக்கு ஆபத்து.

திராட்சை விதையைக்கொண்டு கொடி அபிவிருத்தி செய்ய முடியாது. பதியங்கள் தயாரித்துத்தான் திராட்சைக் கொடி வளர்க்க முடியும்.

பம்பாய் நேரு ப்ளானட்டோரியத்தில் இருக்கும் எடை பார்க்கும் கருவிகளில் சூரியனில் சந்திரனில் நம்முடைய எடை எவ்வளவு இருக்கும் என்று அறிந்து கொள்ளலாம்.

1866-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் பௌர்ணமியே இல்லாமல் போய்விட்டது. உலகம் தோன்றிய நாளிலிருந்து இம்மாதிரி ஏற்பட்டதே கிடையாது. இனி ஏற்படப் போவதுமில்லை.

மனிதர்களைப் போலவே நண்டு, இறால் மீன் ஆகியவை உடம்பிலிருந்து வியர்வை போன்ற திரவத்தை வெளியேற்றுகின்றன.

இரஷ்யாவில் உள்ள நகரங்கள் மலைகள், ஆறுகள், ஏரிகள் இவற்றின் பெயர்களை மாஸ்கோ நகர வீதிகளுக்கு வைத்திருக்கிறார்கள்.

இரகசிய வழி (The Secret way) என்னும் ஆங்கிலக் கவிதையைப் பின்பற்றி எழுதப்பட்டது பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் மனோன்மணீயம்.

கி.மு. 321-ஆம் ஆண்டில் உரோமாபுரி மன்னன் கான்ஸ்டன்டைனால் ஞாயிறு விடுமுறை தொடங்கியது.

1909-ஆம் ஆண்டில் வட துருவத்தை பியர் என்பவரும், 1911-இல் தென் துருவத்தை அமூன் ஸென் என்பவரும் கண்டு பிடித்தார்கள்.

ஆசியாவிலேயே மிகப் பெரியதான 'டெலி கம்யூனிகேஷன்' பயிற்சி நிலையம் ஜபல்பூர் கன்டோன்மெண்டில் உள்ளது.

பாதாம் பருப்பை விடப் பச்சைப் பயறில் உணவுச் சத்து அதிகம். அதேபோல நிலக் கடலை, பாலையும் முட்டையையும் விடச் சத்து வாய்ந்தது.

'ஒய்போ' என்றால் நைஜீரியாவில் தனி மரியாதை உண்டு. அங்கு வசிக்கும் வெளிநாட்டு மக்களை நைஜீரியர்கள் இப்படித்தான் அழைக்கிறார்கள்.

குரல், துத்தம், கைகிளை, உழை, இளி, விளரி, தாரம்—இவை ஏழும் சங்கீத சப்தசுரங்கள் 'சரிகமபதநி' என்பவற்றின் தூய தமிழ் விளக்கச் சொற்கள்.

ஒருவருக்கு 50-ஆவது வயதில் பொன் விழாவும், 60-ஆவது வயதில் மணிவிழாவும், 80-ஆவ வயதில் முத்துவிழாவும் நடத்துவார்கள்.

—தொகுப்பு:
ஆர். எஸ். சுப்பிரமணியன்

## எண்ணமெல்லாம் இனிப்பவர்

### புலவர் தணிகை உலகநாதன்

தினது பிறந்த திருநாளை,
தங்கக் குழந்தைகள் திருநாளாய்,
மனது மகிழச் செய்தவர்யார்?
மனித குலத்தின் மாணிக்கம்!

நேரு அண்ணல் திருப்பெயரை
நெஞ்சில் வைத்தால் இனித்திடுமே
பேரும் புகழும் பெற்றவராம்
பெரிய பாரதத் திலகமவர்!

இன்றைய அரும்பே மலராகும்;
இன்றைய செடியே மரமாகும்;
என்றே எண்ணிக் குழந்தைகளின்
ஏற்றம் கருதிப் போற்றியவர்!

உலகம் அமைதி பெற்றிடவே
ஒவ்வொரு நாளும் உழைத்தவராம்
கலகம் பலவும் போக்கியவர்
கட்டிக் காத்தார் பாரதத்தை!

சத்தியம், தியாகம், சமரசமும்
தாமே உருவாய் வந்தவராம்
உத்தமர் அவர்வழி நடப்போமே
உலகில் நலமாய் வாழ்வோமே!



# அற்புதப் பொருள் அரக்கு!

**பி. வெங்கட்டராமன்**
**தொழிற்கூட மேலாளர்.**
**அரக்குத் தொழிற்கூடம்,**
**சென்னை.**

இன்றைக்கு ஏறக்குறைய நான்காயிரம் ஆண்டுகட்கு முன்பே மக்கள் அரக்கின் பயன்களைத் தெரிந்திருந்தனர் என்ற வியத்தகு உண்மையை நம் புராணங்கள் தெளிவாக்குகின்றன.

அரிய சிறிய பூச்சியினம் தாம் வாழும் மரக்கிளைகளின் மேல் தம்மைக் காக்க தம் உடலிலிருந்து சுரந்து பெருக்கும் பசைப் பற்றுள்ள, வெப்பத்தில் எளிதில உருகும் சிவப்பு, மஞ்சள் நிறம் கலந்த கழிவுப் பொருளே அரக்கு எனப் பெறும். இப்பூச்சியினம தம்மைச் சுற்றி சூழந்து கொள்ளும் இப்பொருளின் தனிக்குணங்களைக கண்ட மக்கள இதனைத் தம் பயன்பாட்டுக்கு உகந்ததாகக் கருதி, இதைத் தூண்டு முறையில் பயிராககவும் முனைந்தனர்.

அரக்கு என்பது யாது? குறிப்பிட்ட சில இன மரக்கிளைகளில மட்டும் வாழும் பூச்சியினமான Laciffer Lacca என்ற நுண்ணிய பூச்சி, விரல் வண்ணமே உள்ள கிளைகளில் பதிந்து, மரச்சாற்றினை உறிஞ்சி உண்ணவும், முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்யவும், தம் உடலில் இருந்து மென்மையான, எளிதில் உருகும், மிகவும் பசைப்பற்றுள்ள கழிவுப் பொருளைச் சுரநது தம்மைச் சுற்றிக் கூடுகள் கட்டிக் கொள்ளுகின்றன. இவை மழை மற்றும் வெப்பத்தால் பாதிக்கப் படாதவாறு கட்டியாகி, பூச்சிகட்குப் பாதுகாப்பு அளிக்கிறது. இவற்றைச் சேகரம் செய்து சுரண்டி எடுக்கப்படும் மேற்கூடுகள் மூல அரக்காகும். ( Brood Lac). இவற்றை மேன்மேலும் சுத்தம் செய்து பலவிதமான பயன்பாட்டுக்கும் உரிய அரக்காகச் செய்யப்படுகிறது.

நமது தமிழகத்தில் மதுரை, சேலம் பகுதியில் மிகச்சிறிதளவும் வட இந்தியாப் பகுதிகளில் மத்தியப் பிரதேசம், பீகார், மேற்கு வங்காளம், அசாம் போன்ற பகுதிகளில் பெருமளவும் பயிராக்கப் படுகிறது. அரக்குப் பூச்சிகள் பொதுவாகக் குசும் மரங்கள், கருவேல், அத்தி, ஆல மரங்கள் மற்றும் இலந்தை மரங்களில் கூடு கட்டி வாழும். இவையாவும் இப்பூச்சிகள் உறிஞ்சி உயிர் வாழத் தேவையான சத்து நீரை உள்ளடக்கிக் கொண்டுள்ள மரங்களாகும். இவை சுமார் 8 முதல் 15 ஆண்டுகள் வயது எய்தியவுடன் இவைகளில் அரக்குப் பயிராக்கத் தகுதி பெறுகின்றன.

பயிர் செய்யு முன் தேவையற்ற கிளைகளை வெட்டி நீக்கி, நல்ல இடை வெளியும் வெளிச்சமும் வருமாறு செய்யப்படுகிறது.

அரக்கு வாணிகத்தில் கீழ்க் கண்டவாறு பாகுபடுத்தப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

1. பொன்னிற அரக்கு
2. கிச்சிலிப் பழநிற அரக்கு
3. கருஞ்சிவப்பு நிற அரக்கு
4. அடர்ந்த, கருமை நிற அரக்கு ஆகியனவாம்.

முற்றிய அரக்குப் பயிரே அறுவடைக்குகந்ததாம். முற்றாத கூடுகளை அறுவடை செய்வதானது கூட்டினுள் வசிக்கும் பூச்சிகளைப் பாதிப்பதாகும். தக்க காலத்தில் தக்க முறைகளைப் பயன்படுத்திப் பெறும் அரக்கு பலவிதமாக மேன்மேலும் சுத்தம் செய்யப்பட்டு மாறுதல் பெறுகிறது.

அரக்கின் வகைகளாக முதன்மையானதாகக் கருதப்படுபவை:

1. குச்சிகளின் மேல் படர்ந்துள்ள பூச்சிகளோடு கூடிய கொம்பரக்கு.

2. குச்சியிலிருந்து செதுக்கிச் சேகரம் செய்யுப்பட்ட விதை அரக்கு அல்லது நொய்யரக்கு.

3. மேற்படி பெறப்பட்ட அரக்கினை மனித உழைப்பாலோ அல்லது இயந்திரங்களாலோ கழுவி சுத்திகரித்துத் தேவையான அளவு பசைப்பற்றுள்ளதாகவும் கரையக்கூடியதாகவும் அடைந்த செல்லாக் அரக்கு.

4. மென்மேலும் தேவைக்கேற்ப மெழுகு நீக்கி வெண்மையாக்கப்பட்ட அரக்கு.

**அரக்கைப் பதப்படுததும் முறை**

1. நொறுக்கித் தூய்மை செய்தல், அதிக நீர்பட்டு சுத்தம் செய்யப்படும் வண்ணம் துகள்களாக் கிடுதல்.

2. கழுவுதல் நொறுக்கிக் கலக்கப்பட்ட நொய்யாக்கியதில் கலந்துள்ள நீரில் கரையும் சாயங்கள், சர்க்கரைப் பொருட்கள், பூச்சியின் பகுதிகள் மரச்செதில்கள் மற்றும் நொறுக்கப்படாத அரக்குத் திசுக்களைக் கழுவி அகற்றும் முறை:

கழுவிய பின்னர், அரக்கு சிமிட்டிச் சாந்திடப்பட்ட வெளியில், நிழலில் காயவிடப்பட்டு மாறி மாறிப் புரட்டிக் களையப்பட்டு, உலர வைக்கப்படுகிறது. கழுவியதால் நீக்கப்படாத அசுந்தங்கள் சலித்தெடுக்கப்படுகின்றன. இயந்திரங்கள் உதவியால் மெழுகு அகற்றப்பட்ட அரக்கு சாயம் அகற்றிய அரக்கு ஆகியவையும் உற்பத்தி செய்யப்பட்டு வாணிபம் செய்யப்படுகின்றன.

இது பூச்சியின் கழிவுப் பொருளேயாயினும், அதில் அடங்கியுள்ள தனிப் பெருங்குணங்கள் கருதி, பலவகையிலும் அரக்கைப் பயன்படுத்தலாம். அவற்றின் பயன்கள் கீழ்க்கண்டவாறு அமையும்:

1. இசைத்தட்டுத் தொழில், 2. மின்கசிவுக் காப்புப்பொருள்கள் 3. காப்புப் பூச்சுகள் 4. மேற் பூச்சுக்கான பாலீஷ் 5. அழகுப் பொருட்கள் 6. சாராய மேற் பூச்சுத்தொழில் 7. முத்திரை அரக்குகள் 8. சிமிட்டி மற்றும் ஒட்டும் பொருள்கள் 9. அச்சுத் தொழில் 10. மின் விளக்கு ஆகியவை முதன்மையான பயன்களாம்.

காகிதம், மெருகூட்டல், மருந்துகள், நகல் பூச்சுகள் பற்பசைகள் நூற்கூம்புகள் பூச்சு, வெடிப்பு மருந்துகள் மேல் பூச்சு, நகைத் தொழில், கண்ணாடிப்பூச்சு, மெழுகு, வண்ணக் குச்சிகள், காலணித் தொழில் ஆகியவைகளிலும் அரக்கு பெரும்பான்மையாகப் பயன்படுகிறது.

மூல ஏற்றுமதிப் பொருளாக விளங்கும் அரக்கு பெரும் அந்நியச் செலாவணியையும் நமது அரசுக்கு ஈட்டித் தருகிறது. தற்காத்துக் கொள்ளச் செய்யப்படுகின்ற ஆனால் பிறரை பெருமளவில் அழிக்கச் செய்யப்படும் படைக்கலன்கள், வெடிகுண்டுகள் போன்றவற்றை வைத்துக் காக்கும் காகித உறைகளின்மேல் தீட்ட இந்தச் சாராய அரக்குக் குழம்பு பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இயற்கையளிக்கும் இவ்வற்புதப்பொருளை ஆக்கத்திற்காகவே மனிதன் பயன்படுத்தினால், ஏற்படும் பயன்கள் மிகப் பலவுண்டு.




# அன்னை இந்திராவுக்கு அஞ்சலி

மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களை நினைவு கூரும் வகையில் அக்டோபர் 31-ஆம் நாள் தேசிய மறு சமர்ப்பண நாள் தமிழக அரசின் சார்பில், ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு வந்திருந்தோரை தலைமைச் செயலர் திரு ஆ. பத்மநாபன், இ.ஆ.ப. வரவேற்றார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

''மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி அன்னை இந்திராகாந்தி அவர்களை நினைவு கூரும் வகையில் நாடே இன்று மறு சமர்ப்பண நாளைக் கொண்டாடுகிறது. அன்னை இந்திரா காந்திக்கு அஞ்சலி செலுத்தவும் நாட்டுக்கு நம்முடைய பணியை அர்ப்பணிக்கவும் இங்கே கூடியிருக்கிறோம்.



''ஏழை மக்களிடம் அவர் கொண்டிருந்த அன்பு - இந்திய நாட்டிடம் அவர்கள் கொண்டிருந்த பற்று, உலக அமைதிக்கு அவர்கள் ஆற்றிய தொண்டு எல்லாம் இந்திய வரலாற்றிலே மட்டுமல்லாமல் உலக வரலாற்றிலேயே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும் சிறப்புப் பெற்றவை ஆகும். நம்முடைய நாட்டையும் தமிழகத்தையும் மேலும் வளமடையச் செய்ய இந்நாளில் நாம் உறுதி எடுத்துக் கொள்வோமாக.''

திரு செ. கு. தமிழரசன் எம். எல். ஏ. உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''இந்த நாடு இன்னமும்கூட எத்தனையோ மதங்களாலும் சாதிகளாலும் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இந்த தேசிய மறு சமர்ப்பண நாளிலே அன்னை இந்திராவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நம்மிடையே உள்ள இந்த வேறுபாட்டை ஒழிப்பதில் தீவிரமாகப் பணியாற்றுவதுதான் இந்த தேசத்துக்கும் அன்னை இந்திராவுக்கும் உண்மையிலேயே செலுத்துகிற அஞ்சலியாக இருக்கக்கூடும்.''

டாக்டர் எச். வி. அண்டே எம். எல். சி. உரையாற்றுகையில் குறிப்பிட்டார் :

''இந்த நாளில் நாம் சிந்திக்க வேண்டியது-எப்படிப்பட்ட உன்னதமான ஒரு தியாகத்தை அன்னை இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதை நாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.''

திரு. குமரி அனந்தன் எம்.எல்.ஏ. உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது :

''ஒரு பெண் எதை எதை விரும்புவாளோ அதை அதை எல்லாம் தன்னுடைய குடும்பத்தைப் பொறுத்தவரைஇந்திரா இழந்திருக்கிறார். தான் இறந்ததற்குப் பிறகு தன் கணவன் இருக்க வேண்டும். கணவனுக்கு முன்னால், தான் இறக்க வேண்டும் என்று ஒரு இந்தியப் பெண் விரும்புவாள். அந்த வாய்ப்பு இந்திராவுக்குக் கிடைக்கவில்லை. பெரோஸ் காந்தி முதலிலேயே போய்விட்டார்! தன்னுடைய பிள்ளை தன்னைக் காப்பாற்றுவதற்கு இருக்க வேண்டும் என்று சொல்வார்கள்; ஒரு பிள்ளை அவர் வாழ்ந்து கொண்டிருக்கும் போதே விமான விபத்திலே போய் விட்டார். இவைகளையெல்லாம் பார்க்கும்போது குடும்பத்திலே அவருக்கு ஏற்பட்ட சோதனை ஒருபுறம்; அதனாலே அனுபவித்துக் கொண்டிருந்த வேதனை ஒருபுறம். இத்தனைக்கும் மத்தியிலேதான் பாரதத்தை காப்பதிலே துணிந்து நின்றார் அந்தப் பெண்மணி''.

திரு. ஏ. கே. ஏ. அப்துல்சமத் எம். எல். ஏ. அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''இந்தியப் பேரரசினுடைய பிரதம அமைச்சராக ஏற்றம் பெற்று, இந்தியாவினுடைய தலைவியாக மாத்திரமல்லாமல் விடுதலை பெற்ற ஒரு நூற்றுககும்மேற்பட்ட நாடுகளினுடைய-அணிசேரா நாடுகளுடைய அருந்தலைவியாகவும் உருப்பெற்று, அவருடைய முழு ஆற்றலும் உலகமெலாம் அறியத்தக்க வகையில் அரிய பணிகளை ஆற்றி உலகமெலாம் வியக்கக்கூடிய ஒரு வீராங்கனையை நம்முடைய நாடு தலைவியாகப் பெற்றிருக்கிறது என்ற பெருமித உணர்ச்சியோடு நாமெல்லாம் நடமாடிக்கொண்டிருந்த ஒருகால கட்டத்தில், மேலும் நீண்ட காலத்திற்கு வழி காட்டக் கூடிய ஒரு தகுதியும் திறமையும் பெற்ற ஒரு தலைமை உலகளாவிய தலைமையாக உருவாகி வருகிறது என்று உலகத்தினுடைய பெருந்தலைவர்களெல்லாம் கணித்துக்கொண்டிருந்த ஒரு நாளில் - அவர் திடீரென்று நம்மிடமிருந்து பிரிக்கப்பட்டார்.''

திரு எம். கல்யாணசுந்தரம் அவர்கள் பேசுகையில் தெரிவித்தார்:

''உலகமே இந்திராகாந்தியைப் பாராட்டுகிறதென்றால் அந்த அம்மையார் இந்தியாவுக்காக மட்டும் போராடவில்லை, உலகத்திற்காகப் போராடினார். மனித குலம் முழுவதற்குமாகப் போராடினார்.''

மாண்புமிகு சுற்றுலா, மது விலக்கு, மின்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது :

''மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாபெரும் தலைவராக அன்னை இந்திரா விளங்கினார். இந்தியாவினுடைய கௌரவத்தையும் ஒற்றுமையையும் உலகம் பாராட்டுகிற அளவுக்கு எந்த நாடும் - அமெரிக்காவானாலும் தூரக்கிழக்கு நாடுகளானாலும் இந்தியாவுடைய மண்ணையே மிதிப்பதற்கு அஞ்சும்படியாக ஒரு வலுவுள்ள நாடாக அவர்கள் இதை ஆக்கினார்கள்.

''இந்தியாவிலும், ஆசியாவிலும் உலகத்திலும் அமைதி நிலவ வேண்டுமென்பதற்காக இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் தம் வாழ்நாள் முழுதும் பாடு பட்டார்கள்.''

மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டதாவது:

''நாட்டிற்காகத் தொண்டாற்றும்போதே நான் இறந்துபட நேரிட்டாலும்,நான்அதனைப் பெருமைக்குரியதாகவே கொள்ளுவேன். என்னுடைய உடலில் உள்ள ஒவ்வொரு சொட்டு இரத்தத்தையும் நாட்டின் வளர்ச்சிக்கும் அதனை வலிவுபடுத்துவதற்கும் பலப் படுத்துவதற்குமே பயன்படுத்துவேன் என்று உறுதி கொள்ளுவேன் என்றுதான் இந்திரா அம்மையார் மிகத் தெளிவுபடஎடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

''இதிலிருந்து அவருடைய உள்ள உறுதியையும் தன்னை நாட்டுக்கு ஒப்படைத்த தன்மையையும் நாம் காணலாம்.''

மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் தலைவர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் தமது தலைமை உரையில் குறிப்பிட்டதாவது :

''பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக இந்திரா காந்தி அம்மையார் இந்த நாட்டிலேஅவதரித்தார். பெண்ணே பிரதமராக வருவது பிரிட்டனில் நடக்கிறது. இன்னும் பல நாடுகளில் நடந்திருக்கிறது. ஆனால் பெண் பிரதமராக இருந்தார் என்பதற்காக அல்ல இந்திராகாந்திக்கு வந்த பெருமை-பாராட்டு-புகழ்! உலகத் தலைவியாக வந்தார் என்பதற்காக!

''அந்நியன் ஒருவன் ஆளுகிற போதுதான் நாட்டைத் துண்டாட முடியுமே ஒழிய ஒருநாட்டு மக்கள் தங்களைத் தாங்களே ஆளுகின்றபோது நாட்டைத் துணடாடுகிற சக்தி பிறக்கவில்லை. பிறக்கப்போவதும் இல்லை. பிறந்தாலும் உயிர் வாழவிடப்போவதுமில்லை. இதுதான் மறு சமர்ப்பணம் என்ற உறுதியை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும்.''

செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப அவர்கள் நன்றி நவின்றார்.

நிகழ்ச்சியின் தொடக்கத்தில் தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் வகையில் பல்வேறு பள்ளிகளைச் சார்ந்த மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகளும் - இறுதியில் சீர்காழி சிவ சிதம்பரத்தின் தேசியப் பாடல் நிகழ்ச்சியும் நடைபெற்றன.

—நமது செய்தியாளர்

**உழைப்பும் தியாகமும் சேர்ந்தால் தான் ஒற்றுமையுணர்ச்சி பிறக்கும்.**

**- தாகூர்**



# வேலை வாய்ப்புத் தரும் தேயிலைத் தொழில்

நீலகிரி மாவட்டத்தில் ஒரு ஏக்கருக்கும் குறைவான நிலமுள்ள சிறு விவசாயிகள் கணிசமாக உள்ளனர். இவர்கள் தோட்டங்களில் விளையும் பச்சைத் தேயிலைக்கு நல்ல விலை கிடைக்காது அவதியுற்று வந்தனர். அவர்கள் தனியார் தேயிலைத் தொழிற்சாலைகளாலும், இடைத்தரகர்களாலும் நசுக்கப்பட்டு நலிவுற்றிருந்தனர். இந்நிலையை மாற்றிட, தொழில் கூட்டுறவுச் சங்க அமைப்பு அமைக்கப்பட்டது. இச்சிறு விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்ட இந்த அமைப்பு, சிறு விவசாயிகளிடமிருந்து பச்சைத் தேயிலையை வாங்கி, சங்கத்தால் அமைக்கப்பட்ட தொழிற்சாலையில் அவற்றைப் பதப்படுத்தி விற்பனை செய்கின்றது. இந்த அமைப்பால் பச்சைத் தேயிலைக்கு விவசாயிகட்குக் கிடைக்கும் விலை மிகக் கணிசமாக உயர்ந்துள்ளது. தேயிலை விலை கூடும் காலத்தில் பச்சை இலை விலையைக் கூடுதலாக்கி விலையேற்றத்தால் விளைந்திடும் நன்மை விவசாயிக்குக் கிடைக்க இச்சங்கங்கள் வழி வகுத்துள்ளன.

தற்போது 12 தேயிலைச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. மற்றொரு சங்கம் அமைக்கப்பட்டு, கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. நடப்பாண்டில் இது செயற்படத் துவங்கும். 8,500 சிறு விவசாயிகள் இச்சங்கங்கள் மூலம் பயன்பெற்று வருகின்றனர்.

தமிழ்நாடு தேயிலை உற்பத்தியில் பத்து விழுக்காட்டிற்கு மேல் இச்சங்கங்களால் உற்பத்தி செய்யப்படுகிறது. ஏறத்தாழ 55,000 நபர்கள் இச்சங்கங்கள் மூலம் வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர். தமிழ்நாடு அரசு தேயிலை வாரியம், தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் ஆகியவை கணிசமான நிதியுதவியை இச்சங்கங்களுக்கு அளித்துள்ளன. மைய அரசு சுங்கவரிச் சலுகை அளித்துள்ளது. மலைப் பகுதிகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கணிசமான நிதியுதவி இவற்றிற்கு அரசால் வழங்கப்பட்டுள்ளது. இவ்விதம் வழங்கப்பட்ட நிதியுதவி வருமாறு:

| | ரூ. இலட்சத்தில் |
|---|---|
| 1980—81 | 13.98 |
| 1981—82 | 20.00 |
| 1982—83 | 15.00 |
| 1983—84 | 15.00 |
| 1984—85 | 14.00 |
| 1985—86 | 50.00 |

இத்தேயிலைக் கூட்டுறவுத் தொழிற்சாலைகளின் மத்திய சங்கமாகச் செயற்பட்டு வரும் இன்கோசெர்வ் கடந்த ஆண்டில் 30,200 கிலோ தேயிலை ஏற்றுமதி செய்துள்ளது. இந்திய இராணுவத்துக்கு ரூ. 97.49 இலட்சம் மதிப்புள்ள தேயிலை விற்பனை செய்துள்ளது.

நடப்பாண்டில் கொடைக்கானலில் ரூ.58.55 இலட்சம் செலவில் 2,000 ஏக்கர் பரப்பில் ஒரு தொழில் கூட்டுறவுத் தேயிலைத் தோட்டம் அமைக்கப்பட உள்ளது. இதன் மூலம் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த 900 நபர்கள் பயன் பெறுவர். தவிர நீலகிரி மாவட்ட சின்னக்கோரையில் ரூ. 60 இலட்சம் செலவில் மற்றொரு தேயிலைத் தொழில் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட உள்ளது.

# கூட்டுறவுக் கொடியின் கதை

**வா**னவில் என்பது ஊக்கத் திற்கும் நம்பிக்கைக்கும் காரணமான ஒரு சின்னமாக உலக இலக்கியங்களில் கற்ப னையாகக் கையாளப்பட்டு வந்திருக்கிறது.

கூட்டுறவு இயக்கத்தின் நோக்கத்தையும் லட்சியத் தையும் பிரதிபலிப்பதற்கு வானவில் கொடியை விட சிறந்த பொருத்தமான சின் னம் வேறு எதுவும் இருக்க முடியுமா? ஏனென்றால் வானவில்லைப் போலவே, கூட்டுறவு இயக்கமும் மனம் நொந்தவர்களுக்கு நம்பிக் கையளிக்கிறது. முரண்பட்ட நலன்களுக்கிடையே ஒற்று மையையும் இறுதியாக சுருதி பேதமற்ற வாழ்க்கையையும் பெறலாமென்ற நம்பிக்கை யும் இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் இது சர்வதேச சமரச சன்மார்க் கத்தின் கொடியாகும். ஜாதி, மதம், இனம், நிறம் இவற் றிற்கு இங்குவேலையில்லை.

இக்கொடியின் வரலாறு வளமை மிக்கதாகும். பிரெஞ்சு நாட்டுக் கூட்டுறவாளர்களில் முன் னோடியான சார்லஸ் பௌ ரியர் (Charles Fourier), என்பவர் தனது லட்சிய சமூக அமைப்பான 'பாலன்ஸ்டீரி'க்கு (Phalans-tere) வானவில்லை சின்ன மாகக் கொண்டு 'வேற்றுமை யில் ஒற்றுமைக்கு' அடை யாளமாக அமைத்தார். அவர் மறைவுக்குப் பிறகு அவரது சீடர்கள் இந்த சின்னத்தைப் பின்பற்றிவந்த னர். 1896ல் பாரிஸ் நகரில் நடைபெற்ற அகில உலக கூட்டுறவு அமைப்பின் இரண்டாவது மாநாட்டில் 'பேமிலிஸ்டிரிக் டி கைஸ்' என்னும் தொகுதியில் இருந்து வந்திருந்த பிரதிநிதி எப். பெர்னார்டாட் (F. Bernardot) என்பவர் தான் முதன் முதலில் வான வில் சின்னத்தை அகில உலக கூட்டுறவு அமைப் பின் கொடிக்கு பின் பற்ற வேண்டும் என்று கருத்து தெரிவித்தார். இக்கருத்து உடனடியாக ஏற்றுக் கொள் ளப்படவில்லை. எனினும் பிரான்சு நாட்டின் கூட்டுற வாளரான சார்லஸ் கிடி (Charles Gide) இக்கருத் துக்கு உயிர் கொடுத்துக் கொண்டே இருந்தார். 'கூட் டுறவின் பன்னிரண்டு அறப் பண்புகள்' என்னும் நூலில் அகில உலக கூட்டுறவு அமைப்பின் கொடி 'பாலன் ஸ்டீரியர்களுடை'யதைப் போல வானவில்லின் ஏழு வண்ணங்களை கொண்ட தாக இருக்க வேண்டும் என்று எழுதினார். ஏறக் குறைய 30 ஆண்டுகள் கழித்து 1923–ல் கென்ட் (Ghent) எனும் இடத்தில் நடைபெற்ற அகில உலக கூட்டுறவு அமைப்பின் கூட் டத்தில் வானவில்லின் நிறத் தையே கூட்டுறவுக் கொடிக் கும் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தை அவர் முன் வைத்தார். அகில உலக கூட்டுறவு அமைப்பின் செயற்குழு இதனை ஏற்றுக் கொண்டது.

வானவில்லின் வண்ணங் களை கொடியில் சரியாகக் கொண்டு வருவதில் உள்ள சிரமங்களை அறிந்த கிடி (Gide) இதற்கு ஒரு யோசனை சொன்னார். அதாவது வெள்ளை நிற பின்னணியில் ஏழு வண்ணங் களும் ஒன்றின் கீழ் ஒன்று பொருந்தியிருக்குமாறு அமைத்துக் கொள்ளச் சொன்னார். ஒரு நட்சத்தி ரத்தையும் கொடியில் வைத் துக் கொள்ளச் சொன்னார். 1924–ல் கென்ட்டில் (Ghent) நடைபெற்ற அகில உலக கூட்டுறவுக் கண்காட்சி மற்றும் கூட்டுறவு மாநாட் டில் முதன் முதலாக ஏற்றி வைக்கப்பட்ட கூட்டுறவுக் கொடி இத்தகைய அமைப் பைக் கொண்டதாகவே இருந்தது. ஆனால் அடுத்த ஆண்டில் நடைபெற்ற இதன் செயற்குழு தற்போதுள்ள படி வானவில் வண்ணத்தை நீள் சதுர பட்டை வடிவில் கொண்ட கொடியை ஒப்பு தல் செய்தது. நட்சத்திரம் போய்விட்டது.

குறுகிய தேசிய மற்றும் இனப் போராட்டங்களால் மனிதத் தன்மை அச்சுறுத் தப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த அணு ஆயுத காலத் தில், ஆயுதக் குவிப்புக்கு மத்தியில், கூட்டுறவு உணர் வுகளை பிரதிபலிப்பதாக இந்தக் கொடி இருந்து கொண்டிருக்கிறது. பல்வேறு தேசத்தவர்களாக இருந்தா லும் சரி, பல்வேறு இனத்த வர்களாக இருந்தாலும் சரி அவர்கள் குறுகிய உணர்வு களை விட்டொழித்து அமை தியாகவும் ஒற்றுமையாகவும் வாழவேண்டும் என்பதையே இக் கொடியின் ஏழு வண் ணங்கள் மனிதர்களுக்கு உணர்த்துகின்றன. கூட்டு றவு முறை வாழ்க்கையின் ஒட்டுமொத்த லட்சியமும் இதுதான்.

# கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்

மாநில அரசு கரும்பு பயிரிடுவதிலிருந்து சர்க்கரை உற்பத்தி செய்து நுகர்வோருக்கு வழங்கும் வரை திட்டமிடுதல், செயல்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

தமிழகத்திலுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் பன்னிரண்டு. செயல்படும் ஆலைகள் 11. கட்டுமானப் பணியில் 1, ஆகமொத்தம் 12. ஆலைகளில் சேர்ந்து பயன்பெறும் உறுப்பினர்கள 1,57,809 பேர். 1985-86ல் பிழிந்த கரும்பின் அளவு 35.88 இலட்சம் டனகள். தயாரித்த சர்க்கரையின் அளவு 3.49 இலட்சம் டன்கள். 1986-87ல் பிழியவிருக்கும் கரும்பின் குறியீடு 34.03 இலட்சம டன்கள். 1986-87ல் தயாரிக்கவிருக்கும் சர்க்கரையின் குறியீடு 3,11,115 மெ.டன்கள்.

சர்க்கரைத்துறை சம்பந்தப்பட்ட வரையில் மயிலாடுதுறை கூட்டுறவு சர்க்கரை ஆலை புதிய 20 அம்சத் திட்டத்தின் கீழ் கொண்டு வந்து அமுல்படுத்தப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறையில் நாளொன்றுக்கு 1250 டன் 'பிழிதிறன்' கொண்ட ஒரு சர்க்கரை ஆலை நிறுவுவதற்கு மத்திய அரசு உரிமம் வழங்கியுள்ளது. கூட்டுறவுத் துறையில் தலைஞாயிறில் அமைக்கப்பட்டுள்ள இந்த ஆலையின் திட்டச் செலவு ரூ. 1177 இலட்சமாகும். அரசின் பங்கு மூலதனமாக இதுகாறும் ரூ.354 இலட்சம் ஆலைக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த சர்க்கரை ஆலை 100 ஏக்கர் கொண்ட நிலப்பரப்பை இதற்காக வாங்கியுள்ளது.

**எம். இராமன், இ.ஆ.ப.**
**இயக்குநர் (பொறுப்பு)**
**சர்க்கரைத்துறை.**

நிதி ரூ. 695 இலட்சத்தில் ரூ. 555 இலட்சம் I.C.I.C.I. ஆல் அனுமதிக்கப்பட்டுள்ளது. உறுப்பினர்களின் பங்கு மூலதனமாக இந்த சர்க்கரை ஆலை ரூ.120 இலட்சம் 31.7.86 வரை சேகரித்துள்ளது. அனைத்துக் கட்டுமான பணிகளும் மிக வேகமாக முடிக்கப்பட்டு வருகின்றன. டிசம்பர் 86ல் இந்த ஆலை அரவையை துவங்க திட்டமிடப்பட்டுள்ளது.

மத்திய அரசின் பரந்த கொள்கையின் கீழ், தமிழகம் நாளொன்றுக்கு 46,400 டன்கள் கரும்பு அரவை செய்யும் உரிமம் பெற்றுள்ளது. இந்த பிழிதிறனை 14 கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளும் 10 தனியார் சர்க்கரை ஆலைகளும் பகிர்ந்து கொண்டுள்ளன. கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் பிழிதிறன் மட்டும் நாளொன்றுக்கு 21,950 டன்கள், நாட்டின் சர்க்கரை உற்பத்திக்கு தமிழகத்திலுள்ள வரையறுக்கப்பட்ட கொள்கைகளே சர்க்கரை இயக்குநரின் பணிகளுக்கு பின்னணியாக உள்ளது என இதனால் புலனாகும். 24 சர்க்கரை ஆலைகளும் தொடர்ந்து நிலையான பங்களித்து வருகின்றன. நாட்டின் சர்க்கரை உற்பத்தியில் 10 சத



# 1987-ஆம் ஆண்டு அரசு விடுமுறை நாட்கள்

1987-ஆம் ஆண்டு பொது விடுமுறை நாட்களாக, கீழ்க்கண்ட நாட்களைத் தமிழக அரசு அறிவித்துள்ளது:—

| | | | |
|---|---|---|---|
| சனவரி | 1 | வியாழன் | ஆங்கிலப் புத்தாண்டு நாள் |
| ,, | 14 | புதன் | பொங்கல் |
| ,, | 15 | வியாழன் | திருவள்ளுவர் நாள் |
| ,, | 16 | வெள்ளி | உழவர் திருநாள் |
| ,, | 26 | திங்கள் | குடியரசு நாள் |
| மார்ச் | 30 | திங்கள் | தெலுங்குப் புத்தாண்டு நாள் |
| ஏப்ரல் | 14 | செவ்வாய் | தமிழ்ப் புத்தாண்டு நாள் |
| ,, | 17 | வெள்ளி | நல்ல வெள்ளி |
| மே | 1 | வெள்ளி | மே நாள் |
| ,, | 30 | சனி | ரம்சான் |
| ஜூன் | 30 | செவ்வாய் | வங்கிக் கணக்குகள் அரையாண்டு முடிப்பு |
| ஆகஸ்ட் | 6 | வியாழன் | பக்ரீத் |
| ,, | 15 | சனி | விடுதலை நாள் |
| ,, | 28 | வெள்ளி | விநாயகர் சதுர்த்தி |
| செப்டம்பர் | 5 | சனி | மொகரம் |
| அக்டோபர் | 1 | வியாழன் | ஆயுத பூஜை |
| ,, | 2 | வெள்ளி | ஆயுத பூஜை மற்றும் காந்தி ஜெயந்தி |
| ,, | 21 | புதன் | தீபாவளி |
| நவம்பர் | 5 | வியாழன் | மிலாடிநபி |
| டிசம்பர் | 25 | வெள்ளி | கிருஸ்துமஸ் |
| ,, | 31 | வியாழன் | வங்கிக் கணக்குகள் ஆண்டு முடிவு |

குறிப்பு:- ரம்ஜான், விடுதலை நாள், மொகரம் ஆகியவை விடுமுறை நாளான சனிக்கிழமையில் வந்தாலும், குறிப்புப் பார்க்க வசதியாக, இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஜூன் 30, டிசம்பர் 31 ஆகிய விடுமுறை நாட்கள் அரசு அலுவலகங்களுக்குப் பொருந்தா.


வீத சர்க்கரை உற்பத்தி தமிழகத்தின் பங்காகும். 1985-86ஆம் ஆண்டில் நாட்டின் சர்க்கரை உற்பத்தியான 69 இலட்சம் டன்களில் தமிழகத்தின் சர்க்கரை உற்பத்தி 7 இலட்சம் டன்களாகும்.

தமிழகத்தில் சுமார் 1,30,000 கரும்பு வழங்கப் பதிவு செய்த உறுப்பினர்கள் உள்ளனர். இம்மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலைகளின் வருடாந்திர கரும்பு கொள்முதல் தொகை ரூ. 135 கோடியாகும். கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் மட்டும்71,000 கரும்பு வழங்கப் பதிவு செய்த விவசாயிகள் உள்ளனர். கூட்டுறவு மற்றும் பொதுத்துறை ஆலைகள் ஆண்டு ஒன்றிற்கு ரூ. 72.36 கோடி கரும்பு விலையாக வழங்குகின்றன. இதனால் மாநில அரசு ஆண்டு ஒன்றிற்கு சுமார் ரூ. 20 கோடி வருமானமாகப் பெற்று வருகின்றது.

தமிழ்நாட்டில் கரும்பு அரவைப்பட்டம் 172 நாட்கள் என மதிப்பிடப்படுகின்றது. இதன் அடிப்படையில் இம்மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலைகள் ஒரு மாதத்திற்கு ரூ. 22 கோடியாகவும் ஒரு நாளைக்கு ரூ.74 இலட்சமாகவும் கரும்பு கொள்முதல் செய்வதன் மூலம் விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றன. இவற்றில் 70% விவசாயிகள் இரண்டு ஏக்கர் நிலத்திற்கும் குறைவாகவே கொண்டுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது, எனவே ஆலைகள் வழங்கும் தொகையில் பெரும்பகுதி சிறு விவசாயிகளையே போய்ச்சேருகின்றது எனத் திடமாகக் கூறலாம். இதனால் சிறு விவசாயிகளுக்கு அதிகப்படியாக வருமானம் அளிக்கும் வியாபாரப் பயிராகக் கரும்பு விளங்கி வருகின்றது.

ஒரு ஹெக்டேருக்கு 105 டன்கள் கரும்பு தமிழகத்தில் விளைகின்றது. இதுவே இந்தியாவில் அதிகப்படியான விளைச்சலாகும்.

ஆலைகளின் பயன்படுத்தும் செயல்திறன் தமிழகத்தில் மட்டுமே மிக அதிகமாகும். 1985-86ல் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் செயல்திறன் 100%க்கு மேல் உள்ளது.



# நாளும் வளரும் கூட்டுறவு

**கோ. சி. எல்லப்பன்**
தனி அலுவலர்
செங்கை மாவட்டக் கூட்டுறவு ஒன்றியம்

தமிழ்நாட்டில் உள்ள சிறப்புக் காவலர் குடும்பப்பெண்டிருக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்புக் கொடுத்து அவர்களது குடும்ப நலத்தைக்காப்பதுடன்வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டும் என்ற நல்லநோக்கத்துடன் ஆவடியில் இரண்டு தமிழ்நாடு சிறப்புக் காவலர் மகளிர் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.

(1) தமிழ்நாடு சிறப்புக் காவலர் மகளிர் தையல் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம் மற்றும் (2) தமிழ்நாடு சிறப்புக் காவலர் மகளிர் காலுறை பின்னும் மற்றும் குடிசைத்தொழில் கூட்டுறவுச்சங்கம் என்ற பெயரில் முறையே 12.2.61 மற்றும் 6.9.69 தேதிகளில் தொழில் வணிகத்துறையைச் சார்ந்த தொழிற் கூட்டுறவுப் பதிவாளர் அவர்களால் பதிவு செய்யப்பட்டு திறம்படச் செயல்பட்டு வருகின்றன.

இவ்விரு சங்கங்களிலும் தமிழ்நாடு சிறப்புக் காவலர் முகாம் ஆவடியைச் சேர்ந்த சுமார் 235 பெண்டிர்கள் தையல் வேலை உல்லன் காலுறை பின்னுதல் உல்லன் பனியன்கள் பின்னுதல் காவல்துறை தொப்பிகள் தயாரித்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டுக் காவல் துறையினருக்குத் தேவையான சகலவிதமான உடைப்பொருட்கள் சீருடைகள் தயாரித்துக்கொடுத்து ஒவ்வொருவரும் மாதத்திற்கு ரூ. 5,00-க்குக் குறையாமல் வருமானம் பெறுகின்றனர்.


இச்சங்கங்களின் நிர்வாகம் பதிவாளர் அவர்களால் நியமனம் செய்யப்பட்ட நிர்வாகப்பொறுப்பில் இருந்தபோதிலும் தொழில் வணிகத்துறையைச் சார்ந்த அதிகாரிகளால் திறம்பட நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு முழுவதும் 34க்கு மேற்பட்ட தையல் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தபோதிலும் இவ்விரு சங்கங்களும் அவற்றில் முதலிடம் வகிப்பதுடன் சிறந்த தையல் கூட்டுறவுச் சங்கங்கள் என்ற விருதைத் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திலிருந்து கடந்த மூன்று ஆண்டுகளாகத் தவறாது பெற்று வருகின்றன. என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விரு சங்கங்களும் செங்கல்பட்டு மாவட்டத்தில் திறம்பட இயங்கி வரும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தக்கசாட்சியங்களாகும். அண்மையில் இச்சங்கங்களுக்கு வருகை தந்த மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் ஆனூர் ஜெகதீசன் இவற்றின் செயல் திறனைப் பாராட்டியதுடன் இது போலப் பல கூட்டுறவுச் சங்கங்கள் தமிழகம் முழுவதும் துவக்கப்பட்டு திறம்பட நிர்வகிக்கப்பட வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தார்.

மேலும் அண்டை மாநிலக் காவல் துறை நிர்வாகத்தினரை அணுகி அந்த மாநிலக் காவலர்களுக்குச் சீருடை தைத்துக் கொடுக்க ஆணைபெற முயற்சி மேற்கொள்ளலாமென்றும் ஆலோசனை வழங்கினார். இந்தச் சங்கங்கள் காவலர் துறையினருக்குத் தேவையான உடைப்பொருட்கள் தைப்பதுடன் அரசு தீயணைப்புப் படையினர், ரயில்வே பாதுகாப்புக் காவலர் மற்றும் மத்திய தொழில்துறைப் பாதுகாப்புப் படையினர் தனித்துச் செயல்படும் பாதுகாபபு மற்றும் துப்பு துலக்கும் குழுமம் அனைத்துக்கும் தேவையான உடைப்பொருட்கள் தைத்து வழங்கி வருகின்றன. கடந்தஆண்டில் முதலமைச்சரின் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பள்ளிச் சீருடைகளைச் சிறந்த முறையில் தைத்துக் கொடுத்து சமூக நலத்துறை அதிகாரிகளின் பாராட்டுதலைப் பெற்றுள்ளன.

இச்சங்க உறுப்பினர்கள் தொடர்ந்து வேலை வாய்ப்புப் பெறுவதன் மூலம் நிரந்தர வருமானம் பெறுவதுடன் ஆண்டுதோறும் பங்குத்தொகையின் பேரில் 12% ஈவுத்தொகை நிறைந்தகா...லர்சீருடை மற்றும் ஊக்குவிப்புப் பரிசுகள் தங்கள் குழந்தைகளின்கல்விக்காக உதவித்தொகை என்று பல்வேறு பயன்களைப் பெற்று மகிழ்கின்றனர். இவ்விரண்டு கூட்டுறவுச் சங்கங்களும் காவல்துறையினரின் நலன் காக்கும் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சிறந்த முன்னோடி என்றால் அது மிகையாகாது.

இச்சங்கங்களின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தில் நம்பிக்கை வைத்து எழில் மயமான ஆவடி சிறப்புக் காவலர் முகாமைத் தொழில் மயமாக்கத் தமிழ்நாடு தொழில் வணிகத் துறையும் காவல்துறையும் இணைந்து செயல்படுகின்றன. அதன் பயனான கீழ்க்கண்ட புதிய தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் திரு. சி.



செல்லப்பன் இ.ஆ.ப., தொழில் துறை ஆணையர் மற்றும் இயக்குநர் அவர்களால் பதிவு செய்யப்பட்டு முன்னாள் காவல் துறை இயக்குநர் திரு. வி.ஆர். லட்சுமி நாராயணன், இ.கா.ப. அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.



மக்கள் ஒருமைப்பாட்டின் மறு உருவமாக விளங்குவது கூட்டுறவு. மக்களாட்சி மலர்ச்சி யடையும்போது கூட்டுறவு உணர்வும், மலர்ச்சி அடைகிறது. வேளாண்மைப் பெருக்கத்தில் முனைப்பாக ஈடுபட்டுள்ள நேரத்தில் இத் தேவைக்கேற்ப இக்கூட்டுறவு இயக்கப் பணிகளும் விரிவடைவது அவசியம்.

—பேரறிஞர் அண்ணா

தமிழ்நாடு சிறப்புக் காவலர் டயர் புதுப்பிக்கும் தொழில் கூட்டுறவுச் சங்கம்.

தொழிற் பயிற்சி பெற்ற சுமார் 22 இளைஞர்களை உறுப்பினர்களாகச் சேர்த்து இச்சங்கம் ரூ. 54,750 பங்கு மூலதனத்துடன் செயல்பட்டு வருகின்றது. இதன் உறுப்பினர்களுக்குப் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் டயர் புதுப்பிக்கும் பிரிவில் போதிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலிருந்து இனாமாக ஒரு டயர் புதுப்பிக்கும் இயந்திரமும் கோவை எல். ஜி. நிறுவனத்திலிருந்து டயர் புதுப்பிக்கும் இயந்திரமும் மற்றும் தேவையான இதர சாதனங்களும் வாங்கி ரூ. 5 லட்சம் செலவில் இத்திட்டத்தைச் செயல்படுத்த வங்கிக்கடன் எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சங்கம் கோபர் காஸ் அடுப்புகள் தயாரித்து நிறுவ மாவட்ட கலெக்டர் காஞ்சிபுரம் அவர்களிடமிருந்து தக்க உரிமமும் அனுமதியும் பெற்றுள்ளது. இதுவரை மூன்று கோபர் காஸ் அடுப்புகள் தயாரித்து நிறுவப்பட்டுள்ளன. மேலும் 3 கோபர் காஸ் அடுப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இச் சங்க உறுப்பினர்கள் சிறப்புக் காவலர் அணிகளின் தேவைக்கேற்ப வெல்டிங்வேலை, இருப்புத் தளவாடங்கள் பழுது பார்த்தல் மற்றும் பாத்திரங்களுக்கு ஈயம் பூசுதல் போன்ற பணிகளையும் செய்து தொடர்ந்து வருமானம் ஈட்டி வருகின்றார்கள்.


தமிழ்நாடு போலீஸ் கம்ப்யூட்டர் தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கம் லிட்..


அறிவியல் வளர்ச்சி பெற்று வரும் காலத்திற்கு ஏற்ப நாட்டு நடப்பை ஒட்டி கம்ப்யூட்டர் கருவிகள் தயாரிப்பதற்கென ஒரு தொழிற் கூட்டுறவுச் சங்கம் 29.11.85ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் 21 உறுப்பினர்கள் ரூபாய் 1,03,000 பங்குத் தொகையுடன் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

உறுப்பினர்களுக்கு ஐ.ஐ.டி. நிறுவனத்தில் பேராசிரியர் வி. என். சுக்லா நேரடிப்பார்வையில் கம்ப்யூட்டர் செய்தல், இயக்குதல் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் செய்தல் ஆகிய பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன. ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் ஈடி அண்ட் டி.டி. நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் ஒரு தொலைக்காட்சிப் பெட்டி தயாரிப்பு நிலையம் அமைக்கப்படும். இதற்காக சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா ரூ.7.90 இலட்சம் கடன் வழங்கியுள்ளது. இதுவரை அந்த நிறுவனத்தாரிடம் இருந்து வாங்கிய 20 கலர் டி.வி.கள் குறைந்த விலையில் ரூ. 6800க்கு விற்கப்பட்டுள்ளன. இந்த நிறுவனம் இறக்குமதி செய்யும் கச்சாப் பொருட்களைக் கொண்டு சங்கத்திலேயே தயாரிக்க இருக்கும் கலர் டி.வி.கள் இன்னும் குறைந்த விலைக்கு விற்கப்படும் அரசு நிறுவனங்கள் மற்றும் கல்வி நிலையங்கள் அனைத்துக்கும் சங்கத்தில் தயாரிக்கப்படும் டி.விகளை விற்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

இவ்வாறாகத் தமிழ்நாடு சிறப்புக் காவலர் குடியிருப்புகளில் உள்ள இளைஞர்கள் மனித சக்தி அவர்களது திறமை மற்றும் தகுதிக்கு ஏற்ற வகையில் பயன்படுத்தப் பட்டு வருகின்றது.

இச்சங்கங்களின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் ஆவடி சிறப்புக் காவலர் அணியைச் சார்ந்தவர்களின் குடும்ப மறுமலர்ச்சிக்கும் செங்கை மாவட்டத்தின் சிறு தொழில் வளர்ச்சிக்கும் சிறப்பு எடுத்துக்காட்டாகும். எனவே கூட்டுறவில் எல்லோரும் நாட்டுயர்வுக்குப் பாடுபடுவோம்.





# தீப்பெட்டித் தொழில்

தமிழ்நாடு தீப்பெட்டிகள் அகில இந்தி
யப் புகழ் பெற்றவை. தீப்பெட்டி தயாரிப்பில்
பெரும் நிறுவனங்கள் தவிர சிறிய அளவில்
தீப்பெட்டி தயாரிக்கும் அலகுகள் பல உள்ளன.
இவை நிதியின்மை காரணமாகத் தங்கள் தீப்
பெட்டிகளை வட இந்தியா நகரங்களுக்கு
எடுத்துச் சென்று நல்ல விலைக்கு விற்பனை
செய்ய முடியாது. இடைத் தரகர்களிடம் விற்
பனை செய்திட வேண்டிய சூழ்நிலையில்
இருந்தன. இந்த இடைத்தரகர்களால் நசுக்கப்
பட்டு நலிவுற்று வந்தன. இந்நிலையை மாற்
றிட தீப்பெட்டி சேவைத் தொழிற் கூட்டுறவுச்
சங்கங்கள் அமைக்கப்பட்டு, அவற்றின் மூலம்
இடைத் தரகர்களை நீக்கும் முயற்சியில் அதிக
மாக வெற்றி கிட்டியுள்ளது இச்சங்கங்கள்
மூலம் இடைத் தரகர்கள் முறைகேடாக
ஈட்டிய இலாபம் தவிர்க்கப்பட்டு, தீப்பெட்டி
தயாரிக்கும் அலகுகள் மட்டுமின்றி நுகர்
வோரும் பயனடைந்துள்ளனர்

இச்சேவைச் சங்கங்கள் தீப்பெட்டிகள்
விற்பனைக்கு வழி செய்வது மட்டுமின்றி,
அலகுகளுக்குத் தேவையான மூலப் பொருள்
கள் நியாய விலைக்குப் பெறவும், தீப் பெட்டி
தயாரிப்போருக்குத் தீப்பெட்டிகள் தயாரித்த
வுடனேயே விற்பனைக் காலம் வரை காத்தி
ராது கணிசமான தொகை முன்பணமாகக்
கிடைக்கவும் வழி செய்கின்றன.

சேவைச் சங்கங்கள் தவிர தீப்பெட்டி
உற்பத்திச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்
றன. இச்சங்கங்கள் நலிவுற்ற பிரிவுகளைச்
சார்ந்தோர்க்கு வேலை வாய்ப்பளித்து
வருகின்றன.

சுமார் 22,220-க்கு மேற்பட்ட தொழி
லாளர்களுக்கு வாழ்வளித்து ரூ.9.82 கோடி
களுக்கு மேல் விற்பனை செய்து வரும் இச்சங்
கங்களுக்குத் தமிழக அரசு ரூ.20.75 இலட்சம்
மூலதன உதவி அளித்துள்ளது. தமிழ்நாடு
தொழிற் கூட்டுறவு வங்கி ரூ. 285 இலட்சம்
கடனுதவி அளித்துள்ளது. ஊரக வளர்ச்சித்
திட்டங்கள் கீழ் 47 இலட்சம் மானியங்கள்
வழங்கப்பட்டுள்ளன.

தீப்பெட்டித் தொழிலுக்குத் தேவை
யான பொட்டர்சியம் குளோரேட்டுத் தயா
ரிக்கும் தொழிற்கூட்டுறவுச் சங்கம் ரூ. 40.88
இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு கடந்த
இரு ஆண்டுகளாகச் செயற்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் தென்னை மரங்கள் மிக
அதிகமாக இருப்பினும், கயிற்றுத் தொழில்
போதிய வளர்ச்சி அடையவில்லை. கேரள
மாநிலத்தில் உள்ளது போல இம்மாநிலத்
திலும், கயிற்றுத் தொழில் வளர்ச்சி அடையச்
செய்யும் பொருட்டு 61 சங்கங்கள் துவக்கப்
பட்டுள்ளன.

செங்கல் தொழிற்சாலைகள் போன்றே,
கயிற்றுத் தொழிலிலும் குறைந்த முதலீட்டில்
அதிக வேலை வாய்ப்பளிக்கும் வாய்ப்புள்
ளது. தவிர இச்சங்கங்கள் எல்லா வகையிலும்
பின்தங்கியுள்ள கிராமப்புறங்களிலும் கட
லருகேயுள்ள வசதியற்ற கிராமங்களிலும்
அமைந்து வேறு தொழில்களற்ற அப்பகுதி
களில் வேலை வாய்ப்புகளை உருவாக்கி வரு
கின்றன. படிப்படியாக வளர்ச்சியுற்று வரும்
இந்தக்கயிற்றுத்தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்
விரைவில் ஊரகத் தொழில்களில் ஒரு மறு
மலர்ச்சி உண்டாக்கி, இம்மாநிலத்தை, கேரள
மாநிலம் போன்று கயிற்றுத் தொழிலில்
வளர்ச்சியுற்ற மாநிலமாக விரைவில் மாற்ற
வுள்ளன. இச்சங்கங்களுக்குக் கயிற்றுவாரியத்
திலிருந்து கணிசமான நிதி உதவி கிடைத்
துள்ளது.

தவிர இம்மாநிலத்தின் கயிற்றுத்தொழில்
வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு இம்
மாநிலத்திலிருந்து வெளிமாநிலங்களுக்கு
தென்னை மட்டை அனுப்புதலைக் கட்டுப்
படுத்தும் ஒரு சட்டம் இயற்றப்பட்டுள்ளது.
இம்மாநிலக்கயிறு மற்றும் கயிற்று பொருள்கள்
உற்பத்தி பெருகும். இவற்றை விற்பனை செய்
வதற்கு ஒரு மாநிலத்தொழிற் கூட்டுறவுக்கயிறு
இணையமும் அமைக்கப்பட்டுள்ளது. தவிர
ரப்பர் கயிறு தயாரிப்பதற்காக ஒரு தொழிற்
கூட்டுறவுச் சங்கமும் நடப்பாண்டில் அமைக்
கப்பட உள்ளது. இதற்காக அரசு மூலதன
மாக ரூ. 5 இலட்சம் நடப்பாண்டில் வழங்
கப்பட உள்ளது.

# கயிற்றுத் தொழில்

# மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தமிழக விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட வரலாறு காணாத சலுகை



*சுமார் 125.00 கோடி ரூபாய் அளவிற்கு கூட்டுறவுக் கடன்கள் மீதான* **வட்டி, அபராத வட்டி,** *மற்றும்* **கூடுதல் வட்டி தள்ளுபடி செய்யப்படும்.** *இதற்கு மேலாக முந்தைய ஆண்டில் முழுவதுமாகக் கடனைத் திருப்பிச் செலுத்தியவர்களுக்குச்* **செலுத்திய அனைத்து வட்டியும் திருப்பித்தரப்படும்.**

- O அசலை மட்டும் திரும்பச் செலுத்தினால் போதும்.
- O பெரு விவசாயி, சிறு விவசாயி, குறு விவசாயி என்ற பாரபட்சம் கிடையாது.
- O விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் நிலவள வங்கிகளில் வாங்கிய அனைத்து வகை கடன்கள் மீதான வட்டி, அபராத வட்டி மற்றும் கூடுதல் வட்டி தள்ளுபடி.
- O இச்சலுகைகளைப் பெற, 31-3-1986 அன்று நிலுவையில் இருந்த அசலை மட்டும் கட்டினால் போதும்; இந்த அசலை இரு சம தவணைகளில் கட்டினால் போதும்;
- O முதல் அசல் தவணையை 31-12-1986க்குள்ளும், இரண்டாவது அசல் தவணையை 30-6-1987க்குள் கட்டினால் போதும்;

## அது மட்டுமா!

*1-7-1985 முதல் 31-3-1986 வரை கடனை முழுமையாகச் செலுத்திய விவசாயிகள் கட்டிய வட்டி, அபராத வட்டி மற்றும் கூடுதல் வட்டி திருப்பித் தரப்படும்; சலுகையைப் பெற்றிடுவீர்; கூட்டுறவுக் கடன்களை அடைத்திடுவீர்.*

*புதிய கடன்கள் பெற்று விளைச்சலைப் பெருக்கிடுவீர்.*

*தமிழகத்தை மேலும் உயர்த்திடுவீர்.*


**தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்**
சென்னை-9.

# பொது மக்களுக்கு புதிய வாய்ப்பு

**கா**மன்வெல்த் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக லண்டன் சென்றிருந்த மாண்புமிகு தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் திரு பி. எச். பாண்டியன் அவர்கள் அண்மையில் தாயகம் திரும்பினார். இங்கிலாந்தில் தொடங்கி நார்வே, ஸ்வீடன், டென்மார்க், ஜெர்மனி ஆகிய நாடுகளில் 21 நாட்கள் பயணம் மேற்கொண்டார்.

லண்டனில் அவர், "பார்லிமெண்டரி முறை அரசாங்கத்துக்கு எதிர்காலம் இருக்கிறதா? அதை எப்படி வலுப்படுத்துவது?" என்ற தலைப்பிலும், "காமன் வெல்த் பார்லிமெண்டரி அமைப்பின் பங்கு என்ன?" என்ற தலைப்பிலும் உரையாற்றினார். இம்மாநாட்டினை எலிசபெத் ராணி துவக்கி வைத்தார். இங்கிலாந்து பிரதமர் மார்கரெட் தாட்சரும் பங்கு கொண்டு உரையாற்றினார்.

இங்கிலாந்து பிரதமரைச் சந்தித்தபோது தமிழ்நாட்டைப் பற்றிப் பேரவைத் தலைவர் கூறியதை அவர் ஆர்வமாகக் கேட்டறிந்தார்.



பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்கரெட் தாட்சருடன்

**இங்கிலாந்து பாராளுமன்றத்தின் பிரபுக்கள் சபைத் தலைவர் ரைட் ஹானரபிள் லார்டு ஹெய்ல்சாம், மக்கள் சபைத் தலைவர் ரைட் ஹானரபிள் பெர்னார்டு வெதெரில் ஆகியோருக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் உருவப்படம் பொறித்த நினைவுப் பரிசை, மாண்புமிகு தமிழகச்சட்டப் பேரவைத் தலைவர் திரு பி.எச். பாண்டியன் அவர்கள் வழங்குதல்.**



இங்கிலாந்தில் உள்ள 'ஹவுஸ் ஆஃப் காமன்ஸ்', 'ஹவுஸ் ஆஃப் லார்ட்ஸ்' ஆகிய இரு சபைகளின் தலைவர்களுக்கும் தமது அன்பளிப்பாகப் பத்தமடைப் பாய்களை வழங்கினார். பாய்களில் சபைத் தலைவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

லண்டனில் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம், ஸ்காட்லாந்து யார்டு ஆகிய இரு இடங்களைப் பார்வையிட்டார்.

நார்வே, ஸ்வீடன் ஆகிய நாடுகளில் அதிகாரபூர்வமாகச் சுற்றுப் பயணம் செய்த மாநில சட்ட சபையின் முதல் பிரதிநிதி இவர்தான். இதன் காரணமாக அந்த நாடுகளில் எல்லாம் பேரவைத் தலைவருக்கு வெகு சிறப்பான வரவேற்பு ஏற்பாடுகள் நிகழ்ந்தன.

இங்கிலாந்து சட்டசபையில் சபாநாயகரின் ஆசனத்துக்குப் பின்னால் வைக்கப்பட்டிருக்கும் புகார்ப் பையைப் போன்று, தமிழ்நாடு சட்டப் பேரவையிலும் தமது ஆசனத்துக்குப் பின்புறம் ஒரு புகார்ப் பையைத் தொங்கவிட, மாண்புமிகு பேரவைத் தலைவர் விருப்பம் கொண்டுள்ளார். யார் வேண்டுமானாலும், மனுவையோ, புகாரையோ நேரடியாக வந்தோ அல்லது எம். எல். ஏ., மூலமாகவோ அந்தப் பையில் போடலாம்.

# புதிய அமைச்சரவை

தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் 21.10.86 அன்று கிண்டி ராஜ்பவனத்திற்குச் சென்று மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்களைச் சந்தித்தார்.

தமிழக அமைச்சரவையில் இருந்து 10 அமைச்சர்களை விடுவித்தும், திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களை மீண்டும் அமைச்சரவையில் இணைத்தும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அமைச்சரவைப் பட்டியலை ஆளுநர் அவர்களிடம் அளித்தார்.

அமைச்சர்கள் பொறுப்பு ஏற்கும் துறைகள் வருமாறு:

## டாக்டர் எம். ஜி. ஆர்

(முதல் அமைச்சர்)

இந்திய அரசுப்பணி, (இ.ஆ.ப. அலுவலர்கள்) இந்திய காவல் பணி, (இ.கா.ப. அலுவலர்கள்) மற்ற அகில இந்திய பணிகள், காவல் துறை, மாவட்ட வருவாய்த்துறை அலுவலர்கள்.

## டாக்டர் வி. ஆர். நெடுஞ்செழியன்

(நிதி அமைச்சர்)

நிதி, வருவாய்த்துறை, பொது நிர்வாகம், கூட்டுறவு, சட்டப் பேரவை, தேர்தல்கள், புள்ளி விவரத்துறை, முன்னாள் இராணுவத்தினர், இளைஞர் அணி.

## திரு எஸ். இராமச்சந்திரன்

(உணவுத்துறை அமைச்சர்)

உணவு, விலைக் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள், அகதிகள்-குடிபெயர்ந்தோர், இரும்பு-உருக்கு கட்டுப்பாடு, பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, அரசு அச்சகம்.

## திரு கே. ஏ. கிருஷ்ணசாமி

(உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நல அமைச்சர்)

நகராட்சி நிர்வாகம், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக் கடன்கள், தொழிலாளர் நலம்.

## திரு க. இராசாராம்

(தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர்)

பெருந்தொழில்கள், சுரங்கம், கனிமவளம், மின்னணு, விஞ்ஞானம், தொழில்நுட்பம், வேளாண்மை, வேளாண்மை நிதி, வேளாண்மைப் பொறியியல், அக்ரோ என்ஜினியரிங், அக்ரோ சேவை கூட்டுறவு சங்கங்கள், குடிநீர் வடிகால் வாரியம்.

## திரு ப. உ. சண்முகம்

(மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்)

லஞ்ச ஒழிப்பு, மக்கள் நல்வாழ்வுத்துறை, சுற்றுப்புறச் சூழல் மாசுக்கட்டுப்பாடு, பிற்பட்டோர் நலம், மீன்வளம்.

## திரு சி. பொன்னையன்

(கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர்)

கல்வி, ஆட்சிமொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு, சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், மாவட்ட துணை ஆட்சித் தலைவர்கள், எடை-அளவைகள் சட்டம், கடன் நிவாரணம் (கடன் கொடுத்தல் பற்றிய சட்டங்கள், சீட்டுகள் பற்றிய சட்டங்கள் உள்பட) நிறுவனங்கள் பதிவு, சர்க்கரைக் கழிவு.

## திரு எஸ். முத்துசாமி

(போக்குவரத்துத்துறை அமைச்சர்)

போக்குவரத்து, அரசுடைமை ஆக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வாகனச் சட்டம், துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள்.

## திரு எஸ். திருநாவுக்கரசு

(வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்)

கைத்தறி மற்றும் ஜவுளி, வீட்டுவசதி வாரியம், குடிசை மாற்று வாரியம், நகர்ப்புற வடிவமைப்பு, வீட்டு வாடகைக் கட்டுப்பாடு

## திரு வி. வி. சாமிநாதன்

(சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர்)

மதுவிலக்கு மற்றும் ஆயத்துறை, கால்நடைப் பராமரிப்பு, பால்வளம், பால்பண்ணை வளர்ச்சி, பத்திரப் பதிவு, முத்திரைச்சட்டம், செய்தி-மக்கள் தொடர்பு, திரைப்படத் தொழில் நுட்பம், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையங்கள், வனத்துறை, சின்கோனா, திட்டமிடுதல், தொல்பொருள் ஆய்வுத்துறை, பாஸ்போர்ட், மின்துறை.

## திரு ஆர். சவுந்தரராஜன்

(சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர்)

சத்துணவு, சமூகநலம் (பெண்கள், குழந்தைகள் நலம் உள்பட) பிச்சைக்காரர் இல்லம், அனாதை இல்லங்கள், கண்காணிப்பு இல்லங்கள், கதர், பூதானம், கிராமதானம்.

## திரு ஆனூர் பி. ஜி. ஜெகதீசன்

(ஊரகத் தொழில் அமைச்சர்)

கிராமத் தொழில் உள்பட ஊரகத் தொழில்கள், குடிசைத் தொழில்கள், சிறுதொழில்கள்.

## திரு டி. இராமசாமி

(வணிகவரித்துறை அமைச்சர்)

வணிக வரிகள்

## திரு ஏ. அருணாசலம்

(ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்)

ஆதிதிராவிடர் நலம், மலைவாழ் பகுதியினர் நல்வாழ்வு, கொத்தடிமை.

## திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்

(பொதுப்பணித்துறை அமைச்சர்)

பொதுப்பணித்துறை, நீர்ப்பாசனம், (சிறிய நீர்ப்பாசனங்கள் உள்பட) வக்ஃப் போர்டு.

# சீர்மிகு சிறப்பங்காடிகள்

டி.யு.சி.எஸ். சின் அங்கமாக 14-10-66 முதல் காமதேனு கூட்டுறவுச் சிறப்பங்காடி சிறந்த முறையில் செயல்பட்டு வருகின்றது. 1968-ஆம் ஆண்டு காமதேனு மளிகைப் பிரிவு, சுயசேவைப் பிரிவாக மாற்றியமைக்கப்பட்டது.

தமிழ்நாட்டிலேயே முதல் முறையாகச் சுயசேவைப் பிரிவை ஆரம்பித்த பெருமை காமதேனு கூட்டுறவுச் சிறப்பங்காடியையே சாரும். 1968-ஆம் ஆண்டுஆரம்பிக்கப்பட்ட சுயசேவைப் பிரிவு மேலும் சில மாற்றங்களுடன் நவீன முறையில் இயங்கும் சுயசேவைப் பிரிவாக மாற்றப்பட்டு 5-5-85 முதல் செயல்பட்டு வருகின்றது. இது தவிர 18-10-86 அன்று முதல் சுமார் 7100 சதுர அடியில் காமதேனுவில் மற்றொரு புதிய நவீன சுயசேவைப் பிரிவினை காமதேனு கூட்டுறவுச் சிறப்பங்காடியின் சொந்தக்கட்டடத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இது தற்பொழுது தென்னகத்திலேயே பெரிய சுயசேவைப் பிரிவாகத் திகழ்கிறது. சுமார் 2500 பல்வேறு பொருட்கள் இங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. மேற்கூறிய காமதேனுவின் இரண்டு சுயசேவைப் பிரிவினைத் தவிர்த்து மக்கள் சுயசேவைப் பிரிவிற்குத் தரும் மகத்தான வரவேற்பைக் கண்டு, பெசன்ட் நகர் கிளையில் 10-3-'86 முதல் மற்றுமொரு சுயசேவைப்பிரிவு திறக்கப்பட்டு திறம்படச் செயல்பட்டு வருகின்றது. மேற்சொன்ன வரிசையிலே திருவல்லிக்கேணி கிளையிலும்இப்போதுஒரு சுயசேவைப் பிரிவு திறக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் பொதுவிநியோகச் செயல்பாட்டுத் திட்டத்தின் படி, டி.யு.சி.எஸ். நிறுவனம் நாளது தேதியில் 208 நியாய விலைக் கடைகளை தென் சென்னையில் மட்டும் தன்னகத்தே கொண்டு இயங்கி வருகின்றது. தென்சென்னையில் உள்ள சுமார் 2.1 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கான அத்தியாவசியப் பண்டங்களைப்பொது விநியோகத் திட்டத்தின் மூலம் கார்டுதாரர்களுக்கு வழங்கி வருகின்றது. மேற்சொன்ன பொது விநியோகத் திட்டத்திற்காக டி.யு.சி.எஸ். நிறுவனம் மாதமொன்றுக்குக் கிட்டத்தட்ட ரூ. 112.40 இலட்சம் மதிப்புள்ள கட்டுப்பாட்டுப் பொருட்களை எடுத்துப்பொதுமக்களுக்கு விநியோகம் செய்து வருகின்றது.


சென்னை நகருக்கும், அதனைச் சுற்றியுள்ள புறநகர்ப் பிரிவுகளிலும் உள்ள கிட்டத் தட்ட 37,000 இந்தியன் எரிவாயு உருளைகளை உபயோகிக்கும் வாடிக்கையாளர்களுக்கு எரிவாயு உருளைகளை 25-8-1969 முதல் டி.யு.சி.எஸ். நிறுவனம் விநியோகம் செய்து வருகின்றது. டி.யு.சி.எஸ். நிறுவனம் தனது 12 பல்வேறு கிளைகளின் மூலம் இந்த எரிவாயு உருளைகளின் விநியோகத்தைச் செயல்படுத்தி வருகின்றது. இந்தியாவிலேயே அதிக அளவில் எரிவாயு உருளைகளை விநியோகித்து வரும் அமைப்பு கொண்ட தனி ஒரு நிறுவனம் இந்த டி.யு.சி.எஸ். ஆகும்.

**தமிழ் நாட்டில் தற்பொழுது கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் மற்றும் பிரதம கூட்டுறவுப் பண்டக சாலைகள் ஆகியவற்றின் 30 பல்பொருள் அங்காடிகளும் (சிறப்பு அங்காடிகள்), 191 நவீன சில்லறை அங்காடிகளும் / பெரிய அளவிலான சில்லறை அங்காடிகளும் (சிறப்புச் சிற்றங்காடிகள்) இயங்கி வருகின்றன.**

**இந்த அங்காடிகள் 1984-85ஆம் கூட்டுறவு ஆண்டில் 95.50 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்துள்ளன. 1985-86ஆம் ஆண்டில் ஐந்து நவீன சில்லறை அங்காடிகள் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1985-86ஆம் ஆண்டில் ஒரு பல்பொருள் அங்காடி அமைப்பதற்கும், மூன்று பெரிய அளவிலான சில்லறை அங்காடிகள் அமைப்பதற்கும் மத்திய அரசு நிதி உதவி ஒப்பளித்துள்ளது.**



22-10-86 அன்று மாண்புமிகு திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள், மேதகு ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்களால், தமிழக அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.



# 33-வது அனைத்திந்திய கூட்டுறவு வாரவிழா

மக்கள் இயக்கமாம் கூட்டுறவு இயக்கம் மக்களுக்கு ஆற்றிவரும் சேவைகளை, இவ்வியக்கத்தில் இணைந்துள்ளோர் அடைந்து வரும் நன்மைகளை, இவ்வியக்கம் ஏற்படுத்தியுள்ள சாதனைகளை ஒவ்வொருவருக்கும் எடுத்துக்கூறி மேலும் பலரை கூட்டுறவியக்கத்தில் இணைந்து நன்மை பெறத் தூண்டும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் கூட்டுறவு வாரவிழா கொண்டாடப்பட்டு வருகிறது.

உலக அளவில் கூட்டுறவு நாள் கொண்டாடும் எண்ணம் 1920லேயே உதித்தது. அகில உலக கூட்டுறவு அமைப்பு, உள்நாடு மற்றும் உலக அளவில் ஏற்படும் மோதல்களால் கூட்டுறவு இயக்கம் பாதிக்கப்படாமல் இருக்கவும் அகில உலக கூட்டுறவு அமைப்பின் ஒற்றுமையை பலப்படுத்தவும் செயல் முறைகளை தேடிக் கொண்டிருந்தது. 1922ல் மிலான் என்ற இடத்தில் கூடிய இதன் பொதுக்குழு, "கூட்டுறவாளர் நாள்" கொண்டாட வேண்டும் என்ற யோசனையை ஏற்றுக் கொண்டது. அதன்படி முதலாவது அகில உலக கூட்டுறவு நாள் 1923ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் ஏழாம் நாள் கொண்டாடப்பட்டது. இப்பொழுதும் அகில உலக கூட்டுறவு நாள் ஒவ்வோர் ஆண்டின் ஜூலைத் திங்கள் முதல் சனிக்கிழமையன்று கொண்டாடப்பட்டு வருகிறது.

ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரை, 'கூட்டுறவு இயக்கத்தால் இந்தியாவை அதிர வைக்க வேண்டும் என்பதே என் எண்ணம்' என்று முழங்கிய பண்டித ஜவஹர்லால் நேருவின் பிறந்த தினமான நவம்பர் 14ஆம் தேதியன்றுதான் இவ் வாரவிழாக் கொண்டாட்டம் தொடங்குகிறது.

கூட்டுறவு இயக்கத்திற்கு வித்துக்களை முதன் முதலில் ஊன்றியோர் 'ராக்டேல் முன்னோடிகள்' எனப்படும் 28 நெசவுத் தொழிலாளிகள் தான். 1844 ஆம் ஆண்டு இங்கிலாந்திலுள்ள லங்காஷயரில் டோட்லேன் எனுமிடத்தில் துவக்கப்பட்ட கூட்டுறவுப் பண்டக சாலையே முதல் கூட்டுறவு முயற்சியாக அமைந்தது. கூட்டுறவு என்றும், எப்போதும் இன்றியமையாமையின் குழந்தையாகவே வளர்க்கப்பட்டு வந்துள்ளது. இங்கிலாந்தில் தொழிற் புரட்சியின் காரணமாக ஏழைத் தொழிலாளத் தோழர்கள் சுரண்டப்பட்டார்கள்! அதுவே நுகர்வோர் கூட்டுறவுக்கும் பாதை அமைத்துக் கொடுத்தது. ஜெர்மனியில் ஏழை உழவர்களும், உழவுத் தொழிலாளர்களும், லேவாதேவிக்காரர்களால் சுரண்டப்பட்ட போது கூட்டுறவுக் கடன் சங்கங்கள் தோன்ற ஆரம்பித்தன. டென்மார்க் நாட்டு கிராமப்புற குடியானவர்கள் தானிய உற்பத்தியைக் கைவிட்டு விடுமளவு அமெரிக்க நாட்டினின்று இறக்குமதி தானியத்தைக் குவித்து அச்சுறுத்தியபோது அவர்கள் பால்பண்ணைத் தொழிலில் தங்களை ஐக்கியப்படுத்திக் கொண்டு வெற்றி கொள்ளக் கூட்டுறவுப் பால்பண்ணைகள் வழிகாட்டின. இன்று உலகில் 36,00,09,210 உறுப்பினர்களைக் கொண்டு 6,79,725 கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருவது இத்தத்துவத்தின் வெற்றிக்கும் அதனால் பயன்பெறும் மக்களின் ஆர்வத்திற்கும் சான்றாக விளங்குகிறது.

**எழுச்சிமிகு ஏழு தினங்கள்**

இவ்வாண்டு இவ்வார விழாவினை கீழ்க்கண்டவாறு கொண்டாட முடிவு செய்யப்பட்டுள்ளது.

14—11—86 — கூட்டுறவு மக்களாட்சி மற்றும் தலைமைத்திறன் நாள்.

15-11-86 — வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி நாள்.

16-11-86 — புதிய இருபது அம்சத் திட்ட நாள்.

17—11—86 — தொழில் மற்றும் கைத்தறிக் கூட்டுறவு நாள்.

18—11—86 — இளைஞர் மகளிர் மற்றும் நலிந்தோர் நாள்.

19—11—86 — அமைதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு நாள்.

20—11—86 — விற்பனை முறையில் கூட்டுறவின் பங்கு மற்றும் பொது விநியோக முறை நாள்.

**மாநில அளவு விழாக்கள்**

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் மாநில அளவு விழாக் கொண்டாட்டங்களை பல்வேறு மாவட்டங்களில் கீழ்க்கண்டவாறு கொண்டாடுகிறது.

14—11—86 — காமராசர் (சாத்தூர்), செங்கற்பட்டு, கன்னியாகுமரி (தக்கலை).

15—11—86 — சிதம்பரனார் (தூத்துக்குடி), கோவை, புதுக்கோட்டை.

16—11—86 இராமநாதபுரம், நீலகிரி, பெரியார் (கோபி).

17—11—86 — பசும்பொன் முத்துராமலிங்கம் (சிவகங்கை), சேலம், தருமபுரி.

18—11—86 — திருநெல்வேலி, வடஆற்காடு (வேலூர்), மதுரை, திருச்சி கும்பகோணம்.

19—11—86 — தஞ்சை, தென்னாற்காடு (சிதம்பரம்), அண்ணா (திண்டுக்கல்).

20—11—86 — சென்னை.



# அறக்கட்டளை ஆண்டு விழா...

பச்சையப்பன் நினைவு விழா பச்சையப்பன் அறக்கட்டளையின் 144ஆவது ஆண்டு நிறைவு விழா 17.10.86 அன்று மாலை, சென்னை பச்சையப்பன கல்லூரியில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு சென்னை, அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் குழந்தைசாமி தலைமை வகித்து மாணவர்களுக்குப் பதக்கம் மற்றும் பரிசுகளை வழங்கினார்.

விழாவையொட்டி, பச்சையப்பரும் அவரது கல்வி நிலையங்களும் என்னும் தலைப்பில் திரு என.எஸ்.ராமசாமி ஆங்கிலத்தில் எழுதியுள்ள நூலை, பச்சையப்பன் அறக்கட்டளை உறுப்பினர்களில் ஒருவரும், தமிழ்நாடு மாநில வாத்தகக் கழகத்தின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான திரு எஸ்.ஆர். கருப்பண்ணன், இ.ஆ.ப. வெளியிட்டார். நூலின் முதல் பிரதியை அறக்கட்டளையின் மற்றொரு உறுப்பினரும் கல்லூரிக் கல்வி இயக்குநருமான திரு என்.அனந்தபத்மநாபன் பெற்றுக் கொண்டார்.

கல்லூரிகள் தன்னாட்சி நிலை கொண்டதாக இருக்க வேண்டும் என்னும் கருத்தை அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வி.சி.குழந்தைசாமி வலியுறுத்தினார்.

ஆசிரியர்களுக்குச் சமுதாயத்தில் அந்தஸ்தும், மரியாதையும் ஏற்பட, தன்னாட்சி முறைக் கல்லூரிகளால்தான் உதவ முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

கல்விக் கொள்கையும், திட்டத்தையும் யாரோ வகுக்க, ஆசிரியர்கள் பாடம் கற்பிக்க, வினாத்தாளை யாரோ சரிபார்க்க, விடைகளை யாரோ திருத்த, முடிவைப்பல்கலைக்கழகம் மசால்கிறது. இந்த நிலைமாறி, இந்தச் செயல்கள் அனைத்திலும் ஆசிரியர்களுக்கு ஈடுபாடு இருக்கச் செய்ய வேண்டும் என்றும டாக்டர் குழந்தைசாமி வலியுறுத்தினார்.

"நோபல் பரிசுகள் பெறுபவர்களில் பெரும்பாலும் அமெரிக்க நாட்டவர்களாகவே ஏறத்தாழத் தொடர்ந்து உள்ளனர். அமெரிக்க நாடு மட்டும்தான் மேதைகளை உருவாக்குகிறதா? ஆனால் அப்படிப்பட்டவர்களை உருவாக்கக்கூடிய சூழ்நிலையை நாம் பெறவில்லை. புகழ் படைத்த மக்களை உருவாக்கும் சூழ்நிலை நமது நாட்டில் உருவாக வேண்டும்".

பச்சையப்பன் அறக்கட்டளையின் நிறைவு விழா நினைவுப் பேருரையை, போக்குவரத்து ஆணையரும், உலகத் தமிழ்ச் சங்கத்தின் தனி அலுவலரும், பச்சையப்பன் பொறுப்புக் கழக நிர்வாகக் குழுவின் தலைவருமான திரு எஸ். டி. காசிராஜன், ஐ.ஏ.எஸ். ஆற்றினார்.

"பிறர் நலம் பேணி வாழ்ந்த, தன்னலம் கருதாத பெருமகன் வள்ளல் பச்சையப்பன். சமுதாய நலன் கருதித் தான் ஈட்டிய செல்வத்தை அளித்து, மக்கள் கல்வி மேம்பாடு பெறச் செய்து பண்பாடு மிக்க பச்சையபபனின் புகழ், இனிவரும் காலங்களிலும் இனிதே நிலவிடும்" என்பதை அவர் அழகாகவும், ஆணித்தரமாகவும் எடுத்துரைத்தார்.

"சமுதாய மறுமலர்ச்சிக்கும், நாட்டின முன்னேற்றத்துக்கும், தனி மனித மேம்பாட்டுக்கும்" சுவாமி விவேகானந்தர் இளைஞர்களுக்கு அறிவுறுத்திய பொன்மொழிகளை நினைவுபடுத்தி, எதிர்காலத்தில் இளைஞர்கள் ஏற்றம் பெறுவதற்கான வழிவகைகளை எடுத்துச் சொன்னார்.

கல்லூரிக் கல்வி இயக்குநர் திரு அனந்தபத்மநாபன் பேசுகையில், விரைவிலேயே பச்சையப்பன் கல்லூரி தன்னாட்சி பெற்ற கல்லூரியாக ஆக வேண்டும் என்றார்.

அறக்கட்டளை உறுப்பினர்களில் ஒருவரும் தமிழக அரசு சட்டத்துறை இணைச் செயலாளருமான திரு பி.முருகன் வரவேற்றார். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிதி ஆலோசகரும் அறக்கட்டளை உறுப்பினர்களில் ஒருவருமான திரு ஜி.கே. பிச்சாண்டி நன்றி கூறினார்.

## நார் மற்றும் பாய் முடைதல்

தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் கட்டுபாட்டில் தற்போது 56 நார் மற்றும் பாய்முடைவோர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த ஆரம்பச் சங்கங்களுக்கு இரு வழிகளில் உதவும் பொருட்டு மூலப் பொருட்களைப் பெற்றுத் தரவும், உற்பத்தியான பொருட்களுக்கு விற்பனை வசதிகள் அளிக்கவும் ஒரு மண்டல மூலப்பொருட் கிடங்கு ஏற்படுத்த வாரியம் திட்டமிட்டுள்ளது.



# தமிழ்நாட்டில் பனைத்தொழில்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் 31.12.85ஆம் நாளன்று 256 துறை அலகுகளும், 2,966 தொழில் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்படுகின்றன. இதுவரையில் வாரியம் 1,75,630 கைவினைஞர்களுக்கு நிதியுதவி அளித்துள்ளது.

1983-84ஆம் ஆண்டில் கிராமத் தொழில்கள் உற்பத்தி மற்றும் விற்பனை முறையே ரூ. 8,411.79 இலட்சமாகவும், ரூ.9,000.56 லட்சமாகவும் இருந்தன. 1984-85ல் இவைகளின் உற்பத்தி மற்றும் விற்பனை முறையே ரூ. 9,774.இலட்சமாகவும், ரூ.10,583 இலட்சமாகவும் உயர்ந்துள்ளன. 1985-86ஆம் ஆண்டு டிசம்பர் முடிய இவைகளின் உற்பத்தி மற்றும் விற்பனை மதிப்பு ரூ. 8,173 இலட்சமும் ரூ.8,052 இலட்சமும் ஆகும்.

பனை மரங்களிலிருந்து கிடைக்கும் பொருட்களை இயன்ற அளவு பயன்படுத்த செங்கல்பட்டு மாவட்டத்தில் மாதவரம், தர்மபுரி மாவட்டத்தில் மத்தூர், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் மா. புடையூர், வட ஆர்க்காடு மாவட்டத்தில் மங்கலமாமண்டூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் கோவில்பட்டி ஆகிய இடங்களில் பனைப்பொருட்கள் மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் இராமநாதபுரமாவட்டத்தில் மண்டபம் மற்றும் மாரியூரிலும், திருச்சிராப்பள்ளிமாவட்டத்தில் கே. பரமத்தியிலும், அண்ணா மாவட்டத்தில் கோவிலூரிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் அந்தோணியார்புரம் மற்றும் இனாம் தப்தியிலும் செங்கை மாவட்டத்தில் வேடந்தாங்கலிலும் நிறுவ வாரியம் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாட்டில் பனைவெல்லத் தொழில் ஒரு கட்டுக்கோப்பான கூட்டுறவு அமைப்புக்குள் இயங்கிக் கொண்டிருக்கிறது. அடிமட்டத்தில் கிராம அளவில் அமைக்கப்பட்டுள்ள ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களும், மாவட்டஅளவில்மாவட்டப்பனைவெல்லக் கூட்டுறவுச்சம்மேளனங்களும், மாநில அளவில் மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவு இணையமும் உள்ளன. இக்கூட்டுறவு அமைப்புகள் 1960 முதல் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பார்வையின் கீழ் செயல்படுகின்றன.

மாநில இணையம் கதர் வாரியத்தின் மூலம் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவிடம் நிதியுதவியினைப் பெற்று மாவட்டச் சம்மேளனங்கள் மூலமாக ஆரம்பச் சங்கங்களுக்கு வழங்குகிறது. தமிழ்நாடு அரசு, விபத்துக்கு உள்ளாகும் மரம் ஏறும் தொழிலாளர்களுக்கு நிதியுதவி அளிக்கிறது. மரண விபத்துக்கு உள்ளானவரின் குடும்பத்துக்கு ரூ. 5,000 வீதமும், பெரு விபத்துக்கு ரூ. 500 வீதமும், சிறுவிபத்துக்கு ரூ. 100 வீதமும் வழங்கப்படுகிறது.

மாநில இணையம் ஏற்றுமதி வியாபாரத்தையும் செய்கிறது. கூட்டுறவின் கீழ் இத்தொழில் நிலைத்துவேரூன்றிவளர தமிழக அரசின் ஆதரவுடன் ஆங்காங்கே பனைப்பொருள் உற்பத்தி மையங்கள் நிறுவப்படுகின்றன.

இந்தியாவிலுள்ள மொத்த பனைகள் சுமார் 8.59 கோடி; தமிழ்நாட்டிலுள்ள மொத்தப் பனைகள் 5.01 கோடி; தற்போது பயன்படுத்தப்படுபவை 1.01 கோடி; மேலும் பயன்படுத்தத்தகுதியுள்ளவை 2.00 கோடி; பயன்படுத்தத் தகுதி இல்லாதவை 2.00 கோடி.

31-3-86-ன்படி பனைத் தொழில் மூலம் வேலைவாய்ப்புப் பெற்றவர்கள்:

மரம் ஏறும் தொழிலாளர்கள் 1.82 இலட்சம் பேர்; பனை வெல்ல உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பெண்கள் 1.51 இலட்சம் பேர்; பதநீர் விற்பனையாளர்கள் 0.21 இலட்சம் பேர்;பனந்தும்புத் தொழிலாளர்கள் 0.22 இலட்சம் பேர்,;பனை ஓலைத் தொழிலாளர்கள் 0.68 இலட்சம் பேர்; பனைத்தொழில் மூலம் சுய வேலை வாய்ப்புப்பெறும் இதர தொழிலாளர்கள் 0.50 இலட்சம் பேர்; பனைத்தொழில் மூலம் மறைமுக வேலைவாய்ப்புப்பெறுவோர் 0.13 இலட்சம் பேர்; மொத்தம் 5.07 இலட்சம் பேர்.

பனைத்தொழில் மூலம் சுய வேலை வாய்ப்புப் பெறும் பெண்களின் பங்கு 40 முதல் 45 சதவிகிதம்; சுயவேலைவாய்ப்பின் மூலம் ஈட்டிய ஊதியம் ரூ. 2,865.97 இலட்சம்.

1985-86-ல் தமிழ்நாடுமாநிலப் பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம் நேரடியாகப் பனந்தும்பை ஏற்றுமதி செய்து ஈட்டிய அந்நியச் செலாவணியின் மதிப்பு ரூபாய் 77 இலட்சம்.

ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்து விநியோகிக்கப்பட்ட பனைஓலைப் பொருட்களின் மதிப்பு ரூபாய் 5.56 இலட்சம்.

மண்டலப் பனைப்பொருள் பயிற்சி நிலையம், கடலூரில் 1985-86ல் பயிற்சி பெற்றவர்கள் —59 பேர்.

கிராமியப்பனைப்பொருள் உற்பத்திப் பயிற்சித் திட்டங்களின் கீழ் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை 17,373 பேர்.

எதிர்காலத் திட்டங்கள்: (1) மாவட்டந்தோறும் பனைப் பொருள் உற்பத்தி மையங்களை அமைத்தல், (2) பயன்படுத்தப்படாமலுள்ள பயனுள்ள பனைகளைப் பயன்படுத்துதல், (3) பனைவெல்லத்திற்கு ஏற்றுமதி வாய்ப்பினை உருவாக்குதல்; (4)பனைத்தொழிலாளர்களுக்குப் பனைஏற்றுப் பருவமற்ற காலங்களில் சுயவேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல்.



# பசும்பொன்னார் பிறந்தநாள் விழா

30-10-86 அன்று காலை 11.00 மணியளவில், இராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் கிராமத்தில், தேவர் அவர்கள் அடக்கம் செய்யப்பட்ட சமாதியில், மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் திரு டி. இராமசாமி அவர்கள் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

பசும்பொன் கிராமத்தில் அரசு சார்பில் நடைபெறும் தேவர் ஜெயந்தி விழாவில் வணிக வரித்துறை அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இவ்விழாவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர், திரு தேவேந்திரநாத் சாரங்கி அவர்கள் தலைமை தாங்கினார்.

அமைச்சர் அவர்கள் பேசும்போது: "தெய்வத் திருமகன் தேவர் அவர்கள் - வெள்ளையர் ஏகாதிபத்தியத்தை வெளியேறச் சொன்ன தேவர் அவர்கள் - ஒரு பிரிவினருக்கு மட்டுமே சொந்தமல்ல. மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் ஆதிதிராவிடர்கள் உள்ளே நுழைந்து ஆலயப் பிரவேசம் செய்வதற்கு அனுமதி வாங்கித்தந்தவர் தேவர் அவர்கள்தான்.


"வெள்ளையர் ஏகாதிபத்தியத்தைவெளியேற்றுவதற்காகத் தன் சொத்து சுகங்களை இழந்தவர். நல்ல தலைவர்கள் நாட்டிலே மதிக்கப்பட வேண்டும் என்பதால்... தேவர் பெயரால் ஒரு மாவட்டத்தை ஏற்படுத்தித் தந்தவரும், தேவருக்குத் தமிழக அரசு ஒவ்வொரு ஆண்டும் விழாக் கொண்டாட ஏற்பாடு செய்தவரும் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவர் அவர்கள்தான்."





## சென்ற இதழில்

இருபது அம்சத் திட்டப் பணிகளை விளக்கும் ஓவியத்தைச் சென்ற இதழ் (1-11-86) அட்டை அலங்கரித்தது.



கூட்டுறவில் இனிமை உள்ளது. கூட்டுறவாக இருப்பவர்களில் நலிந்தவர்கள் வலியுற்றவர்கள் என்று யாரும் இல்லை. ஒருவர் மற்றவருக்குச் சமம், என்னுடையது, உன்னுடையது என்ற உணர்வே இல்லை. அவ்வாறே ஒரு சங்கம், நாடு, மனித சமுதாயத்தை ஒரு குடும்பமாய் எடுத்துக் கொண்டால் எல்லா மனிதர்களும் கூட்டுறவாளர்கள் ஆவார்கள்.

—மகாத்மா காந்தி

விலைவாசிகள் சீராக அமைய வேண்டியது முக்கியமானது. ஏறுமுகமாகவே இருக்கும் இயல்புடையது பொருளாதார அமைப்பு முழுவதையும் பாதிப்பதால், விலைவாசி நிர்ணயம் மிக முக்கியமானதே. நாம் அடிக்கடி வலியுறுத்தி வருவது கூட்டுறவு இயக்கம்தான். பொருட்களின் விலைகளைச் சீராக வைப்பதில் கூட்டுறவுப் பண்டகசாலைகள் மிக முக்கியமானவையாகும்.

—பண்டித ஜவகர்லால் நேரு





வேளாண்மையின் சிறந்த முன்னேற்றத்திற்குக் கூட்டுறவு அமைப்புகள்தான் பொருத்தமாக உள்ளன. புதிய அறிவியல் முயற்சிகள் வேளாண்மை முறைகளைப் புகுத்தல், கிடங்குகளை அமைத்தல், விற்பனைப் பதப்படுத்துதல், வேளாண்மைத் தேவைகளை விநியோகம் செய்தல் போன்ற பயனுள்ள துறைகளிலும் பெரும்பங்கு ஆற்றிட முடியும். கூட்டுறவுப் பால்பண்ணைகள், சர்க்கரை ஆலைகள் கிராமப் புறங்களில் கூட்டுறவு அமைப்புகளை ஏற்படுத்தும் அனுகூலங்கள் இவையாவும் இத்துறையின் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

—அன்னை இந்திரா காந்தி

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


புதிய வண்ண
துணி வகைகளுக்கு
உள்ளம் கொள்ளை கொள்ளும்
வண்ணங்களிலும் டிசைன்களிலும்
சி:பான், பாலியெஸ்டர், பட்டு
மற்றும் பருத்தி நூல் சேலைகள்
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
DIPR/Efficient

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

